www.padippakam.com



தலித்

ஜூலை 1997

படிப்பகம்

www.padippakam.com

திறந்திருக்கும் ஜன்னல் வழியாக நுழைந்து
எனது கனவுகளின் உலகத்தின்மீது
யாருமே நுழையமுடியாத என் சரணாலயத்தின்மீது
உன்னால் படையெடுக்க முடியாது.

திடீரென எனது படைப்புகளைக் கைப்பற்றி
அவற்றை இரவில் சிதறடித்து பயமுறுத்த முடியாது.
உனது கரிய இறகுகளை விரித்து
எனது வீட்டை மூடிமறைக்க முடியாது
இன்னும் ஈரமாக உள்ள என் சொற்களுக்குள்
ஒரு வலைக்குள் நுழைவதுபோல் நுழைந்து
அவற்றின் சாரத்தை
சந்தேகத்துடன் ஆராய உன்னால் முடியாது.
நான் அழும்போது என்னைப் பார்த்து
ஏளனமாகச் சிரிக்கவோ
உனது மடத்தனமான தவளைக் கூச்சல்களை
என்மீது திணிக்கவோ
என்னை வழிநடத்வோ உன்னால் முடியாது

எனது கழுத்தை நெரிக்கவோ
ஒரு கொள்ளைக்காரனைப்போல்
என் ஆன்மாவைத் திருடிச் செல்லவோ
உன்னால் முடியாது.

நான் எதிர்ப்பேன்.

-ரீட்டா-பௌமி-பப்பாஸ்

அட்டையில் : சர்ரியலிஸ ஓவியர் மீரோ வரைந்த ஓவியம்

படிப்பகம்

www.padippakam.com

"எதிர்க்கிறோம் அதனால் இருக்கிறோம்"

தலித்

1997 2 ஜூலை

நிர்வாக ஆசிரியர்கள்

சி.துரைக்கண்ணு
கு.மு.ஜவகர்

நிர்வாகக்குழு

பொன். நாகப்பன்
எம்.எல்.எம்.காசிம்
பொன். பக்கிரிசாமி
சுந்தர்ராஜ்
கே. ரவிக்குமார்
கே. ராமசாமி
பி. ராமசாமி
சு. வேலு
கே.அன்பழகன்
ராமலிங்கம்
ஜெயராஜ்

தொகுப்பு
தயாரிப்பு
ரவிக்குமார்

தொடர்புகளுக்கு

தலித்
அஞ்சல்பெட்டி : 11
நெய்வேலி-1
607 801.

தெற்கு எரிகிறது. தினம்தினமும் பிணம் விழுந்த செய்திகள் வருகின்றன. வெட்டப்படுகிறார்கள், கழுத்துகள் அறுபடுகின்றன, உடைமைகள் கொளுத்தப்படுகின்றன. எங்களையும் மனிதர்களாக அங்கீகரியுங்கள் என்று கேட்பது தவிர தலித் மக்கள் வேறென்ன தவறு செய்துவிட்டார்கள்?

சாதிவெறியைக் கண்டித்து ஒரு விரலும் நீட்டப்படவில்லை.ஒரு சொல்லும் உதிர்க்கப்படவில்லை. அம்பேத்கர் அஞ்சியது போல இந்திய சுதந்திரம் இந்துக்களின் சுதந்திரம்தான் என்பது நிரூபணமாகிவிட்டது. அம்பேத்கர் காலத்தில் சாதிப்பிரச்சனை உள்ளிட்ட சமூகப் பிரச்சனைகளை காங்கிரஸ் மாநாடுகளில் பேசக்கூடாது. மீறி பேசினால் மாநாட்டு பந்தலை கொத்துவோமென காங்கிரஸ் இந்துக்கள் மிரட்டினார்கள். ஆனால் இன்று வெளிப்படையாக தீண்டாமையை ஆதரித்து எந்தவொரு கட்சியும் பேசமுடியாத நிலை உள்ளது. ஒருவிதத்தில் தலித்துகளுக்கு இது சாதகமான அம்சம். ஆனால், சுயராச்சியத்துக்கான போராட்டத்தின்போது வன்மையோடு தலித் மக்களின் பிரச்சனையை எழுப்ப முடிந்தது.இந்துக்களோடு சிறிய அளவிலேனும் முரண்பட்ட அன்னிய அரசாங்கம் அன்று இருந்தது.அதை நிர்ப்பந்திக்க முடிந்தது.ஆனால் இன்று நிலை அப்படியில்லை.

ஐம்பது ஆண்டுகளாய் இயங்கி வலுப்பெற்றுள்ள இந்து அரசாங்கம் தனதுஅத்தனைகரங்களாலும் தலித்துகளை ஒடுக்குகிறது. ஐநூறு ஆண்டுகள் வரலாறு கொண்ட தனது நாட்டில் கறுப்பினமக்கள் அடிமைகளாய் நடத்தப்பட்டதற்காக மன்னிப்பு கேட்கத் தயாரென அறிவித்திருக்கிறார். அமெரிக்க அதிபர் கிளின்டன். ஆனால் இந்தியாவில் ஆயிரமாயிரம் ஆண்டுகளாய் அடிமைகளைவிடவும் கேவலமாக நடத்தப் படும் தலித் மக்களைப்பற்றி மனசாட்சியோடு யார் சிந்தித்தார்கள்?

இன்று எந்த அரசியல் கட்சியும் தலித்துகளுக்குத் துணைநிற்க தயாராயில்லை. சாதி ஒழிப்பை வலியுறுத்தி இடைவிடாது பிரச்சாரம் செய்த பெரியார் இன்று இல்லை. சாதியை ஒழிக்க முடியாது சாதிகளுக்கிடையே சமத்துவம் ஏற்பட்டால்போதும் என்று கூறுகின்றன. கம்யூனிஸ்ட் கட்சிகள்.இந்த நிலையையே தமிழின இயக்கங்கள் சிலவும் கொண்டுள்ளன. தமிழ்த்தேசப் பொதுவுடைமைக் கட்சி, தமிழ் தமிழர் இயக்கம் போன்றவை கம்யூனிஸ்ட் கட்சிகளின்

படிப்பகம்

www.padippakam.com

நிலையையே வேறு வார்த்தைகளில் கூறுகின்றன. தமிழர் ஒற்றுமையைக் குலைக்க திட்டமிட்டு உண்டாக்கப்படும் சதி என்று நெடுமாறன் கூறுகிறார். பாட்டாளி மக்கள் கட்சியும், திராவிடர் கழகங்களும் ஓரளவு நியாயமான நிலையை மேற்கொண்டுள்ளன. ஆனால் பேச்சளவில் மட்டும்தான் இருக்கிறது அவர்களது நியாயம். செயலூக்கம் கொண்ட நடவடிக்கைகளாய் அவை மாறவில்லை.

மற்றவர்கள் தலித்துகளை ஆதரிக்கவில்லையெனக் குறைபட்டுக் கொண்டிருந்தால் போதாது. தலித்துகளிடையே ஒற்றுமையைக் கட்டவேண்டும். சமீபகால நடவடிக்கைகள் அதைநோக்கி நகர்ந்திருக்கின்றன.

இரட்டை வாக்குரிமை-தனி வாக்காளர் தொகுதி என்ற அரசியல்முழக்கத்தை முன் வைத்து பல்வேறுதலித்இயக்கங்கள்ஒன்றிணைக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் சுதந்திரதினப்பொன்விழா கொண்டாட்டங்களை நடத்தவிடக்கூடாது என்ற அடிப்படையில் ஏறத்தாழ அனைத்து தலித் இயக்கங்களும் இன்று ஓரணியில் திரண்டுள்ளன. இத்தகைய ஒற்றுமையும் சமரசமற்ற போராட்டங்களுமே தலித்துகளின் விடுதலைக்கு வழிகோலும்.

******

சாதிப்பெயர்களை நீக்கிவிடலாம் என கருணாநிதி அரசு சொல்கிறது. பத்திரிகைகள் பலவும் இதையே பிரச்சாரம் செய்கின்றன. ஆனால் தனதுநிலைப்பாட்டில் கருணாநிதி உண்மையோடும் உறுதியோடும் இல்லையென்பதே யதார்த்தம். ஜெயலலிதா பற்றிய பாடமொன்று இடம் பெற்றிருந்ததால். ஆறாம் வகுப்பின் தமிழ்ப் பாடநூல் திருத்தம் செய்யப்பட்டு இந்த ஆண்டு வெளியிடப்பட்டுள்ளது. ஜெயலலிதா பற்றிய பாடத்தை நீக்கிய கருணாநிதி அரசு, முத்துராமலிங்கத்தேவர் பற்றிய பாடத்தை நீக்கவில்லை.பத்து பாடங்கள் மட்டுமே கொண்ட அந்த நூலில் பெரியார் பற்றிய பாடத்துக்கு மூன்றே மூன்று பக்கங்கள். ஆனால் முத்துராமலிங்கம் பற்றிய பாடத்துக்கு ஆறு பக்கங்கள். பாடம் முழுக்க தேவர் என்றே குறிக்கப்பட்டுள்ளது. அது மட்டுமின்றி தலித் மக்களை அரிசனங்கள் என்றே குறித்து எழுதப்பட்டுள்ளது.

சாதி வெறியைத் தூண்டுவதாகவும், பொய்யான தகவல்கள் கொண்டும் அமைந்துள்ள அந்த பாடத்தை உடனடியாக பாட நூலிலிருந்து கருணாநிதி அரசு நீக்கவேண்டும். இல்லாவிடில் அந்தப் பாடநூலை நாடெங்கும் தீயிட்டுக் கொளுத்தும் போராட்டத்தில் தலித் மக்கள் ஈடுபட நேரிடும் என எச்சரிக்கிறோம்.

******

பகுஜன் சமாஜ் கட்சியைச் சேர்ந்த பெண்கள் மற்ற சாதியினரால் கற்பழிக்கப்படுவதாகப் புகார் சொல்லப்படுகிறதே என முலாயம்சிங் யாதவிடம் ஒரு பத்திரிக்கையாளர் கேட்டபோது "இப்படியொரு கேள்வியே எழவில்லை. ஏனென்றால் அவர்கள் அந்த அளவுக்கு அழகானவர்களில்லை" என்று முலாயம் பதிலளித்தார். முலாயம் பேசியதுபற்றி மாயாவதியிடம் நிருபர்கள் கேட்டபோது அவர்கூறிய பதில் : "இப்படிப் பேசுகிறவர்களை செருப்பால் அடிக்கவேண்டும்"

படிப்பகம்

www.padippakam.com

தென்மாவட்டங்களில் சாதிவெறியாட்டம்

கடந்த 3.6.97 மற்றும் 4.6.97 ஆகிய இரு நாட்களில் தலித் கூட்டு நடவடிக்கைக் குழுவின் சார்பில் பாதிக்கப்பட்ட தென் மாவட்டப் பகுதிகள் பார்வையிடப்பட்டது. அதன் அடிப்படையில், இவ்வறிக்கை சமர்ப்பிக்கப்படுகிறது.

- தமிழகத்தில் தாழ்த்தப்பட்டோர் மீதான சாதிக்கொடுமைகள் தொடர்ந்து பல்வேறு வடிவங்களில் நீடித்து வருவது யாவரும் அறிந்ததே. அதனைக் கட்டுப்படுத்திட பிசிஆர் சட்டம். தாழ்த்தப்பட்டோர்-பழங்குடியினர் வதை தடுப்புச்சட்டம் (1989) அதற்கான விதிகள் (1995) போன்றவை இந்திய அரசால் உருவாக்கப்பட்டும்கூட மாநிலஅரசினால் அவை முறையாக நடைமுறைப்படுத்தபடாததனால், சுதந்திர பொன் விழா கொண்டாடும் இந்நேரத்திலும் சாதிவெறி தலைவிரித்தாடுகிறது.

  அன்று தாழ்த்தப்பட்ட ஒருவனை தெருவிலே நடமாட விடாமல் தடுத்த சாதிவாதிகள், இன்று தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த ஒருவனின் பெயர் தாங்கிய பேருந்தை சாலையிலே ஓட விடாமல் தடுத்து சாதிவெறியாட்டம் நடத்தியுள்ளனர்.

- வீரன் சுந்தரலிங்கம் போக்குவரத்துக்கழகம் துவக்கப்பட்டதை எதிர்த்து கலவரம் தூண்டப்பட்டது என்பதுதான் தற்போதைய கலவரத்தின் குறிப்பான காரணம் என்றாலும் பரவலாய் சாதி இந்துக்களிடையே தொடர்ந்து நிலவுகிற ஆதிக்க உணர்வும் சாதிவெறியுமே அடிப்படைக்காரணங்கள் என்பதை அரசு உணரவேண்டும்.

  சாதி இந்துக்களிடையே காணப்படும் இத்தகைய போக்கினை அடக்கி ஒடுக்காத வரையில் இப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வே இல்லை.

- சாதியப் பிரச்சினையை சமூகப் பிரச்சினையாகப் பார்க்காமல் வெறும் சட்டம்-ஒழுங்குப் பிரச்சினையாக பார்க்கும் காவல்துறையின் போக்கே கலவரத்தை மேலும் மேலும் தூபமிட்டு வளர்க்கிறது. அந்த வகையில், காவல்துறையின் அணுகுமுறையால்தான் தென்மாவட்டங்களில் வன்முறை தொடர்ந்து பரவியும் நீடித்தும் வருகிறது.

  கோவில்பட்டியில் துவங்கி கண்டமனூர், துறையூர், சிவகாசி, இராஜபாளையம், மதுரை, தேவதானப்பட்டி என நீண்டு கொண்டிருக்கிற இப்பிரச்சினையில் சாதிவெறியாளர்களை ஊக்கப்படுத்துகிற வகையிலேதான் காவல்துறையின் போக்கு அமைந்துள்ளது என்பது தெளிவாக தெரிய வருகிறது.

- கலவரம் நடந்த அனைத்துப் பகுதிகளிலும் பாதிக்கப்பட்ட தாழ்த்தப்பட்டவர்கள், சாதி இந்துக்களின் கொடுமையைக் காட்டிலும் காவல்துறையின் அடக்கு முறையினாலேயே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது விசாரணையில் தெரிய வருகிறது.

  பெரும்பாலான இடங்களில், தாழ்த்தப்பட்டோர் மீதே கண்ணீர்ப்புகைவீச்சு, தடியடி, துப்பாக்கிச்சூடு போன்ற அடக்குமுறையினை காவல்துறை நடத்தியுள்ளது. மேலும்

படிப்பகம்

சொத்துக்களை இழந்தும் குடியிருப்புக்களை இழந்தும் நிற்கிற தாழ்த்தப்பட்ட மக்களையே பெருமளவில் கைது செய்து பொய் வழக்குகளில் சிறைப்படுத்தியுள்ளது.

- அதே நேரத்தில், தாழ்த்தப்பட்டோரின் சொத்துக்களைக் கொள்ளையடித்தும் குடியிருப்புகளுக்கு தீவைத்தும் கொலை செய்தும் கொடுமைகள் செய்த சாதிவெறியர்கள் மீது, எப்பகுதியிலும் தாழ்த்தப்பட்டோர் வதை தடுப்புச் சட்டத்தின் (1989) கீழ் வழக்குகள் பதிவு செய்யப்படவே இல்லை. முக்கிய குற்றவாளிகள் யாரும் கைது செய்யப்படவே இல்லை.

- பாதிக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உரிய பாதுகாப்பு நடவடிக்கையோ போதுமான நிவாரணப் பணிகளோ ஏதும் வருவாய்த் துறையினரால் செய்யப்படவில்லை. கிராமங்களை விட்டு வெளியேறிய தாழ்த்தப்பட்டவர்களை மீண்டும் அழைத்து வந்து இன்னும் குடியமர்த்தவில்லை. பாதிக்கப்பட்ட பகுதிகளில் உருவான சேதத்தின் மதிப்பீடு முறையாகவும் முழுமையாகவும் செய்யப்படவில்லை.

- கிராமங்களை நோக்கி வருகிற தாழ்த்தப்பட்டோரை விரட்டி விரட்டி இன்னும் கைது செய்யும் நடவடிக்கையில் காவல்துறை தீவிரம் காட்டி வருகிறது. ஆனால், சாதிக்கொடுமைகள் இழைத்தோரை தெருவிலே, உலவ விட்டுக் கொண்டிருக்கிறது. காவல்துறையின் இத்தகைய போக்குதான் தென்மாவட்டங்களில் பதற்றம் நீடிக்கக் காரணமாக உள்ளது.

  தொடர்ந்து தென்மாவட்டங்களில் வன்முறை வெறியாட்டம் நடத்துகிற-சாதிக்கொடுமைகள் இழைக்கிற ஒரு குறிப்பிட்ட சமூகத்தினர் மீது சட்டபூர்வமான நடவடிக்கை எடுக்கவே காவல்துறையினர் தயக்கம் காட்டி வருவதன் விளைவே சட்டம்-ஒழுங்கு சீர்குலைவுக்கு காரணமென்று தெரியவருகிறது.

  மேலும், நடவடிக்கைக்கு மாறாக, அச் சமூகத்தினரின் கறுப்புக்கொடி போராட்டத்திற்குப் பணிந்து புதிய போக்குவரத்துக் கழகத்தை அரசு அறிவித்தது என்பது அச்சமூகத்தினரை மென்மேலும் ஊக்கப்படுத்துவதாகவே அமைந்துள்ளது.

- மாவட்டங்களுக்கு-போக்குவரத்துக் கழகங்களுக்கு தலைவர்களின் பெயர்சூட்டுவது எனும் பெயரால் சாதிய முரண்பாடுகள் கூர்மைப்படுத்தப்பட்டுள்ள நிலையில், தலைவர்களின் பெயர்களை நீக்குவது என்பது வரவேற்க தக்கதுதான் என்றாலும் வீரன் சுந்தரலிங்கம் பெயர் சூட்டியதற்கு கிளம்பிய எதிர்ப்புக்கு பணிந்தே அரசு இம்முயற்சியில் இறங்குவதாக தாழ்த்தப்பட்ட மக்கள் கருதுகின்றனர் ஆனால், சாதிப் பெயர்களை நீக்கும் நோக்கில் அனைத்து தலைவர்களின் பெயர்களையும் நீக்குவதெனில் அம்முடிவுக்கு தாழ்த்தப்பட்ட மக்களிடம் வெகுவான வரவேற்பு உள்ளது.

இந்நிலையில், பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்ததின் அடிப்படையில் கீழ்க்காணும் கோரிக்கைகளை அரசின் முன் வைக்கிறோம்.

படிப்பகம்

www.padippakam.com

கோரிக்கைகள்:

- மதுரை உள்ளிட்ட தென்மாவட்டங்களில் தொடர்ந்து நடந்து வரும் சாதி வெறியாட்டத்திற்கான காரணத்தையும் உண்மைநிலவரங்களையும் கண்டறிய உடனே சி.பி.ஐ விசாரணை நடத்திட அரசு முன்வரவேண்டும்.

- தென்மாவட்டங்களில் நடந்த அனைத்து துப்பாக்கிச்சூடு சம்பவங்களையும் விழுப்புரம் மாவட்டம் கீழ்அருங்குணம், சிறுவந்தாடு ஆகிய பகுதிகளில் நடந்த துப்பாக்கிச் சூடு சம்பவங்களையும் காவல்துறையின் அத்துமீறலையும் கண்டறிய உச்சநீதிமன்ற நீதிபதி தலைமையிலான நீதி விசாரணை நடத்த உத்தரவிடவேண்டும்.

- தென்மாவட்ட கலவரத்தில் பாதிக்கப்பட்ட தாழ்த்தப்பட்டோருக்கு முதலமைச்சர் நிவாரணத்துடன் 1989-ஆம் ஆண்டு சட்டத்தின்படி அனைவருக்கும் இழப்பீடு வழங்க அரசு முன்வரவேண்டும்.

- மேற்கண்ட சட்டத்தின்படி, தாழ்த்தப்பட்டோரின் மீது கொடுமைகள் விளைவிக்கும் சாதிவெறியர்கள் மற்றும் அரசு அதிகாரிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்க அரசுமுன்வரவேண்டும்.

- மதுரை மேலவாசல் பகுதியில் காவல்துறை நடத்திய தாக்குதலில் வீரம்மாள் (23) என்ற பெண்ணும் ஒரு மூதாட்டியும் உயிரிழந்துள்ளனர். அத்துடன் மகேசுவரி (16) என்ற பெண் தாக்குதலின் அதிர்ச்சியில் ஊமையாகியுள்ளார். மேற்கண்ட பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு தாழ்த்தப்பட்டோர் வதை தடுப்புச் சட்டம் 1989ன் படி உரிய இழப்பீடு வழங்கவேண்டும். தாக்குதல் நடத்திய காவல்துறை அதிகாரிகளின் மீது மேற்கண்ட சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்கவேண்டும்.

- மாவட்டம் மற்றும் போக்குவரத்துக்கழகங்களுக்கு பெயர்சூட்டும் பிரச்சினையில் வீரன் சுந்தரலிங்கம் எனும் தாழ்த்தப்பட்டவரின் பெயரைச் சூட்டியதற்கு எதிர்ப்பு தெரிவித்து வெறியாட்டம் போடும் கும்பலை வன்மையாக கண்டிக்கிறோம். இதனைக் காரணம் காட்டி தலைவர்கள் பெயர் நீக்கம் செய்ய அரசு முனைந்தால் அது கண்டனத்திற்குரியதாகும். அதே நேரத்தில், சாதிப்பெயரை நீக்கும் நோக்கில் பெயர்நீக்கம் செய்தால், அனைத்துப் பெயரையும் எடுப்பதில் அரசின் முடிவுக்கு ஒத்துழைப்போம்.

தமிழக முதல்வரிடம் அளிக்கப்பட்டுள்ள இந்த அறிக்கையில் கையெழுத்திட்டுள்ளோர்:

இரா.திருமாவளவன்-(விடுதலைச்சிறுத்தைகள்)
பூ. சந்திரபோசு (தியாகி இமானுவேல் பேரவை)
எஸ்.டி.கல்யாணசுந்தரம் -(தமிழ்நாடு அருந்ததியர் சனநாயக முன்னணி)
அரங்க குணசேகரன் -(தமிழக மனித உரிமைக்கழகம்)
அ.வினோத்-(ஆதித்தமிழர் விடுதலை இயக்கம்)
சி.நிக்கோலசு-(அம்பேத்கர் பேரவை)
அ.ரூபன்ராசு-(ஒருங்கிணைப்பாளர்)

●●●

படிப்பகம்

www.padippakam.com

வரைவு

தி.சுதாகர்த்தக்

அவன் தன் முடிவைப்பற்றி அவளிடம் சொன்னபொழுது அதை ஒரு வகையில் தாங்கிக் கொள்ளக்கூடியநிலையைஅவள்அடைந்துவிட்டிருந்தாள்.அவனோ தன் முறைப்பெண்ணிடம் செல்லும் வழியின் தடத்தில் மனதை அலையவிட்டிருந்தான். அவனின் முகத்தில் அந்த எண்ணமே வழிந்து கொண்டிருந்ததுபோல் அவளுக்குப்பட்டது. தனக்கு நிலையாக எதுவும் கிடைக்காது என்ற சுய சமாதானம் அவளில் உறைந்துபோய்விட்டிருந்தது. அந்த நேரத்தில் அவள் தன் அப்பனைப்பற்றி நினைத்தாள். இத்தனை நாளாக அந்த நினைப்பு எங்கே ஒளிந்து கொண்டிருந்தது என்ற ஆச்சரியம் அவளுள் முகிழ்க்கையில் அவன் சார்ந்த இருப்பு அந்த ஞாபகங்களை மறக்க செய்துவிட்டது என்றே எண்ணினாள். அவன் வெளியே வரவும் இவளும் அவன் கூடவே தயங்கி வந்தவள், வெளியில் ஒரு மரப்பெட்டியில் ஆடுகளை வைத்துக்கொண்டு சென்ற ஒருவனைப் பார்த்தவுடன் அவன் தன்னைவிட்டு விலகிப்போகும் அந்த இறுதிக்கணத்தில் அவன் நினைவு அழிந்து, அந்த ஆடுகளின் கருமை நிறத்தில் பார்வையை ஓடவிட்டாள் தன் அப்பனை நினைத்தவாறு.

அவன் செடிகளுக்கு எரு வைப்பதை தொழிலாகக் கொண்டவன். இதற்காக அவன் பல ஊர்களின் மாட்டுத் தொழுவத்தில் கிடந்தான். அதற்கு கூலியாக அவன் என்ன பெற்றுக்கொண்டான் என்பது அறுதியிட முடியாத விசித்திரமாக இருந்தது. எந்நேரமும் மாட்டுத் தொழுவத்தில் இருந்த அவனின்மீது நல்ல வைக்கோலின் சொணை ஏறிப்போய் கிடந்தது. அவனின் மகிழ்ச்சி செடிகள் வளப்பமாக நிமிர்ந்து வளரும் இளந்துளிர்களில் அடங்கிப்போய் இருந்தது. அவை வளர்கின்ற வரையில் அவன் அவைகளை பாதுகாப்பாக வைத்திருப்பதில் முனைப்பு காட்டுவான். தோட்டமில்லாத குடிசை அவனுடையது, அவனோ மற்றவர்களின் செடிகளைப் பாதுகாத்தான். ஆடுதொடா குச்சிகளால் கூண்டு வரியம் செய்து செடிகளுக்கு தற்காப்பு தருவதில் குறியாய் இருந்தான். இத்தகைய பிழைப்பின் ஊடே அவன் தன் மகளை மறந்துவிட்டான் என்றுதான் சொன்னார்கள். ஆனால் அவன் தன் மகளின் கல்யாணத்திற்காக ஐந்து ஆடுகளை வைத்திருந்தான்.

தெருவில் ருதுவாகி கல்யாணமாகாதவள் தன் மகள் ஒருவள்தான் என்ற சொரணை அவனுக்கு இல்லாமல் இல்லை. வேற்று ஊர்களின் ஆடு பிடிப்பவர்கள் வந்து விலைக்கு கேட்டபொழுதும் அவன் அவர்கள் கேட்ட விலைக்கு தரவே இல்லை. அவர்கள் சொல்லும் விலைப்பணம் சொற்பமாக இருந்ததால் கல்யாணத்திற்கு சரிகட்டுமா என்ற அவநம்பிக்கை அவன் உடல்முழுவதிலும் நுழைந்துவிட்டிருந்தது. தன் கல்யாணம் அந்த ஆடுகளால்தான் முடியும் என்ற நினைப்பில் இருந்த இவள் தனக்கு ஒரு புது உறவு வந்ததும் அந்த ஆடுகள் மரித்து போய்விடுவதற்கான நிஜம் அதன் பின்னால் இருப்பதை அவள் கொடுக்கும் தழை கொத்துகளை தின்றுவிட்டு அவை போட்டிருக்கும் புழுக்கைகளை பார்த்து துயர் கொண்டாள். அது அவளுக்காகவே கலயாணச் செலவை அடக்கிவிடக்கூடிய திண்மையுடன் வளர்ந்து இருப்பதாகவே இருந்தது. ஆட்டுவிலை பேசி ஒவ்வொரு முறையும் தொட்டு தூக்கி விலை சொல்லும்பொழுதும் இவள் அப்பன் மறுத்துவிடும்பொழுதும் அது கொற ஆடாக இல்லாமல் நன்றாகவே வளர்ந்தது. விலை ஆட்டுக்காரன் தொட்டுவிட்டால் ஓங்காது என்பதற்கு நேர் எதிராய் இருந்தது.

இந்த ஆடுகளின் அதிபதி என்கின்ற உரிமையில் இருந்து ஒருநாள் கீழ் இறக்கப்பட்டான். ஆடுகள் திருடுப்போய்விட்டிருந்தது. ஆடுகளை திருடிய அவன் எப்பொழுதாவது ஒரு பருவத்தில் வருவான். அவன் வருகின்ற பருவம் பெரும்பாலும் பயிர்கள் அறுபட்டு உணவுக்கு தயாராகும் தருணமாகவே இருந்தது. பகலெல்லாம் கால்களுக்கு அலைச்சல் கொடுத்துவிட்டு

படிப்பகம்

www.padippakam.com

அது ஒய்ந்த பிறகு நடை தளர்ந்து இரவில் வருவான். வீட்டின் வாசல்களில் இருக்கும் சனங்களை பொருட்படுத்தாமல் எந்த ஒரு வீட்டிலும் சகஜமாய் நுழைவான். அவனை அவர்கள் வேற்று ஆளாகப் பார்க்கத் தெரியாதவர்களாக இருந்தார்கள். அவன் நீண்ட அழுக்கான கம்பளியை அணிந்திருப்பான். அதையும் மீறி அவன் மீது படும்சிக்கு நாற்றம் அடிக்கும் அவனுக்கு அவர்கள் கேட்பதற்கு முன்பே உணவு வகைகளை சூதுவாது தெரியாமல் கொடுத்தார்கள். அவனே சில நேரங்களில் வரப்பில் முளைத்து கிடக்கும் கீரைகளை பிய்த்துக்கொண்டு போய் சமைக்கச் சொல்வான். பெண்களிடம் அவன் அதை கொடுத்து அவர்களை சீண்டிப்பாடுவான். தெருக்களில் நடந்தவாறே.

ஆலக்கீரையை அரிஞ்சிக் கட்டினபோல

ஏலேலே மச்சான் ஏண்டி என் கொழுந்தி-என்

அடிவயித்த பசி நோவுதடா பாவி பய லோவி

இப்படி அவன் பாடுவதை இவளும் பார்த்திருக்கிறாள். அவன் இளிப்பும் ரொம்பவும் கேவலமானது. அவன் பெண்களிடத்தில் தாராளமாகவே வார்த்தையடிப்பான். அவன் வம்பளப்பதை காணும் ஆண்கள் அவனை சில நேரங்களில் வைவார்கள். ஆனால் அவன் யாரையும் பெண்டாண்டவன் இல்லை. எப்பொழுதும் சக்தியை மண்ணில் இறக்கும் சம்சாரிகள் அவனின் விட்டேத்தியான சோம்பல்தனமான திரிநிலையை சாக்கிட்டு

"ஏண்டா ஒயா பண்டத்துல வண்டிமாடு ஏற" இப்படி திரிஞ்சிக்கிட்டு இங்க வாற என்பாகள். ஆனால் அவனோ அதை ஒரு சிரிப்பால் ஏற்றுக்கொள்வான். அவன் தண்ணீரே இல்லாத இடங்களில் அலைந்து திரிந்திருக்கிறான் என்று கூறும்பொழுது அவர்களுக்கு ஆச்சரியமாகவே இருக்கும். "கூடிய வெரசா தண்ணி எங்குமே இல்லாமத்தான் போகப்போகுது" என்று அவன் சொல்வதைக்கேட்டு அவர்கள் பயத்துடன் ஒருவரை ஒருவர் நெருங்கி அணைப்பதுபோல் உட்கார்ந்து கொள்வார்கள். தன்னைப்பற்றி அவன் கூடுதலாக பேரிச்சை மரங்களை எல்லாம் பார்த்தவன் என்ற அந்தஸ்தை அவர்களிடம் பரப்பிவிட்டிருந்தான். தங்கள் கொல்லைகளில் இதுவரையில் பார்த்திராத மரவகைகளை அவன் கண்டிருப்பதாக கூறுவதைக்கேட்டு பேரிச்சை மரத்தின் பழ இனிப்பையும் நினைவையும் கொண்டு அவன் மேல் மதிப்பு வைத்திருந்தார்கள் பிள்ளைகள். அவன் ஈசல்கள் கிளம்பிய ஒரு மாலைப்பொழுதில் தெருவில் எதிர்பட்ட இவன் அப்பனைப் பார்த்து

"அந்த வெடய என்னா ஊறுகாயா போடப்போற எனக்கு கட்டி குடுத்துடேன்" என்றான்.

இவன் அப்பன் "ஏண்டா உன் வெவகாரத்துக்கு மொற ஏதாவது உண்டா" என கோபமாக கேட்க அவனோ "மொறச்ச கழிக்கு மொற ஏது" என்று சந்தோஷம் தொனிக்க சொல்லிவிட்டு நடந்தான். அவன் நினைப்பில் அன்று என்ன ஊறியிருந்தது என்பதை அனுமானிக்க முடியவில்லை. அப்படி அன்று பேசிவிட்டுப் போனவன்தான் ஆடுகளையும் கைப்பற்றிக்கொண்டு போய்விட்டான் ராத்திரியில். ஆடுகள் எங்கே என்று அப்பன் கேட்டதற்கு

"நெகாயா இங்கதான் கட்டியிருந்தேன்" என்று இவள் சொல்லவும், எங்கு தேடியும் ஆடுகள் கிடைக்காததால் அவன் உடம்பு தோலில் துயரம் புகுந்து கொண்டது. முகமோ சவக்களையை பிரதிபலித்தது. அன்று இவனின் முகம் பார்த்து கஞ்சிக்கு உப்பு கேட்கக்கூட இயலவில்லை அவனால். அதன்பின் அவன் செடிகளைப்பற்றிய நினைப்பில்லாமல் இருந்தான். அவன் செடிகளுக்கு வைக்கவேண்டிய எரு முழுவதும் குவிந்து போய்விட்டது. ஊரின் மாட்டுத் தொழுவங்களில் அவனால் செய்யப்பட்ட அந்தத் தொழிலை வேறு யாரும் செய்யாததால் செடிகள் எருவின்றி குட்டையும் குறையுமாக சோம்பி வளர்ந்தது. இவன் மகளின் கல்யாணத்தை நினைத்து உடைந்துபோய்விட்டதால் புதிதான

படிப்பகம்

www.padippakam.com

செடிக்கன்றுகளைக்கூட யாரும் வாங்கவில்லை. எந்த ஒரு புதுக்குழியும் தோண்டப்படவில்லை ஊர்களின் தோட்டங்களில். தன்னைப் பார்க்கும்பொழுது அப்பனுக்கு மிகப்பெரிய துயரம் ஏற்பட்டுக் கொண்டிருப்பதாகவே இவள் உணர்ந்தாள்.தன் கல்யாணத்திற்கு வழி அடைபட்டுப் போய்விட்டது குறித்து அவள் மனம் அலைக்கழிந்து கொண்டிருந்தது. முன்பு போலவே செடிகளுக்கு அவன் எருவைக்க வேண்டும் என்ற எண்ணமும் அவளுள் இழைந்து போய் இருந்தது. தன்முகம் அவன் கண்களில் இருந்து விலகி இருந்தால் அது நடக்கும் என்றே இவளுக்கு தோன்றியது.

தெருவில் முதல் சாணம் தெளிக்கும் சப்தம் தரையில் விழுவதற்கு முன்பே கருக்கலில் ஆடுகள் இன்றி வெறும் புழுக்கை வீச்சம் தங்கியிருந்த அந்த வீட்டிலிருந்து நீங்கியவளாக வெளிவந்தாள். ஒருவரும் தன்னைப் பார்க்கவில்லை என்ற அவளின் எண்ணம் தவறாகியது. இவள் போவதைப் பார்த்தவர்கள் இரண்டுபேர். ஒருவன் சுடுகாட்டின் வெட்டியான், இன்னொருவன் கொமுட்டிப்பழத் தோட்டத்து காவல்காரன். சுடுகாட்டை தாண்டும் பொழுது அவள் நடையின் பரபரப்பில் சலசலத்த ஆலஞ்சருகுகளின் சப்தம் கேட்டு காலைவரையில் தீயில் கருகிக் கொண்டிருக்கும் பிணவாடை கலந்த புகைமூட்டத்தை விலக்கிக்கொண்டு இவள் சரிவில் இறங்குவதைப் பார்த்தான். அவனே இதை அப்பனிடம் கூறவும் செய்வான். அவன்மேல் இவளுக்கு மரியாதை உண்டு. காரணம், வெட்டியான் பெண்பிள்ளைகள் மீது கழிவிரக்கம் உடையவனாய் இருந்தான். இதற்கு மேலும் வெட்டியான் மானஸ்தன் என்று கருகிக்கொண்டிருக்கும் பிணத்திற்குக் கூட தெரியும். பிழைப்புக்காக அசலூருக்கு அறுப்புக்கு சென்ற ஒருத்தி தன் கூலி வெறும் கருக்கா நெல்லாகவும் பதரும் கலந்து இருப்பதற்கு மாற்றுப்படி அளக்கவேண்டும் என்று கங்காணியிடம் கேட்டதற்கு அவனோ கோபம் கொண்டு அவள் உடம்பு துணியை உருவிவிட்டான். அதே கூலியை எடுத்துக்கொண்டு துவரைச் செடிகளின் அடர்த்தியிலும் தாழம்புதர்களின் மறைவிலும் உட்கார்ந்து, உட்கார்ந்து இங்கு வந்தாள். சுடுகாட்டுக்கு அண்மையில் வந்தவுடன் கரம்பாகிக் கிடந்த வெளியில் அவள் உடம்பை மறைக்க எந்த பயிர்களுக்கும் வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. வெட்டியான் தன்னைக்கடந்து ஒரு பெண் இந்தக் கோலத்தில் செல்லக்கூடாது என்று, தன் இடுப்பு வேட்டியை அவிழ்த்து விட்டெறிந்தான். அவனிடம் மேலதிகமாக கோவணத்திற்குக்கூட துணி இல்லாதவன் அன்றைக்கு விழுந்திருந்த பிணத்திற்கு குழிவெட்டியாயிற்று என்று சொல்வதற்கு தெருவுக்கு வந்தவன் ஒதியம் மரச்சிம்புகளால் இடுப்பில் குச்சி வளைத்து அதில் கோவை கொடி தழைகளை முன்னும் பின்னும் நெறுக்கமாக தொங்கவிட்டு கட்டிக் கொண்டு தெருவில் நுழைந்தான். பூதாகாரமான நகை நட்டு பசையுள்ள பெண்களின் கிண்டல்களை புறக்கணித்தான். அநாதைப் பிணங்களிடம் வாய்க்கரிசியும் வாங்காத மனத்துடையவன். இத்தகைய குணமையனால் மற்றவர்களிடம் இருந்து வேறுபட்டு இருந்ததால் பெரிய பத்தாயமும், மரக்கால், கொப்பரைபடி உள்ள மற்றவர்களையும் தவிர்த்து அலட்சியம் செய்து பங்குனி உத்திரத்தில் காவடிகள் புறப்படும் முன் முதல் ஊர்ச்சூடம் கொளுத்தும் தகுதியை அடைந்தான். ஒரு வெட்டியானுக்கு இத்தனை மரியாதையா என்ற திகைப்பு ஒவ்வொரு குடிகளிடமும் இருந்தது. அவனே அப்பனிடம் சொல்லிவிட்டான் அவன் மகள் ஊரை தாண்டிக் கொண்டிருக்கிறாள் என்பதை. ஒரு கல்யாணத்திற்காக பந்தல்கால் நட்டுவிட்டு பழம் வெற்றிலையை தட்சணையாகப் பெற்றுக்கொண்டு வருபவனும் எதிர்பட தன் மகளுக்கு பந்தல்கால் நடுவது என்பது இனி சாத்தியமற்றது என்பது உறைக்க அவன் அழுதான். அவனுக்கு அழவும் தெரியும் என்று அப்பொழுதுதான் எல்லோருக்கும் தெரியவந்தது. அவன் எல்லா வகையிலும் பலசாலிதான். படுப்பதற்கு பெண் துணை இல்லையென்றாலும் கூழ குடித்த தெம்பையெல்லாம் கூத்தியாள்களிடம் இழக்காதவன். இதுவரையில் அவன் கொண்டிருந்த வாழ்பலம் எல்லாம் உதிரத் தொடங்கியிருந்தது. இவள் ஊரைவிட்டு வந்த பின்பு அலங்காரமாக வெறும் பூசணிக்கொடி மட்டுமே படர்ந்து இருந்த தன் கூரை வீட்டு முன்பு அவன் புரண்டு

படிப்பகம்

www.padippakam.com

அழுது கண்ணிலிருந்து தரை மண்ணிற்கு ஈரத்தை கசிய வைத்தான்.

வெட்டியான் பார்த்ததுபோக கொமுட்டிப்பழ தோட்டக் காவல்காரனும் பார்த்தான். நரிகள் செடிகளையும் பழங்களையும் குலைத்துவிடும் என்று விடியலில் விழிப்பாய் இருந்த நேரம். இராச்சோறு இல்லாத அந்த பொறுப்பான காவல்காரன் தெம்மாங்கை பாடிக் கொண்டிருந்தான். வாகை மரத்தில் அமர்ந்திருந்த பட்சிகள் இந்த வேளைகெட்ட வேளையில் தெம்மாங்கா என்றும் அந்த குரலுக்கு எதிர் சப்தம் தேவையில்லை என்று உட்கார்ந்து இருந்தன. அவன் குரல் நிசப்தத்தில் எகிறி காய்த்து இருந்த கொமுட்டிப் பழங்களின் மேல் தோலில் ஒத்தடம் கொடுத்தது. அந்த நேரத்தில்இவள் போவதைப் பார்த்து இரண்டு கொமுட்டிப் பழங்களை பிய்த்து கொடுக்க நினைத்தவன் காய்கள் குறைந்தால் உன் பொண்டாட்டிய என் வீட்டு நார்க்கட்டிலுக்கு அனுப்பேன் என்று குதறும் தோட்டக்காரனின் வசவுக்கு பயந்து நின்றான்.

அவள் பிரிந்துவிட்ட பின்பு கூட வீட்டில் அவள் அப்பன் விளக்கு கூட ஏற்றும் மனம் இல்லாதவனாக இருந்தான். அங்கு இருள்தான் எப்பொழுதும் மண்டிவிட்டதாகிவிட்டது. மண் சுவரில் உள்ள மாடத்தில் இருந்த அகல்விளக்கு ஒளி ஏற்றும் பெண்பிள்ளையின் கைக்காக எதிர்பார்த்துக் கிடந்தது.

குளத்தில் துணியால் மார் முட்டு கட்டி நாட்டு மஞ்சள் அரைத்துக் குளிக்கும் பெண்களின் நடுவில் குளிக்கும் நிலையில் இருந்து பிரிந்துதான் போய்விட்டது அவளின் வாழ்வு. நினைவு வைத்துக் கொள்ள இயலாத இரவும் பகலும் கழிந்திருநதது அவளுக்கு. அவள் உள்ளங்கால்களின் ரேகைகளுக்கு நகரத்தை பார்க்க வேண்டும் என்ற ஆசை ஈடேறிவிட்டது. பரபரப்பான மனித ஊர்தலும் இரைச்சலும் அவளுக்கு அந்நியமான ஒன்றாக இருந்தது. ஒருக்கால் பதினெட்டாம் பெருக்கின் கூட்டமோ என்று நினைத்தவளுக்கு ஆற்றங்கரையும் புதுமணதாலிச்சரடும் இல்லாத பெண்களின் கழுத்தையும் பார்த்தபொழுது மனம் திகிலுடன் வெளிறியது. அந்த சூழல் அவளை எல்லாவற்றையும் உணரவைத்து விட்டது வயிறு உட்பட. இவள் அலங்க மலங்க விழித்துக்கொண்டு நின்றபொழுது அந்த முச்சந்தியில் சாமந்திப்பூ குவியலில் அவன் அமர்ந்து பூ தொடுத்துக் கொண்டிருந்தான். ஒரு ஆண் பூ தொடுப்பதை இப்பொழுதுதான் முதன்முதலாக பார்த்தாள். அவன் குறுக்கே சென்று கொண்டிருந்த மாட்டுவண்டியில் இருந்த நெல்மூட்டைகளின் சிதைந்துபோன சாக்கின் ஓரத்தின் வழியே கீழே விழுந்துகொண்டிருந்த நெல்மணிகளை பூ குவியலில் இருந்துஎழுந்து வந்து பதற்றத்துடன் அவைகளை பொறுக்கி எடுத்து மாடு ஓட்டியிடம் கொடுத்துக்கொண்டிருந்தான். அந்த நேரத்தில் இவளின் நாசியில் நீர் நிறைந்த கழனியின் வாசமும், அந்த சாமந்திப்பூவின் வாசமும் சேர்ந்து நுழைந்து கொண்டிருந்தது. அரிசி உள்ளே இருக்கும் உடைக்காத நெல் இந்த சூழலுக்கு முரணானது என்றும் நெல்லின் வகைகளையும் பற்றி அவன் உற்சாகமாக மாட்டு வண்டிக்காரனிடம் பேசிக்கொண்டிருந்தான். அவனின் பேச்சு மற்ற இரைச்சலையும் சப்தத்தையும் துடைத்தெறிந்துவிட்டது. அதுதான். அவளை அந்த கணத்தில் அவள் மனதில் உறவு நூலை சுற்றச்செய்தது. நின்றுகொண்டிருந்த அவளை அவன் அவளின் நிலையை உணர்ந்தவன் போல் திடீரென்று உபசரித்தும் விட்டான். பூக்களை மடிக்கும் சேம இலையில் கொஞ்சம் சோறு வைத்துக் கொடுத்தான். இடையே அவளைப்பார்த்து சரியாக சொன்னால் அவள் உடம்பில் கண் பதித்து,

“இவ்வளவு தெடமான ஒடம்புவாகு குமருங்க இங்க அளிஞ்சிடுவாங்க” என்றான். இவள் ஏதும் அவளை கேட்கும் முன்பே அவன் கரிசனத்துடன் சொன்னான். அவளின் கண்களில் பூத்திருந்தகுழப்பதைக்கண்டுபயந்தஅவன்அவளை வாழவைத்துவிடவேண்டும் என்ற தீவிரத்துடன்தான் அவளை அங்கு அழைத்துச் சென்றான். அது நாறத்தனமானது

படிப்பகம்

www.padippakam.com

என்பதை அவன் நன்றாக தெரிந்து வைத்திருந்தாள். அவன் பூக்களை குழந்தைகளுக்கும் பெண்களுக்கும் பெரும்பாலும் தானமாகவே கொடுத்துவிடக்கூடியவன். அவளின் வாழ்வை நீட்டுவதற்கு தன்னிடம் கொடுப்பதற்கு ஒன்றும் இல்லை என்றே அங்கு சென்றுவிட்ட பின்பு சொன்னான் குற்ற உணர்ச்சி மேலிட

அந்த இடத்தில் நிறைய வண்ணங்கள் குழைந்த குப்பிகளும் தூரிகைகளும் இருந்தது. செங்காய்மட்டை வண்ணத்தைதான் அதிகம் பார்த்தவள். பல வண்ணகுப்பிகளை பார்த்ததும் அந்த வண்ணங்களில் மனதை லயிக்கவிட்டாள். அந்த வண்ணங்களைக்கொண்டு துணிகளில் நிறைய உருவங்கள். அவளை பார்த்தவர்கள் பேச மறந்தவர்கள்போல் இருந்தனர். முதலில் அவளுக்கு கூச்சமும் வெட்கமும் ஏற்பட்டாலும் அவர்கள் முன் மரத்துப்போய்விட்டதாகவே உணர்ந்தாள். அவளின் செழுமை பொதிந்து வீங்கியிருந்த அங்கங்கள் அவர்களின் கண்களை நிறைத்தது. ஆடை அவிழ்ந்த நிலையில் இருந்த அவளின் மௌனம் சார்ந்த இறுக்கமான பார்வை அவர்களை அயர்ச்சிக்குள்ளாக்கியது. தன் உடல் பற்றி எந்த உணர்வும் இல்லாத ஒரு தளர்ந்த நிலைக்கு வந்துவிட்டிருந்தாள் அந்த நேரத்தில். முகத்தை வரையாமல் விடடு அவளின் அங்கங்களை தீட்டினார்கள். அவன் திரும்பும்பொழுது அவள் உள்ளங்கையில் கொஞ்சம் சில்லரை இருந்தது. தானியங்கள் கொடுத்து பொருட்களை வாங்கிப் பழக்கப்பட்ட அவளுக்கு சில்லரையின் தன்மை தெரியவில்லை.

தனக்கு இங்கு அவன் ஒருவன் மட்டுமே நெருக்கம். அவனைப்பற்றிக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் அவளிடம் திரண்டிருந்தது. பூவின் உதிரி இதழ்கள் சிந்திக்கிடக்கும் தாழ்வாரத்தில் பசலைகொடி படர்ந்திருந்த வீட்டில் அவனுடன் இருந்தாள். அவளின் மனம் தன் பக்கம் சாய்வதை உணர்ந்த அவன் நீர்க்கமாக

"முறைப்பெண் இருக்கு என்றான்" இதை தான் அவளை கைப்படுத்தி விடுவாளோ என்ற அவசரத்தில் சொன்னது இவள் நினைவில் கருண்டு கிடக்கிறது. அப்படி சொன்னானே தவிர அவளின் பொழுதுகளின் தனிமையை உரைவைத்தான். முறைப்பெண் அவனை அவளுடன் மனரீதியாக இடைவெளியே இல்லாமல் இறுக்கி வைத்திருந்தாள். இவளிடம் இருந்து ஏதாவது ஒருநாள் அவன் முறைப்பெண்ணின் கிராமத்திற்கு செல்வான், அது சூரியன் விழுந்துவிட்ட அடுத்த கணத்தின் தொடக்கமாக இருக்கும் முறைப்பெண்ணோ அவனை வாழைத் தோட்டத்தின் வழியே மூங்கில் குத்தின் நிழலுக்கு அழைத்துச் செல்வாள். மூங்கில் குத்தின் நிழலில் அவனை முத்தமிட்டதை இவளிடம் சொல்லியும் இருக்கிறான். இவளுக்கு அந்த முத்தத்தின் சுவை எப்படி இருக்கும் என்ற தவிப்பு பொங்கியது. அது நன்றாக இளசான நுங்கின் சுவைநீர் போல் இருந்திருக்கும் என்று பெருமூச்செறிந்தாள். இதன் வழியாகவே அவளை நினைக்கும்பொழுது எதிர்ப்புணர்ச்சியும் இயலாமையும் முளைவிட முறைப்பெண்ணை "சக்களத்தியா" என்று மனதுக்குள்ளேயே சொல்லிக் கொண்டாள்.

முறைப்பெண் அவன் திரும்புப்பொழுது கோசத்தெருவில் வாங்கிய புதுக்கலயத்தில் கொஞ்சம் தயிரும் அச்சு வெல்லமும் கொடுப்பாள். வாழை மீது பிடிப்பு கொண்டிருப்பவளாகிய அவள் பூவன் பழங்களை எப்பொழுதும் அடுக்களையில் வைத்திருந்தாள்.

வாழைப்பழங்களை கொடுக்கும்பொழுது "புகைபோட்டுதான் பழுக்க வைச்சது" என்று அவன் கேட்காத கேள்விக்கு பதில் சொல்வாள். இப்படி அவனை திங்கடிப்பதில் அவளுக்கு பெரும் மகிழ்ச்சி. எல்லாவகையிலும் அவனைவிட தான் தாழ்வானவள் என்ற எண்ணமே இவளுக்கு ஏற்பட்டது. முறைப்பெண் தன் அம்மாவிற்கு தெரியாமலேயே ஒரு படி மேலேயே நில கூலிகளுக்கு படியளப்பவள் என்ற தாராளம் அவளிடம் இருந்தது என்று அவன் சொல்லவே அவள் மீது இருந்த வெறுப்பு தளர்ந்தது. அவனுக்கு கொடுத்த அச்சு வெல்லத்தில் கொஞ்சம் எடுத்துவந்து இவளிடம் கொடுக்க

படிப்பகம்

www.padippakam.com

"அத்தான் ஆட்டு சாக்கரை

நானும் கொஞ்சம் நக்குறன்" என்றாள்.

முறைப்பெண் பாதுகாப்பாக இருப்பவள், தன்னைப்போல் வரையப்படும் நிலைமை அவளுக்கு உண்டாகாது என்று நினைத்தாள். நேர் எதிராய் வரையப்படும்பொழுது

"முடியை எல்லாம் எடுத்துடு" என்று சொல்வதைத் தாங்கிக் கொள்ளும் வலு முறைப்பெண் போன்றவர்களிடத்தில் இருக்காது . தன்னைப்போல என்ற இறுமாப்பு அவளுக்கு உண்டாகியது. பூக்கள் இங்கு இனி கிடைக்காது என்ற காரணம் காட்டி இவளைவிட்டு பிரிந்து சென்று கொண்டிருக்கும் அவன் எல்லாவற்றையுமே தன்னிடம் இருந்து பிடுங்கிக் கொண்டு சென்றுவிட்டதுபோல் ஆகிவிட்டது.

இன்று வரையப்படும்பொழுது அந்த துணியில் தான் பதிவாகி இருந்ததை ஊன்றிப் பார்த்தாள். இரண்டு உடைந்திராத கொட்டாங்குச்சியை கவிழ்த்து வைத்த மாதிரி இருந்த அவளின் மார்பகங்களை அதில் வரைந்திருந்தார்கள். உலர்ந்த திராட்சையின் நிறம் போல் இருந்த காம்பினையும், ஒரு வில்லை வடிவத்திற்கு படர்ந்திருந்த கருந்திட்டையும் வரைந்திருந்தார்கள். தன் பிளவில் நடுவில் உடைத்த முந்திரியின் இடையில் இருக்கும் மெலிதான கோடு போன்றவற்றையும் நுணுக்கமாக வரைந்திருந்தார்கள். அந்த தூரிகைகள் அவைகளை வரைந்தபொழுது அவளின் தொடை நடுவில் ஊர்ந்து நுழைவது போல இருந்தது. அந்த ஊர்தலில் தான் கன்னி கழிந்து விட்டதாக நினைத்தாள். தொடைகளின் ஓரம் கருப்பு அடித்திருந்ததையும் தீட்டி இருந்தார்கள். வேலிக்காத்தான் நடு மரத்தின் நாரை உரித்துவிட்டது போல் தன் உடலைக்காட்டி கொண்டிருந்த அவளுக்கு தன் உடலில் எந்த அங்கங்களும் இல்லாமல் தட்டையாய் போய்விட வேண்டும் என்று அப்பொழுது நினைத்தாள். அவளை வரைபவர்களின் கண் கூர்மை அவளிடம் பதியும்பொழுது கழுகைபோல் இருந்தது. சிறகு இல்லாத கழுகு. திடீரென்று தனக்கு நரையின் சாயலும் முதுமையும் இந்த நிமிடம் தொட்டு வந்துவிட்டால் தான் வரையப்படுவது நின்று விடுமா என்று அவளால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

அவர்கள் சொன்ன கோணத்தில் நின்று கொண்டிருந்தவளுக்கு வரையப்பட்ட அந்தத் துணி மெல்ல எழும்பி வெளியில் பறப்பதுபோல் இருந்தது. அது பறந்து கொண்டிருப்பதை நகரத்தில் யாரும் கவனிக்கமாட்டார்கள். காற்றின் வேகத்திற்கு அடித்து செல்லும் அது கிராமங்களின் மேல்பறக்கும்பொழுது கவனத்தை கவரும். வயலுக்கு விதைநார்ப்பெட்டியுடன் செல்லும் உழவத்தியின் கண்ணில் பட்டு விதைப்பெட்டியை தவறவிட்டு விடுவாள். கடலோர கிராமம் ஒன்றில் மீன் இல்லாமல் வெறும் வலையுடன் வீடு திரும்பிக்கொண்டிருந்த செம்படவனும் அதைப்பார்ப்பான். அது பறப்பதை பார்க்கும் இளவட்டம் ஒருவன் பெயர் தெரியாத அந்த கிராமத்து வாத்தியக் கருவியை ஏறவாணத்தில் இருந்து எடுத்து ஊதிவிடுவான். அந்த ஓசை பிரபஞ்சத்தின் ஒட்டுமொத்த துயரத்தை காற்றில் ஊதிவிட்டதுபோல் இருக்கும். நெசவு தறிபோட்டுக்கொண்டிருந்த நெசவாளன் பறந்து கொண்டிருக்கும் அந்த துணியையும் அந்த உருவத்தயும் பார்த்து பாதி நெய்துகொண்டிருந்த துணியை எடுத்து அதன்மேல் போர்த்த எம்பினான். அதுவோ வானத்தின் தொடுகோடுகளையும் நீளத்தையும், அகலத்தையும் தொட்டுவிடவேண்டும் என்று மேலே பறந்து கொண்டிருந்தது. குறைந்த பார்வையாளர்கள் சூழ்ந்திருக்க பொம்மலாட்டம் நடத்திக்கொண்டிருந்த ஒருவன் அதைப் பார்க்கையில் அந்தத் துணியில் இருந்து காறி உமிழ்தல் நீர் திவலைகளாக ஒவ்வொரு முகத்திலும் படிந்து விடுவதுபோல் கண்டு பொம்மலாட்டத்தை நிறுத்தினான்.

உளுந்து பயிரு விளைந்து இருக்கும் வரப்புகளில் அமர்ந்து தீட்டாத பச்சை கேழ்வரகு கதிர்களை வைத்துக் கொண்டு காத்திருக்கிறாள் முறைப்பெண். இவளிடம் இருந்து பிரிந்து

படிப்பகம்

www.padippakam.com

சென்றுவிட்ட அவளை புல்லின்மீது படிந்து இருக்கும் பனித்துளியை சுட்டிக் காண்பித்து பரவசம் கொள்வாள். அவள் கண்களில் பறந்து கொண்டிருக்கும் அந்தத் துணி தென்படாது.

பாதி மயங்கிய நிலையில் நின்று கொண்டிருந்தவளுக்கு உண்மையில் அந்தத்துணி பறந்து செல்லாமல் பொருத்தி வைக்கப்பட்ட சட்டத்திலே திருத்தம் செய்து கொண்டிருந்ததைப் பார்த்து வெறுப்பு கலந்த ஆயாசம் ஏற்பட்டது. அவர்களின் வரை கோணத்தில் இருந்து தடுமாறி நின்று கொண்டிருந்தவளை அதிகாரத்துடன் பார்த்த அவர்கள் ஏதோ சொல்ல வாயெடுக்கும் முன்பே பின்புறம் இருக்கும் சுவரில் சாய்ந்து கொள்ளலாம் என்று நினைத்தாள். தற்காலிகமாக அவளைத் தாங்கிக்கொள்ளக்கூடியதாய் இருந்த அந்த கல்சுவருக்கும் இவளின் உடலுக்கும் மத்தியில் இருந்த தூரம் அந்த நேரத்தில் எல்லையற்று நீண்டுகொண்டே இருந்தது.

ஊர்த்தெரு நடுவில் நொத்தப்பட்ட
உள், வெளி வலி மரக்க ஊற்றிக்கொண்ட
தகப்பனின் போதைப் புலம்பலில்
யுகங்களின் வலி வெளிப்படுகையில்
கையாலாகமற் குமையும் இந்த முகத்தில் உள்ளீடும்.....

விழிமலர் விரிப்பில் வீழ்ந்து
கொஞ்சு மொழிப் புதிர்ப்பொருளில் கிறங்கிக்
கிட்டே போகுங்கால்,
பாட்டன் தூக்கிய பீவாளியிலிருந்தொன்று
புறப்பட்டு வந்துப் பொறிகலங்கச் சென்னியிலறைய
நொண்டிப் புறமோடும்
உணர்வு நடுங்கலின் அதிர்வெண்ணும்....

அறிவாயா?
என்னை எழுதும் உரிமை நாட்ட
முண்டா தட்டும் நீ.
சொல்லப் பதிலில்லையெனில்,
தூரமோடிப் போய் விடு
எல்லாத்தையும் பொத்திக்கொண்டு.

படிப்பகம்

www.padippakam.com

பிணத்தின் மேல் இறைக்கப்படும் காசுகளும் திருமணச்சாப்பாடும்

கன்னடம்: அரவிந்த மாளகத்தி

தமிழில்: பாவண்ணன்

எங்கள் ஊரில் செல்வச்செழிப்பு மிக்க குடும்பங்களில் மூன்றுவகையான பிரிவுகள் இருந்தன. முதலாவதாகச் சேட்டுக் குடும்பங்கள். இரண்டாவதாக மராத்திக் குடும்பங்கள். மூன்றாவதாக வீரசைவர்களின் குடும்பங்கள். சேட்டுக் குடும்பங்களின் வேலைகளில் பெரும்பாலும் வீரசைவர்களே மேற்பார்வை பார்த்து வந்தார்கள். மராத்திக் குடும்பங்களில் முஸ்லீம்கள் மேற்பார்வை பார்த்து வந்தார்கள். இந்த மூன்று குடும்பங்களிலுமே, அவரவர்களுக்குள் செல்வச்செழிப்பைக் காட்டிக்கொள்வதில் போட்டி இருந்ததைப்போல் தோன்றுகிறது. காணிக்கைகள் கொடுப்பதிலும் வீடுகட்டுவதிலும் இப்போட்டி வெளிப்படையாகவே தெரியும். இதைத்தவிர இக்குடும்பங்களில் குழந்தை பிறக்கும்போதும் அல்லது யாராவது இறக்கும்போதும்கூட அக்குடும்பங்களின் செல்வச்செழிப்பு புலப்படும். மற்ற குடும்பங்களும் இவர்களைப் போன்ற சம்பிரதாயங்களைக் கொண்டவர்களெனினும் இவர்களைப்போல அவ்வளவு வெளிப்படையாகத் தம் செல்வச்செழிப்பைக் காட்டிக்கொள்வதில்லை. இச்சூழலில் ஊரில் யார் செத்தாலும் எங்களுக்குச் சந்தோஷமாகவே இருந்தது.

அன்று ஒரு வீரசைவரின் வீட்டில் யாரோ இறந்துவிட்டார்கள். பேண்ட் வாத்திய முழக்கங்களோடு பிணத்தைத் தூக்கிக்கொண்டு சுடுகாட்டுக்குச் செல்லும்போது, பிணத்தின்மேல் சில்லறைக் காசுகளை இறைப்பதென்பது ஒரு பழக்கம். அவர்களின் செல்வாக்கைக் காட்டுவதற்கு இது ஓர் அடையாளமாக இருந்தது. யாருடைய வீட்டில் சாவு விழுந்திருக்கிறது, சில்லறைக் காசுகளை இறைத்தபடி சடங்கு செய்யப் போவது யார் என்கிற தகவல்களை என் பாட்டி எந்த மூலையிலிருந்து தெரிந்து கொள்வாளோ, எனக்குத் தெரியாது. எங்களுக்கெல்லாம் ஆதாயம் கிடைக்கக்கூடிய தகவல்களை அவள் எங்களுக்காகச் சேகரித்துக் கொடுத்தாள். பிணம் தூக்கிக்கொண்டு செல்லும்போது அவர்கள் அனைவரும் எங்களை மௌனமாய்க் கவனித்து வந்தார்கள் என்று தோன்றுகிறது. நாங்கள் வந்ததை உறுதிப்படுத்திக்கொண்ட பிறகே அவர்களும் பாடையைத் தூக்க ஆரம்பிப்பார்கள். பிணத்தின் மேல் இறைக்கப்படும் சில்லறைக்காசுகள் கீழே விழும்போது எடுத்துக் கொள்வது தலித்துகள் வேலை. தலித்துகள் இல்லாவிட்டால் அவர்கள் இறைக்கும் சில்லறைக் காசுகளுக்கு என்ன மரியாதை இருக்கிறது? அவர்கள் இறைக்கும் சில்லறைக் காசுகள் பிணத்தின்மேல் விழுந்து கீழே சிதறித் தரையில் உருளும். பாடை சுமந்து செல்பவர்களின் கால்களின் இடையேயும் பின்னால் அழுதபடி வரும் ஜனங்களின் கால்களுக்கு நடுவிலும் அகப்பட்டுக் கொள்ளும். அவர்கள் அதைத் தாண்டி, மிதிப்பதால் வரும் பாவத்திலிருந்து தப்பித்துக் கொள்வார்கள். அவர்கள் அனைவரும் தாண்டிச் சென்ற பிறகு நாங்கள் அதைப் பொறுக்கி எடுத்துக் கொள்வோம்.

வயசான எங்கள் ஆட்கள்கூட, அவர்கள் கடந்து போனபிறகு, எங்களோடு போட்டி போட்டுக்கொண்டு சில்லறைக் காசுகளைப் பொறுக்குவார்கள். வயசில் சிறியவர்களாகிய நாங்கள் வழக்கமான கட்டுப்பாட்டைக் குலைத்து ஓடிச்சென்று பாடையில் இருந்து சிதறி விழும் சில்லறைக் காசுகள் தரையில் விழும் முன்னேயே பிடிப்பதற்கு முயற்சி செய்து

www.padippakam.com

தோற்போம். தரையில் விழும் சில்லறைகளை அவர்கள் தாண்டுவதற்கு முன்பேயே அவர்கள் கால்களின் அருகில் சென்று பொறுக்கி எடுத்துக்கொள்வோம்.

அவர்கள் அனைவரும் செத்துப்போனவருக்கு மிகவும் நெருக்கமானவர்கள். அவர்கள் முகங்கள் துயரத்தால் உறைந்திருக்கும். அச்சந்தர்ப்பத்தில் எங்களை மிரட்டும் உரிமை அவர்களுக்கில்லை. இருந்தாலும் இறுகிய அவர்களின் முகங்களைக் கண்டு நாங்களே எத்தனையோ முறை பயந்து பின்வாங்கி விடுவோம். அகப்படாத சில்லறையை நினைத்துக் கையைப் பிசைந்து கொள்வோம். அவர்களுடைய சிவந்த கண்களைக் காணும்போது ஒருவித பயம் கவியும். அவர்களுடைய கால்களுக்கு அருகில் சென்று குனிந்து விரல்களை நீட்டும்போது அவர்கள் தடுமாறி விழவும் வாய்ப்பு இருந்தது. அப்போது அவர்களின் முகத்திலிருந்த துயரக்களை மறைந்துவிடும். சிற்சில சமயங்களில் எங்களைக் கண்காணிப்பதற்காகவே கையில் கோல் வைத்தபடி ஓர் ஆளை நியமித்துவிடுவார்கள். எங்களுக்கு அந்த இடம் பெரும் போட்டி நிகழும் ஓர் இடமாக இருந்தது. அச்சில்லறைக் காசுகளுக்காக நாங்கள் எங்களுக்குள்ளாகவே அடித்துச் சண்டையிட்டுக் கொள்வோம். இச்சண்டையால் மூக்கு, கண், வாய், பற்களைக்கூட உடைத்துக்கொள்வோம். சிற்சில சமயங்களில் காலால் மண்ணில் குழிதோண்டியபடி செல்லும் காளைபோல பிண ஊர்வலத்தின் பின்னால் செல்வோம். ஊர்வலம் முன்னால் செல்ல, கடைசியில் செல்லும் நாங்கள் எங்களுக்குள்ளேயே சண்டை போட்டுக் கொள்வோம். சில்லறைகளைப் பொறுக்கியபடி வரும் எங்கள் ஆட்கள் சிறியவர்களாகிய எங்களைத் தள்ளித் தள்ளி விடுவார்கள். பொறுக்கிய சில்லறைகளில், கொஞ்சம் திருடியெடுத்து சட்டைக்குள் இருக்கும் கள்ள பாக்கெட்டுக்குள் வைத்துக் கொள்வோம். கால்சட்டையின் இடுப்புப்பட்டிக்கு உள்பக்கம் இதற்காகவே பை வைப்போம். இல்லாவிடில் கீழ்ப்பட்டியில் மடித்துத் தைத்திருக்கும் பகுதியில் சில்லறைக்காக உள்ளே தள்ளும் அளவு தனியே ஓட்டைபோட்டு சில்லறைகளைத் தள்ளிவிடுவோம். அப்புறம் எஞ்சி இருக்கும் சில்லறை நாணயங்களை மட்டுமே பாட்டியிடம் காண்பித்து 'இவ்வளவுதான் கிடைத்தது' என்று பொய் சொல்லிக் கைவிரிப்போம். திருடி வைத்த சில்லறையை வைத்துக்கொண்டு சந்தைக்குச் சென்று வாய்ச் சபலத்தைத் தீர்த்துக் கொள்வோம்.

பிணத்தின் மேல் இறைக்கப்படும் சில்லறைக் காசுகளில் அதிகபட்ச மதிப்புள்ளதென்றால் அது ஐந்து காசு நாணயமாகும். ஓட்டைக்காசும், ஒரு பைசா, இரண்டு பைசாக்களுமே அதிக அளவில் இருக்கும். பெரும்பணக்காரர் எனில் பத்துபைசா நாணயங்களும் இருக்கும். மதிப்பு கூடிய நாயணங்களை மிகக்குறைந்த அளவில் பயன்படுத்துவார்கள். மதிப்புக்கூடிய நாணயங்கள் கிடைக்கும்போது எங்களுக்குண்டாகும் சந்தோஷத்திற்கு அளவே இல்லை. அதற்காகப் பெரிய சண்டையே நிகழும்.

இறந்தவர்கள் வீட்டில் போடப்படும் கருமாதிச் சாப்பாட்டைத்தவிர திருவிழா, திருமணம் ஆகிய சந்தர்ப்பங்களில் போடப்படும் சாப்பாட்டுக்குத் தவறாமல் சென்றுவிடுவதும் இன்னொரு வேலை. திருவிழாச் சாப்பாடாக இருந்தாலும் திருமணச் சாப்பாடாக இருந்தாலும் இரண்டு மூன்று வாரங்களுக்கு முன்பிருந்தே ஆர்வத்தோடு காத்திருக்கத் தொடங்குவோம். அப்படி ஒரு சந்தர்ப்பம் வந்தது. அது சேட்டு ஒருவரின் மகளுடைய திருமணம்.

"ஊருக்கே சாப்பாடு போடறாங்களாம்"

"பூந்தி சாப்பாடு"

"மைசூர் பாக்கு, சோறு குழம்பு"

தினமும் கூழ் குடித்துக் கொண்டிருந்த எங்களுக்கு (எங்கள் சேரியில் எங்கள் வீடே பெரிய வீடாகும். கொஞ்சம் கௌரவத்துக்கும் மரியாதைக்கும் ஆசைப்படுகிறவர்களாக இருந்தார்கள். எங்கள் வீட்டுக்காரர்கள்) வெறும் குழம்புச்சோறே அந்தக் காலத்தில் விருந்துச் சாப்பாடாக

படிப்பகம்

www.padippakam.com

இருந்தது. எங்கள் வீட்டில் தீபாவளிக்கோ அல்லது நாகர் பஞ்சமிக்கோ என்கிற அளவில் ஆண்டுக்கு ஒன்றிரண்டுமுறை மட்டுமே கிடைக்ககூடிய விஷயமாக இருந்தது அது.

சேட்ஜியின் மகளுடைய திருமணத்துக்கு ஊரைச் சுற்றியிருந்த தலித்துகளும் வந்திருந்தார்கள். அதாவது சாப்பாட்டுக்கு. இதனால் அங்கே தலித்துகள் எண்ணிக்கை அதிக அளவில் இருந்தது. சேட்ஜியின் வீடும் சுற்றுச்சுவரும் மிகப்பெரியதாகும். அதற்கு இரண்டு வாசல்கள் இருந்தன. ஒன்று முன்பக்கமும் இன்னொன்று பின்பக்கமும் இருந்தன. என் பாட்டி கொஞ்சம் வாய்த்துடுக்கானவள். பலசாலியும் கூட கோழியைப்போல பேரப்பிள்ளைகளையெல்லாம் கூப்பிட்டபடி இழுத்து இழுத்துத் தன் பக்கத்திலேயே வைத்துக் கொள்வாள்.

சேட்ஜியைப் பார்ப்பதென்பது எங்களைப் பொறுத்தவரையில் கடவுளைப் பார்ப்பது போலாகும். அங்கே மேற்பார்வை செய்பவர்கள் வீரசைவர்கள் என்று முதலிலேயே சொன்னேனில்லையா? அந்த வீட்டில் வேலை செய்யும் இவர்கள் கையில் கோல் வைத்துக்கொண்டு காவலிருந்தார்கள். நாய், பன்றிகளை விரட்டியடிக்கப் பயன்படுத்துவதும் அந்தக் கோல்தான். எங்களை அடித்து விரட்டப் பயன்படுத்துவதும் அந்தக்கோல்தான். ஊர்க்காரர்கள் அனைவரும் சாப்பிட்டு முடித்தபிறகு கடைசியில் தலித்துகளைச் சாப்பிட அனுமதிப்பார்கள்.

“இன்னைக்கு எக்கச்சக்கமா ஜனங்க இருக்காங்க. எப்படிப் பார்த்தாலும் மூணு பந்தி ஆவும்..”என்றாள் பாட்டி. எங்களை விடவும் கீழான இன்னொரு கும்பலும் இருந்தது. அவர்களை இந்த மூன்று பந்திகளில் உட்கார வைக்க முடியாது. அவர்களுக்கு நாங்கள் அனைவரும் உண்டு முடித்த பிறகுதான் சாப்பாடு. அவர்களில் காட்டுவாசிகளும் லம்பாணிகளும் குறவர்களும் அடங்குவார்கள். இவர்களைக் கண்டு நாங்கள் முகம் சுளித்து அருவருப்புக் கொள்வோம். இவர்கள் பிச்சை வாங்கிச் சாப்பிடுவதையே தொழிலாகக் கொண்டவர்கள்.

இப்படிப்பட்ட விருந்துச் சாப்பாடு சமயத்தில் சில கட்டுப்பாடுகளைக் கடைப்பிடிக்க வேண்டும். இந்த விதிகளை வாசலில் காவல் காக்கிறவன் எங்களிடம் சொல்லியபிறகே உள்ளே விடுவான்.

* தட்டில் அதிக அளவு சாப்பாட்டைப் போட்டுக் கொள்ளக்கூடாது.
* எந்த அளவுக்குச் சாப்பிட முடியுமோ, அந்த அளவுதான் போட்டுக் கொள்ளவேண்டும்.
* வீட்டுக்கு எடுத்துச் செல்லக்கூடாது.
* சாப்பிட்டு விட்டுச் செல்லும்போது பாத்திரத்தில் இருக்கும் வர்ணக் கலவையில் கையை விட்டு கலக்கி விட்டுச் செல்லவேண்டும்.

இந்த விதிகள் எதுவும் ஊர்க்காரர்களுக்கு இல்லை. அவர்களுக்கு வாழை இலைபோட்டு பரிமாறுவார்கள். ஒருமுறை சாப்பிட்டுவிட்டுச் செல்லும் தலித் மறுபடியும் வந்துவிடாமல் இருக்கட்டும் என்கிற எண்ணத்தின் அடிப்படையில் தந்திரமாக வர்ணக் கலவைக்குள் கையைவிட்டு கலக்கிய பின்பு செல்லச் சொல்வார்கள். தேர்தல் சமயத்தில் ஓட்டுப் போடும் ஆளின் விரலில் மை அடையாளம் வைப்பதுபோல இதைச் செய்தார்கள்.

இப்படிப்பட்ட விதிகளை மீறுவதில் தலித்துகள் நிபுணர்கள். வர்ணக் கலவையில் கைவிடும் தருணம் வரும்போது, அதிலிருந்து தப்பித்துக் கொள்ள என் பாட்டி வேறு வேறு தந்திரங்களை மேற்கொள்வாள். எப்போதோ ஒருமுறை எண்ணெயைத் தேய்த்துக் கொள்கிற எங்கள் தலைகளில் அன்றைய தினம் விசேஷமாகத் தடவிக்கொள்வோம். சாப்பிட்டு முடித்து வர்ணத்தில் கையை விடும் தருணம் நெருங்கும்போது, சட்டென கையை எண்ணெய்ப் படிந்த

படிப்பகம்

www.padippakam.com

தலையில் முதலில் தேய்த்துவிட்டு அதற்கப்புறம் வர்ணக்கலவை நிரப்பிய பாத்திரத்தில் கையை விடுமாறு என் பாட்டி முதலிலேயே சொல்லி வைத்திருந்தாள். முதலில் வர்ணக் கலவைக்குள் கை வைக்காமல் அப்படியே வெளியேறத்தான் முயற்சி செய்வோம். ஒருவேளை யாராவது பிடித்துவிட்டால் மட்டுமே அந்தத் தந்திரத்தைப் பயன்படுத்துவோம். வெளியே வந்ததுமே கையை சட்டையின் உள் பக்கம் நுழைத்துத் துடைத்துக் கொண்டதுமே வர்ணம் போய்விடும். அதற்கப்புறம் கடைசிப்பந்தியில் சாப்பிட மீண்டும் நுழைந்து விடுவோம். சிற்சில சமயங்களில் அகப்பட்டுக்கொண்டால் கழுத்தைப்பிடித்து வெளியே தள்ளிவிடுவார்கள். அப்போது ஒருவித அசட்டுச் சிரிப்போடும் அல்லது சிற்சில சமயங்களில் அழுதபடியும் வெளியே வருவோம்.

பந்தியில் உட்கார்ந்திருக்கும்போது பரிமாறுபவனைப் பார்த்து பாட்டி சொல்வாள்.

"ஐயா...சாமி... என் பேரப்புள்ளைங்க மெலிஞ்சிபோய் கெடக்குதுங்க...நெதானமா சாப்புடும். இன்னும் கொஞ்சம் போடுப்பா.."

என்று சொல்லி வாங்கிக் கொடுப்பாள். சாப்பிட்டு முடித்த பின்பு வாசலைத் தாண்டுபோது சாப்பாடைத் திருடிச் செல்கிற திருடர்களைப் பிடிப்பதற்காக வந்தவன் தடுத்து நிறுத்தினான் வந்ததுமே எங்களையெல்லாம் தடுத்தான். பாட்டியின் வயிற்றுப் பாகத்தில் புடவை மடிப்பு கொஞ்சம் தூக்கலாக இருந்தது. அதைப் பார்த்ததும் அவன், "ஏ..கெழவி...என்னத்த கட்டிகிட்டு போறே?" என்று கேட்டான்.

"அது ஒன்னுமில்லப்பா..விடுப்பா.." பாட்டி சிரித்துக் கொண்டே சொன்னாள். எங்களையெல்லாம் முன்னால் போகும்படி சொன்னாள். அவன் புடவையைத் தொட வந்தபோது சிறிது குரலை உயர்த்தி "உனக்கென்னய்யா இப்ப..நான்தான் ஒண்ணும் இல்லன்னு சொல்றேனில்ல...முந்தானையை இழுத்துப்புடிச்சி செருகனா அப்படித்தான் தெரியும்.." என்றாள்.

'எடு...பாக்கலாம்" என்று சொன்னபடி அவன் பாட்டியின் புடவையின்மீது கை வைக்கும் முன்னமேயே அவள் தன் முந்தானையைப் பிரித்துக் காட்டினாள். அதற்குள் சாப்பிட்டு முடித்தவர்கள் வாசல்பக்கம் சேரத் தொடங்கிவிட்டார்கள். அப்போது பாட்டி முந்தானையின் ஒரு பகுதியை மட்டும் பிரித்து உதறிக்காட்டியபடி "சாப்பாடு போட்ட புண்ணியவான் எங்கயோ இருக்கறான். இவன் என்னமோ பெரிசா கேக்க வந்துட்டான் பாரு" என்று திட்டிக்கொண்டே வந்தாள். வாசலைத் தாண்டி வெளியே வந்ததும் பாட்டியின் முகத்தில் சிரிப்புப் படர்ந்தது. "நான் ஜெயித்து விட்டேன்" என்ற பெருமை இருந்தது. அவள் முகத்தில் அன்று அவள் மட்டும் சாப்பாட்டை மறைத்து எடுத்துக்கொண்டு வராமல் எங்கள் தலைகளில் அணிந்திருந்த தொப்பிகளின் அடியிலும் மறைத்து எடுத்துவரச் செய்தாள். அவை அனைத்தையும் ஒன்றாகச் சேர்த்துக்கொண்டே "தேட வரான்டா சாமி நீ தின்ன வாடா ராஜா" என்றாள். மழமழவென்று நாங்கள் அடித்துக்கொள்கிற மொட்டையையும் எண்ணெயையும் தொப்பியையும் எப்போதும் மறக்க முடியாது.

(கன்னடப் படைப்பாளிகளில் முக்கியமானவரான அரவிந்த மாளகத்தியின் சுயசரிதையான 'கௌர்மென்ட் பிராமணன்' - நூலின் முதல் பகுதி மட்டும் இங்கே மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. இச் சுயசரிதை 1994-ல் வெளிவந்து பரபரப்பான விவாதத்திற்குள்ளானது. கன்னட தலித் எழுத்துகளில் இச்சுயசரிதை மிகவும் முக்கியமான ஒன்று எனக் கன்னட இலக்கிய விமர்சகர்கள் குறிப்பிடுகிறார்கள். மைசூரில் இயங்கும் குவெம்பு கன்னட ஆய்வு மையத்தில் அரவிந்த மாளகத்தி பேராசிரியராக பணிபுரிகிறார். இரண்டு கவிதைத் தொகுப்புகளும் ஒரு நாவலும் நான்கு நாடகங்களும் நான்கு ஆய்வு நூல்களும் இவரது பிற படைப்புகள். இவை தவிர ஐந்து ஆய்வு நூல்களுக்குத் தொகுப்பாசிரியராக இருந்திருக்கிறார்.)

படிப்பகம்

www.padippakam.com

1.

பொட்டும் பொன்னும் துலங்க
டி.வி.பெட்டிகளிலிருந்தும்
அலங்கார மேடைகளிலிருந்தும்
கண் சிமிட்டுகிறார்கள்
ஸங்கீத, வாத்ய வித்வான்கள்

ஆவ்சர், மேஸ்திரியின் அட்டூழியத்தை
வாட்டசாட்டமான மாடு கேட்கப் புலம்பிக்கொண்டு
சாக்கடை வண்டியடித்துப் போகும் ஆத்தியப்பண்ணனுக்குக்
குடிசையின் வட மூலையில்
கவனிப்பாரற்றுத் தொங்கும்
காவித்துணி மூடிய உறுமியை
நினைக்கவும் எழுத்தில்லை.

2.

நாராயணத் தாத்தாவுக்கப்புறம்
சக்கிலியக்குடியில் இல்லாமலாகிவிட்ட
கட்டை குழல் சொல்லும்
எங்களை முந்தி
எங்கள் கலை செத்துக்கொண்டிருப்பதை.

ம.மதிவண்ணன்

படிப்பகம்

www.padippakam.com

"தேவர் சமூகத்தலைவர்கள் அம்பேத்கருக்கு சிலை எழுப்பவேண்டும்"

டாக்டர் ராமதாஸ் பேட்டி

தென்மாவட்ட கலவரங்கள்குறித்து நடந்த பேச்சுவார்த்தைகள் குறித்து உங்கள் அபிப்ராயம் என்ன?

இரண்டு சமுதாயத்தலைவர்களும் கூடிப்பேசினார்கள். முடிவுகள் முழுமையாகத் தெரியவில்லை. கலவரம் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. வன்முறை வேண்டாமென இருதரப்புத் தலைவர்களும் அறிக்கைவிடுகிறார்கள். ஆனால் வன்முறை தொடர்ந்து நடக்கிறது. தலைவர்களின் கட்டுப்பாட்டில் மக்கள் இல்லையா? அல்லது தலைவர்களே தூண்டிவிடுகிறார்களா? தெரியவில்லை.

அம்பேத்கர் சிலைகள் உடைக்கப்படுகின்றன. அதனால்தான் மீண்டும் கலவரம் மூண்டிருக்கிறது.

ஆமாம். ஆனால் ஏன் வடமாவட்டங்களில் ரியாக்ஷன் இல்லை.ஒற்றுமையில்லாத காரணம்தான். வடமாவட்டங்களில் அதற்கு ரியாக்ஷன் இருந்தால் அரசாங்கம் இப்படி அலட்சியப்படுத்தமுடியுமா? வடமாவட்டங்களில் சில ஆதிதிராவிடர் தலைவர்கள் தங்களைத் தலைவர்களாக சொல்லிக் கொள்பவர்கள் இருக்கின்றனர். அவர்கள் பஞ்சுமிட்டாய்க்குகூட இந்த மக்களை விலைபேசி விற்றுவிடுவார்கள். அவர்கள் ஏன் ரியாக்ட் பண்ணவில்லை.

முத்துராமலிங்கத்தேவர் தமிழ்நாட்டு அளவில் மட்டுமே அறியப்பட்டவர்.அவரை தேசியத்தலைவராகக் கூறுகிறார்கள். ஆனால் தேசியத் தலைவரான அம்பேத்கரின் சிலைகள் உடைக்கப்படும்போது வடமாவட்டங்களில் ஒரு ரியாக்ஷனும் இல்லை. கண்டமனூரில் உடைக்கப்பட்டது 1½ அடி உயரமுள்ள சிறிய சிலைதான். அதன்பிறகுதான் 5 அடி உயர தேவர் சிலையை வைத்து அதை சந்தானம் சென்று பார்த்தார். ஆனால் அந்த ஊருக்குள் நுழையவிடாமல் கிருஷ்ணசாமியை மட்டும் கைது செய்கிறார்கள். இதற்கெல்லாம் வடதமிழ்நாட்டில் பாதிப்பில்லாமல் இருக்கிறது. இங்கே சமரசப் பாதையில் செல்பவர்கள் தலைவர்களாக உள்ளார்கள். வன்னியர் பிரச்சனை வந்தபோது ராமதாஸே தீப்பந்தம் எடுத்துக் கொண்டுபோய் குடிசைகளைக் கொளுத்தியதாகக் கூறியவர்கள், இப்போது எந்த ரியாக்ஷனும் இல்லாமல் இருக்கிறார்கள்.

அனைத்துக்கட்சி கூட்டத்தில் நீங்கள் முன்வைத்த தீர்வு என்ன?

வன்னியர் சங்கபோராட்டத்தின்போதும் அதன்பிறகும் நாங்கள் மேற்கொண்ட காரியங்களை திட்டங்களை எடுத்துக்கூறினேன். வன்னியர்சங்க போராட்டத்தின்போது மூன்று கோரிக்கைகளை நாங்கள் முன்வைத்தோம்.

1. மக்கள் தொகைக்கேற்ப இட ஒதுக்கீடு தரவேண்டும்.

2. வன்னியமக்கள் 20% பேர் உள்ளனர். எனவே 20% இட ஒதுக்கீடு

3. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 18% போதாது அவர்களுக்கு 22% ஆகஉயர்த்தித் தரவேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com

இது 1980ல் போடப்பட்ட தீர்மானம். சில தாழ்த்தப்பட்ட சமூகத்தலைவர்கள் வேண்டுமென்றே தாழ்த்தப்பட்ட மக்களுக்கான 18% ல்தான் ராமதாஸ் பங்கு கேட்கிறார் எனத் தவறான பிரச்சாரம் செய்தனர். போராட்டத்தின்போது சில மோதல்கள் ஏற்பட்டது உண்மை. அப்போது தமிழ்நாடு முழுவதும் கண்டனக் கூட்டங்கள் நடத்தினார்கள். உண்ணாவிரதம் இருந்தார்கள். ராமதாஸே தீப்பந்தம் எடுத்துப்போய் வீட்டுக்கு நெருப்பு வைத்தாரென தவறான பிரச்சாரம் செய்தார்கள்.

நான் சென்னை சவேரா ஓட்டலில் ஒரு கூட்டத்தை ஏற்பாடு செய்தேன். தாழ்த்தப்பட்ட மக்கள் தலைவர்களையெல்லாம் அழைத்தேன்.அழைப்பிதழிலேயே "என்னை விசாரியுங்கள், தண்டனை கொடுங்கள்" என்று அச்சிட்டிருந்தேன். திரு.இளையபெருமாள் வந்திருந்தார். பலரும் வந்திருந்தனர். இளையபெருமாள் அவர்கள் டாக்டர் ராமதாஸ்மீது தப்பில்லையென்று சொன்னார். அந்த டேப் இப்போதும் என்னிடம் உள்ளது. அதோடு மட்டுமின்றி அப்போது கவர்னராயிருந்த அலெக்ஸாண்டருக்கு பத்திரிக்கை மூலம் வேண்டுகோள் விடுத்தேன். இரண்டு சமுதாய தலைவர்களையும் அரசு கூட்டி ஒற்றுமை ஏற்படுத்த வேண்டுமென்று கூறினேன். அதன்பேரில் கவர்னரின் ஆலோசகர் தலைமையில் கோட்டையில் கூட்டம் நடந்தது. அக்கூட்டத்தில் மரியாதைக்குரிய இளையபெருமாள் அவர்கள் கலந்துகொண்டு பேசினார். வீட்டைக் கொளுத்துபவர்களுக்கு தண்டத்தீர்வை விதிக்க வேண்டுமென சொன்னார். நான் பேசும்போது தண்டத்தீர்வை மட்டும் போதாது அப்படி குற்றம் செய்பவர்களுக்கு தூக்குதண்டனை கொடுக்கவேண்டுமென பேசினேன். அன்று ஏற்பட்ட சமாதான ஒப்பந்தத்தில் இரு சமுதாயத் தலைவர்களும் கையெழுத்திட்டனர். அதில் ஒருத்தர் கையெழுத்து போடவில்லை. அவர் வை.பாலசுந்தரம். அவர் வீட்டுக்கு தேடிச்சென்று கையெழுத்து போடக்கேட்டேன்.

அதன்பிறகு வன்னியர் தேவேந்திரகுலத்தார் ஒற்றுமை மாநாடு - ஒரு தாய் மக்கள் மாநாடு என மதுரையில் நடத்தினோம். வன்னியர் அருந்ததியர் ஒற்றுமை மாநாடு ஈரோட்டில் நடத்தினோம்.

வன்னியர் ஆதி திராவிடர் ஒற்றுமை மாநாடுகள் பிரகாஷ் அம்பேத்கரை அழைத்து தர்மபுரி மாவட்டம் அரூரிலும், வேலூரிலும், காஞ்சிபுரத்திலும் நடத்தினோம்.

தஞ்சைமாவட்டத்தில் குடிதாங்கி என்ற ஊரில் பொதுசாலை வழியாக தாழ்த்தப்பட்ட மக்கள் தங்களது பிணங்களை சுமந்து செல்ல முடியாத நிலை இருந்தது. நானே முன்னின்று ஆதி திராவிடர் ஒருவரின் பிணத்தை எடுத்துச் சென்றோம். "வன்னிய விரோதி ராமதாஸ் ஒழிக!" என்று வன்னிய மக்கள் கோஷம் போட்டார்கள். ஆனால் நான் உறுதியாக இருந்து பிணத்தை எடுத்துச் சென்று அடக்கம் செய்தேன்.

இந்த அணுகுமுறையை தென் மாவட்டங்களில் உள்ள சமூகத்தினர் பின்பற்றவேண்டும்.

1992-ல் மதுரையில் இரு சமூகத் தலைவர்களையும் கூட்டி மூன்று மணி நேரத்துக்குமேல் விவாதித்தேன். இரு சமூக ஒற்றுமைக்காக அந்த சமூகத் தலைவர்கள், அரசின் பிரதிநிதிகள், தொண்டு நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் ஆகிய தரப்பினரைக் கூட்டி மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் கலந்து ஆலோசிக்க வேண்டும் என்று பத்திரிகைகளில் அரசாங்கத்துக்கு வேண்டுகோள் விடுத்தேன். அப்போதைய அரசு கேட்கவில்லை.இன்றுள்ள கலைஞர் அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளைப் பாராட்டுகிறேன்.

சமூக நல்லிணக்கம் உருவாகவேண்டுமெனில் முதல்கட்டமாக தேவர் சமூகத் தலைவர்கள் சேர்ந்து அம்பேத்கர் சிலையை நிறுவி முதல்வரைக் கொண்டே திறக்கச் செய்யுங்கள்.

படிப்பகம்

www.padippakam.com

எங்களையும்அழையுங்கள். நல்ல சூழ்நிலை உருவானபிற்பாடு தேவேந்திரகுல மக்கள் தேவர் சிலையை நிறுவட்டும்.

இவற்றைத்தான் நான் பேசினேன். இந்த யோசனைகளைக் கேட்டு சங்கரய்யா மேஜையைத் தட்டி பாராட்டினார்.

போலீஸின் அணுகுமுறையும் கலவரத்துக்குக் காரணம். பொய்வழக்குகள் அரசியல் தலையீடு உளவுத்துறை சரியாக செயல்படவில்லை. இவற்றுக்கும் அப்பால் சில காரணங்கள் உள்ளன.

1. கள்ளச்சாராயம் 2. நகரங்களில் உருவாகிவரும் ரௌடிகள்.

தென்மாவட்டங்களில் வீட்டுக்குவீடு வெடிகுண்டுகள் சாதாரணமாக செய்கிறார்கள். போலீஸால் அதையெல்லாம் தடுக்கமுடியவில்லை. அவர்களுக்கு தெரியாது என்று சொல்லமுடியாது.

பசுபதிபாண்டியன், கிருஷ்ணசாமி இருவரும் ஒருநிலை எடுக்க ஜான் பாண்டியன் அரசாங்கத்தை ஆதரித்துள்ளார். பசுபதி பாண்டியன் நிலையை உங்களது கட்சி ஆதரிக்கிறதா?

நிச்சயமாக. ஜான் பாண்டியன் அறிக்கைவிட்டது மிவும் கேவலமான செயல். இதற்கு உளவுத்துறைதான் காரணம். அவர்களுடைய சூழ்ச்சிதான் காரணம். ஒற்றுமையை உடைப்பதற்கான சதி இது.

துப்பாக்கி லைசென்ஸைப் புதுப்பித்துக் கொள்வதற்காக ஜான்பாண்டியன் இப்படி அறிக்கை விடுவதாகச் சொல்கிறார்கள். எவ்வளவு பெரிய கேவலமிது!

தேவர் சமூகத்தில் உட்பிரிவு சாதிகளைச் சேர்ந்தவர்களையெல்லாம் அழைத்த அரசு இந்தத் தரப்பில் ஒரு பிரிவை மட்டும் அழைத்து தனிமைப் படுத்தியுள்ளதே!

எல்லா பிரிவினரையும் அழைத்திருக்கவேண்டும். சந்திரபோஸின் இமானுவேல் பேரவை, திருமாவளவனின் விடுதலைச் சிறுத்தைகள் எல்லோரையும் அழைத்திருக்கவேண்டும். அனைத்துக்கட்சி கூட்டத்தில் 200 பேர்களுக்குமேல் வந்திருந்தார்கள். 50க்கு மேல் கட்சிகள் உள்ளன. 55-வது ராஜாராம் கட்சி, 56வது பண்ருட்டி ராமச்சந்திரன் கட்சி. இப்படி நாளைக்கொரு கட்சி. ஊர், பேர் தெரியாதவர்களையெல்லாம் அழைத்தவர்கள் முக்கியமான அமைப்புகளை விட்டது சரியல்ல. அவர்கள் அழைக்கப்படாதது நீங்கள் சொல்லித்தான் எனக்குத் தெரியும். நான் காலையிலேயே பேசிவிட்டு சேலம் போய்விட்டேன்.

அரசு எடுத்த நடவடிக்கைகள் தேக்கநிலைக்கு வந்துவிட்டன. கலவரம் தொடர்கிறது. இந்நிலையில் நீங்கள் ஏதேனும் முன்முயற்சி எடுக்க முடியுமா?

தேவேந்திரகுல சமூகத் தலைவர்களைக் கூட்டிப் பேசலாம். நாம் நியாயத்துக்காக செய்கிறோம் என்றாலும் பொதுமக்கள் பாதிக்கக்கூடாது, அவர்களது வெறுப்பை சம்பாதித்துக் கொள்ளக்கூடாது. தமது சமூக மக்களை தமது கட்டுப்பாட்டில் அவர்கள் வைத்துக்கொள்ள வேண்டும்.

தலைவரைத்தேடி ஏமாந்துபோன மக்கள் அவர்கள். கிருஷ்ணசாமியின் நடவடிக்கைகள்கூட எனக்கு ஓரளவு சந்தேகத்தைத்தான் தருகிறது. அவர் அழைத்துள்ள ஆலோசனைக் கூட்டத்துக்கு எங்கள் கட்சி சார்பில் சென்று கலந்துகொள்ளும்படி கூறியிருக்கிறேன். எல்லாத் தலைவர்களும் கலவரப்பகுதிக்கு சென்று வேண்டுகோள் விடுக்கலாம். என்னை தேவர்கள்

படிப்பகம்

www.padippakam.com

ஏற்கமாட்டார்கள். கொடியங்குளம் கலவரத்தின்போது நான்தான் முதலில் சென்று நேரில் பார்த்து சென்னையில் பத்திரிக்கையாளர் கூட்டம் கூட்டி அறிக்கை விடுத்தேன். அதில் தேவர்களுக்கு கோபம். ராமதாஸ் மதுரைக்கு வந்தால் உயிரோடு திரும்பிப் போகமுடியாது என்றெல்லாம் பேசினார்கள்.

கிருஷ்ணசாமிமீது என்ன சந்தேகம்?

சுபவீரபாண்டியனிடம் பேசும்போது சிலவற்றை கூறியுள்ளார். அதில் கொடியங்குளத்துக்கு சுப்ரமணியசாமிதான் முதலில் வந்ததாகக் கூறினாராம். கலவரம் நடந்த மூன்றாவது நாளே நான்தான் போனேன். 5000பேர்களைத் திரட்டி ஊர்வலமாகச் சென்று கவர்னரிடம் மனு கொடுத்தேன். பிரஸ்மீட் நடத்தினேன். கலவரம் நடந்து பலநாள் கழித்துதான் கிருஷ்ணசாமியே போனார்.

கிருஷ்ணசாமி சென்னையில் நடத்திய ஊர்வலத்திலும் கலந்து கொண்டேன். மேடையில் ஏறும்போது ராமதாஸ் வாழ்க என்று யாரோ கோஷம் போட்டார்கள். உடனே கிருஷ்ணசாமி அவரைப்போய் தடுத்தார். ஊர்வலத்தில் வந்தவர்கள்மீது தாக்குதல் நடத்தினார்கள். உடனே கமிஷனர் ராஜகோபாலனைப் பார்த்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொன்னேன். ராயப்பேட்டை ஆஸ்பத்திரிக்கு சென்று பாதிக்கப்பட்டவர்களை பார்த்தேன். ஆனால் கிருஷ்ணசாமி எங்களோடு ஒன்றுபட்டு ஒத்துழைக்கத் தயங்குகிறார்.

இதற்கு அவர்கூட காரணமில்லை. அவருக்கு மணி என்று ஒரு பார்ப்பனர் அட்வைஸராக இருக்கிறார். அவருடைய ஏற்பாடுதான் இதெல்லாம் என்று சொல்கிறார்கள். வன்முறையான வழிமுறைகளை அவர்தான் சொல்லித்தருவதாக அறிகிறேன். கிருஷ்ணசாமியை தவறான பாதைக்கு அவர் இட்டுச்சென்று விடுவார். கிருஷ்ணசாமி அவரை ஒதுக்கிவிட்டு தன்னளவில் சிந்தித்து செயல்பட வேண்டும். அதற்கு எங்களாலான எல்லா ஒத்துழைப்பையும் தருவோம்.

(19.5.97 இரவு 8 மணி-10மணி வரை எடுக்கப்பட்ட பேட்டி இது. குறிப்புகளைக்கொண்டு எழுதப்பட்டது. இத்துடன் ஈழத்தமிழர்குறித்து பேசப்பட்ட செய்திகள் தனிபேட்டியாக தாயகம் இதழில் வெளியாகியுள்ளது)

பேட்டி: ரவிக்குமார், சுகுமாரன்.

சுதந்திரதினப் பொன்விழாக் கொண்டாடுவதைத் தடுக்க அனைத்து தலித் இயக்கங்களின் ஆலோசனைக் கூட்டம்

2.7.1997

காலை 10 மணி

ஆஞ்சநேயா திருமண மண்டபம்

கன்னியாகுளம் சாலை

விழுப்புரம்

படிப்பகம்

www.padippakam.com

சிறைகளும் கைதிகளும்

கிடைக்கின்ற புள்ளிவிவரங்களைக்கொண்டு பார்த்தால் 1993-ன் இறுதியில் இந்தியாவெங்கிலும் மொத்தம் 1155 சிறைகள் உள்ளன என்று தெரிகிறது. அவை பல்வேறு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. மத்திய சிறைகள் (86) மாவட்ட சிறைகள் (252) சப்-ஜெயில்கள்(718) சிறுவர் சீர்திருத்தப்பள்ளிகள் (21) திறந்தவெளி சிறைகள்,முகாம்கள் (21) சிலசிறப்பு நிறுவனங்கள் (46). பெண்களுக்காக பிரத்யேகமாக 11 சிறைகள் உள்ளன. இவற்றில் 1993 இறுதிவரையிலான தகவலின்படி மொத்தம் 1,96,240 கைதிகள் இருந்தனர். அதில் 1,90, 939 பேர் ஆண்கள், 5301 பேர் பெண்கள். மொத்த கைதிகளில் 1,37,838 பேர் தண்டனை வழங்கப்படாத விசாரணை கைதிகள் ஆவர்.

நீதிபதி-முல்லா கமிட்டி அறிக்கையின்படி சிறைவாசிகளில் பெரும்பாலோர் சமூகத்தின் அடித்தட்டுப் பகுதியிலிருந்து வந்தவர்கள் அதிலும் குறிப்பாக கிராமங்களைச் சேர்ந்த விவசாயத் தொழிலாளிகள். பெரும்பாலோர் சிறு குற்றங்களுக்காக சிறையில் அடைக்கப்பட்டவர்கள்.

கைதிகளின் உரிமைகள்:

சிறையில் அடைக்கப்பட்ட காரணத்தால் கைதிகளுக்கு மனித உரிமைகளை யாரும் மறுத்துவிட முடியாது. மனித உரிமைகள் உயிர் வாழ்வதோடு சம்பந்தப்பட்டவை. அவை சுதந்திரத்தோடு மட்டுமே உறவு கொண்டவை அல்ல.

சார்லஸ் சோப்ராஜ் Vs திஹார் வழக்கில் (AIR 1978 SC 1514) உச்சநீதிமன்றமளித்த தீர்ப்பில் சுதந்திரமான குடிமகனைப் போன்றே அனைத்து உரிமைகளும் கைதிகளுக்கும் உண்டு எனக் கூறப்பட்டுள்ளது. சுனில் பத்ரா வழக்கில் (AIR 1980 SC 1579) எந்தவொரு கைதிக்கும் உரிமைகளை மறுக்கக்கூடாது எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. வெளி உலகோடு சிறைக்கைதிகளின் தொடர்பு துண்டிக்கப்படுவதாலும் உறவினர்கள் நண்பர்கள் எவரோடும் தொடர்பு கொள்ள முடியாத நிலையினாலும், தனது சாதாரண தேவைகளுக்கும்கூட அரசாங்கத்தை சார்ந்திருக்க வேண்டியிருப்பதாலும் அவர்களுக்கு பிரத்யேகமான பாதுகாப்பு கொடுப்பது அவசியமாகிறது. அவர்கள் கௌரவமாக நடத்தப்படுவதும் முக்கியமானதாகும்.

1955ஆம் ஆண்டில் குற்றங்களைத் தடுப்பதற்கும் கைதிகளை நடத்தும் முறைகளை தீர்மானிப்பதற்கும் கூடிய ஐ.நா.சபையின் முதல் மாநாட்டில் கைதிகளை நடத்தும் குறைந்தபட்ச வரைமுறைகள் தீர்மானிக்கப்பட்டன. இது கைது மற்றும் சிறைவாசத்துக்கு எதிராக பொருளாதார மற்றும் சமூக கவுன்சிலால் அங்கீகரிக்கப்பட்டது. அனைத்து வகையிலான கைது மற்றும் சிறைவாசத்துக்கு எதிராக அனைத்து நபர்களையும் பாதுகாக்கின்ற சட்டதிட்டங்களை ஐ.நா. சபையின் நாற்பத்து மூன்றாவது கூட்டம் வடிவமைத்தது. சித்ரவதைகளுக்கும் குரூரமான, மனிதத்தன்மையற்ற தண்டனை முறைகளுக்கும் எதிராக 1984ல் நிறைவேற்றப்பட்ட ஐ.நா. சபையின் தீர்மானம் சிறைக்கைதிகளின் உரிமைகளைக் காக்கும் முக்கியமான ஒன்றாகும். சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் பற்றிய சர்வதேச

படிப்பகம்

www.padippakam.com

ஒப்பந்தம் (Covenant) சிறைவாசிகளின் உரிமைகள் குறித்து நேரடியாக எதையும் பேசவில்லையென்றபோதிலும் அதுபற்றி சில வரையறைகளைச் செய்துள்ளது.

இந்திய அளவில் பார்த்தால், அரசியலமைப்பு சட்டத்தின் மூன்றாவது பிரிவில் உள்ள அடிப்படை உரிமைகள், 1894ஆம் வருடத்திய சிறைக்கைதிகள் சட்டம், சிறைக்கையேடுகள் ஆகியவை சிறைவாசிகள் எவ்வாறு நடத்தப்படவேண்டும், என்பது பற்றிய விதிமுறைகளைக் கொண்டுள்ளன. அவ்வப்போது. பல்வேறு உயர்நீதிமன்றங்கள் மற்றும் உச்சநீதிமன்றம் ஆகியவை வழங்கும் தீர்ப்புகளும் இதுபற்றிய வரையறைகளையும் விளக்கங்களையும் எடுத்துரைத்து வருகின்றன.

சித்ரவதை, குரூரமான மனிதத்தன்மையற்ற இழிவுபடுத்தும் செயல்கள்:

கைதிகள் உடல்ரீதியாகவும், உளவியல்ரீதியாகவும் சித்ரவதை செய்யப்படுவது பற்றி ஏராளமான புகார்கள் வருகின்றன. சிறைகளில் இத்தகைய சித்ரவதை எந்த அளவுக்கு உள்ளது என்பது பற்றிக் கணக்கிடுவது சிரமமான காரியமாகும். சிறைவாசிகள் தங்களது குறைகளை எடுத்துச் சொன்னாலோ, தங்களது உரிமைகளைக் கேட்டாலோ அதற்குச் சிறை அதிகாரிகள் தருகிற பதில் வன்முறை அல்லது சித்ரவதை. சிறைகளைத் தகர்க்க நடந்ததாகக் கூறப்படும் எந்தவொரு முயற்சியும் மிகக் கடுமையாக அடக்கி ஒடுக்கப்பட்டுள்ளது. தனிமைச்சிறையில் அடைத்தல், சிறைவாசிகளைப் பட்டினி போடுதல், சரியாக சாப்பாடின்றி வருந்தச் செய்தல், (fettering) பெண் கைதிகளை ஆபாசமான வார்த்தைகளால் திட்டுதல், அவர்களுக்கு அத்தியாவசியமானவற்றை தர மறுத்தல், அவர்களுக்கு அந்தரங்கத்தை மறுத்தல் போன்றவையும் இதுபோல இன்னும் பலவும் சிறைவாசிகளுக்கு இழைக்கப்படுகின்றன.

1955ல் டெல்லி உயர்நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்த வழக்கொன்றில் ஹரியானா மாநிலம் குர்கோன் சிறையின் ஜெயில் சூப்பரின்டென்டன்ட் U.S.யாதவ் என்பவர், கொலை வழக்கொன்றின் விசாரணைக் கைதியான சத்பால் என்பவர் தனக்கு லஞ்சம் தர மறுத்ததால் அந்தக் கைதியின் முதுகில் பழுக்கக் காய்ச்சிய இரும்புத் தடியால் "U.S.யாதவ்" என்று தனது பெயரை சூடு போட்டு பொறித்த கோரம் தெரியவந்தது.

சிறைகளில் மரணம்:

இந்திய சிறைகளில் ஏராளமான சிறைவாசிகள் சித்ரவதையாலும், பட்டினியாலும், சரியான சுகாதாரவசதிகள் இல்லாததாலும், அடி உதைகளாலும் இறந்துபோகின்றனர். முந்தைய ஆண்டோடு ஒப்பிடுகையில் 1995ல் சிறைகளில் ஏற்பட்ட சாவுகளின் விகிதம் 300% அதிகரித்துள்ளது. இந்திய மனித உரிமை ஆணையம் (NHRC) அமைக்கப்பட்டு தகவல்கள் சேகரிக்கும் விதத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் காரணமாகவே இந்த விவரங்கள் வெளியே தெரியவந்துள்ளன. போலீஸ் லாக்-அப்களில் மரணம் சம்பவித்தால் அதுபற்றி விசாரணை நடத்தப்பட வேண்டுமென்பது கட்டாயமான விதியாக இருப்பதுபோல சிறையில் நிகழும் மரணங்களுக்கு விசாரணை செய்யவேண்டுமென்பது கட்டாய விதியாக இல்லை.

இந்திய மனித உரிமைகள் ஆணையத்தின் (NHRC) தகவல்களின்படி பீகார் மாநில சிறைகளில்தான் இந்தியாவிலேயே அதிகமாக சிறைக்கைதிகள் செத்துப்போகின்றனர் இதுபற்றி முழுமையான விசாரணையொன்றினை நடத்த வேண்டுமென பீகார் முதலமைச்சரை மனிதஉரிமைகள் ஆணையத்தின தலைவர் அறிவுறுத்தியுள்ளார்.

படிப்பகம்

www.padippakam.com

1995 செப்டம்பர் வரை பீகாரின் சிறைகளில் 34 பேர்களும் டெல்லி சிறைகளில் 31 பேர்களும் கொல்லப்பட்டுள்ளனர். 42 விசாரணைக்கைதிகள் உட்பட 49 பேர்கள் திஹார் சிறையில் செத்துப் போயுள்ளனர். இந்த விபரம் பாராளுமன்றத்திலேயே தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் ஏழுபேர்கள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். ஒருவர் அடித்துக் கொல்லப்பட்டார். 17 பேர்கள் காசநோயால் செத்தனர். 24 பேர்கள் மற்ற நோய்களால் செத்தனர்.

சிறைகளின் நிலை:

சிறைவாசிகளின் கல்வி,அந்தஸ்து போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு கைதிகள் முதல்வகுப்பு இரண்டாம் வகுப்பு என இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளனர்.

ஒரிஸ்ஸாவில் உள்ள 66 சிறைகளில் ஏழாயிரம் பேர்கள்தான் அடைக்கப்படவேண்டும். ஆனால் அவற்றில் ஒன்பதாயிரம் பேர்கள் அடைக்கப்பட்டுள்ளனர். 25 ஆயிரம் பேர்களை அடைப்பதற்கான பீகார் சிறைகளில் 37 ஆயிரம்பேர்கள் அடைக்கப்பட்டுள்ளனர். பம்பாயில் 803 பேர்களுக்கான சிறையில் இரண்டாயிரத்துக்கும் அதிகமான கைதிகள் உள்ளனர். மகாராஷ்டிர மாநிலத்தில் 15 ஆயிரம் பேர்களுக்கான சிறையில் 22 ஆயிரம் பேர்கள் அடைக்கப்பட்டுள்ளனர். தமிழ்நாட்டில் 8 மத்திய சிறைகளும் 122 சப் ஜெயில்களும் உள்ளன. இவற்றில் 1991-92 புள்ளிவிவரத்தின்படி 18228 கைதிகள் இருந்தனர். இதில் 3272 பேர்கள் தண்டனையெற்ற கைதிகள் 1781 பேர் விசாரணைக் கைதிகள், 5128 பேர் விசாரணையை எதிர்நோக்கியுள்ள ரிமாண்டு கைதிகள், ஆசியாவிலேயே பெரிய சிறைகளில் ஒன்றான திஹார் சிறையின் கொள்ளளவு 2500 பேர்கள்தான்.ஆனால் அதில் 8970 பேர் அடைக்கப்பட்டுள்ளனர்.

சிறைகளில் காணப்படும் இந்த இடநெருக்கடிக்கு பல்வேறு காரணங்கள் உள்ளன. விசாரணை ஆரம்பிப்பதில் காணப்படும் மிக மோசமான தாமதம். முக்கியமான காரணமாகும். தேசிய போலீஸ் கமிஷன் 60% கைதுகள் தேவையற்றவை, அநீதியானவை எனக் குறிப்பிட்டுள்ளது. இட நெருக்கடியைத் தவிர்க்க விசாரணையை விரைவுபடுத்துவதும், வெறும் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்வது போன்ற செயல்களை நிறுத்தி கைதுகளைக் குறைப்பதும் முக்கியமானதாகும்.

விசாரணைக் கைதிகள்:

இந்திய சிறைகளில் காணப்படும் இடநெருக்கடிக்கான காரணங்களில் விசாரணைக் தைதிகளின் எண்ணிக்கை முக்கியமானது. விசாரணையின்போது அவர்கள் நீதிமன்றங்களுக்கு வரவேண்டுமென்பதற்காகவே அவர்கள் சிறைப்படுத்தப்பட்டுள்ளனர். ஆயிரக்கணக்கில் கைது செய்யப்பட்டுள்ள அவர்களில் பெரும்பாலோர் வெறுமனே சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டவர்கள். அல்லது . மிகச் சாதாரண குற்றங்களுக்காக கைது செய்யப்பட்டவர்கள் அதற்காக பலகாலமாய் சிறைக்கொட்டடிகளில் அடைபட்டுக் கிடப்பவர்கள். பெரும்பாலான விசாரணைக்கைதிகள் சமூகச் சூழ்நிலையால் கைதியானவர்கள். அவர்கள் செய்த குற்றங்களுக்கான தண்டனைக்காலத்தைவிடவும் விசாரணைக் கைதிகளாக அவர்கள் அடைபட்டிருக்கும் காலம் பலநேரங்களில் அதிகமாகிவிடுவதுண்டு. திஹார் சிறையின் இன்ஸ்பெக்டர் ஜெனரலாக இருந்த R.K..ஷர்மா திஹார் சிறையில் உள்ள கைதிகளில் 90% பேர் விசாரணைக் கைதிகளென குறிப்பிட்டுள்ளார். பல கைதிகள்; ஜாமீன் வாங்க பணம் இல்லாததால் சிறையில் வாடுகிறார்கள். ஜாமீன் வழங்கும் முறையும் குறைபாடுடையதுதான். பணத்தின் அடிப்படையிலேயே ஜாமீன் தரப்படுகிறது. குற்றம் சாட்டப்பட்டவர்கள் பிணையாக

படிப்பகம்

www.padippakam.com

சொத்துப் பத்திரங்களைத் தரவேண்டுமென நீதிமன்றங்கள் வற்புறுத்துகின்றன. இது ஏழைகளுக்கு எதிராக செயல்படுகிறது.

மிக மோசமான உதாரணமாக ஒரு வழக்கைக் குறிப்பிடலாம். கல்கத்தாவில் உள்ள பிரசிடென்ஸி சிறையில் 1995 நவம்பரில் தெரியவந்த ஒரு வழக்கில் ஒரு கைதி 33 ஆண்டுகளாக விசாரணைக் கைதியாகவே அடைக்கப்பட்டிருந்த கொடூரம் வெளிவந்தது. 1962 ஜுலை மாதம் சிறையில் அடைக்கப்பட்ட அஜாய் கோஷ் அப்போது அம்னீஷியாவால் பாதிக்கப்பட்டிருந்தாரென மருத்துவர்களின் அறிக்கைகள் கூறியுள்ளன. 1983-ல் ஒரு வழக்கறிஞர் தற்செயலாகக் கண்டு சொல்லும்வரை அவரைப்பற்றி இந்த உலகம் மறந்துவிட்டது. அதன்பிறகு மனித உரிமை அமைப்பான APDR முன் முயற்சியால் அவரது வழக்கு 1983ல் மீண்டும் பரிசீலிக்கப்பட்டது. நீதிமன்றம் ஒரு மனோதத்துவ மருத்துவரை நியமித்து அஜாய் கோஷை பரிசோதிக்கச் செய்தது. அந்த மருத்துவரின் அறிக்கை அஜாய் கோஷ் மனப்பிறழ்வு நோயால் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் அதை குணப்படுத்திவிடலாமெனவும் தெரிவித்தது. ஆனால் மேற்கு வங்க அரசு நீதிமன்றப் பரிந்துரையையும், மருத்துவரின் அறிக்கையையும் உதாசீனப்படுத்தி ஒதுக்கிவிட்டது. அஜாய்கோஷ் பிரசிடென்ஸி சிறையின் ஒன்பதாம் எண் கொண்ட கொட்டடியில் இப்போதும் அடைபட்டுக் கிடக்கிறார்.

30 விசாரணைக் கைதிகள் ஏழு ஆண்டுகளுக்கும் மேலாக சிறையில் அடைபட்டிருந்த சம்பவம் இன்னொரு மோசமான உதாரணமாகும். அவர்கள் செய்ததாகக் கூறப்பட்ட குற்றத்தின் தண்டனை காலத்தைவிடவும் அவர்கள் விசாரணைக் கைதியாக அடைபட்டிருந்த காலம் அதிகம். பம்பாய் உயர்நீதிமன்றத்தின் டிவிஷன்பெஞ்ச் அந்த கைதிகளை உடனடியாக விடுவிக்க உத்தரவிட்டது. டைம்ஸ் ஆஃப் இந்தியா நாளேட்டில் வந்த செய்தி ஒன்றை ரிட் மனுவாக ஏற்றுக்கொண்டு உயர்நீதிமன்றம் அந்த உத்தரவை 1995ல் பிறப்பித்தது. தீர்ப்பு வழங்கும்போது பம்பாயின் பிற பகுதிகளில் இருந்த 5000 விசாரணைக் கைதிகளின் வழக்குகள் பற்றிய விவரங்கள் குறித்து அறிக்கையொன்றை சமர்ப்பிக்கும்படி சிறையின் இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்கு நீதிபதி உத்தரவிட்டார்.

விசாரணைக்கைதிகள் தவிர மனநோயாளிகள் பலரும் இந்திய சிறைகளில் அடைபட்டுள்ளனர். மருத்துவமனைகளில் சேர்க்கப்படவேண்டிய அவர்களை சிறையில் அடைத்துள்ளனர்.

இந்தியாவில் ஏறக்குறைய எல்லா சிறைகளிலும் ஊழல் மோசமான அளவில் காணப்படுகிறது.

1995 பிப்ரவரி மாதத்தில் கல்கத்தாவின் மித்னாபூர் சிறையிலிருந்து ஜெயில் வார்டர்களால் திருடிக் கடத்தப்பட்ட ஏழு லட்ச:ருபாய் மதிப்புள்ள பொருட்கள் கைப்பற்றப்பட்டன. சிறைக்குள் செல்லும்போது கைதிகளிடமிருந்து கைப்பற்றப்படும் அவர்களது உடமைகளை ஜெயிலர்கள், சட்டத்துக்குப் புறம்பாக பங்கிட்டுக் கொள்கின்றனர். ஜெயில் அதிகாரிகள் திஹார் சிறைக்குள் போதை மருந்துகளைக் கடத்திச் சென்று விற்பனை செய்த சம்பவம் ஒரு மோசமான உதாரணமாகும். இது தொடர்பாக 1995-ல் ராம்சந்தர் என்ற ஜெயில்வார்டர் கைது செய்யப்பட்டார்.

கைதிகள் பலவந்தமாக கடினஉழைப்பில் ஈடுபடுத்தப்படுகின்றனர். அவர்களுக்கு நியாயமான கூலி தரப்படுவதில்லை. இது கொத்தடிமைத்தனத்துக்கு நிகரானதாகும். வேலை

படிப்பகம்

www.padippakam.com

செய்வதற்காக சிறுவர்களை சிறைகளில் பிடித்து வைத்திருக்கும் சம்பவங்களும் நிறைய உள்ளன.

சிறைகளைப் பற்றிய பல்வேறு கமிஷன்களும் கைதிகளுக்கான உணவின் அளவு தரம் ஆகியவைபற்றி அதிருப்தி தெரிவித்துள்ளன. கைதிகளின் உணவுப் பொருட்களை விநியோகிப்பதில்தான் பெரும்பாலும் ஊழல் நடக்கிறது.

மருத்துவ வசதிகள்:

கைதிகளுக்கு போதுமான மருத்துவ வசதிகள் இல்லாததை பல கமிட்டிகளும் குறிப்பிட்டுள்ளன. 1995 ஆம்ஆண்டில் திஹார் சிறையில் நடத்தப்பட்ட விசாரணையில், போதுமான மருத்துவர்கள் இல்லையென்பது தெரியவந்தது. திஹார் சிறைக்கு 16 மருத்துவர்கள் நியமிக்கப்படவேண்டுமென்றபோதிலும் 6 மருத்துவர்கள்தான் இருக்கின்றனர். அதிலும் ஒருவர்கூட ஜெயில் வளாகத்துக்குள் தங்கியிருப்பதில்லை. திஹார் சிறையில் 300 கைதிகள் காசநோயால் தாக்குண்டுள்ளனர். அதில் 100 பேர் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளனர். எழுபதுக்கும் மேற்பட்ட மனநோயாளிகளும் உள்ளனர்.

தண்டனைக்குறைப்பு:

பலமாநிலங்களில் தண்டனை மறுபரிசீலனை போர்டுகள் ஏற்படுத்தப்படவில்லை. பல மாநிலங்களில் அவை செயல்படுவதில்லை. அதுபோலவே தண்டனைக்குறைப்பு குறித்து நாடெங்கிலும் ஒரே மாதிரியான விதிகளோ, நடைமுறைகளோ கிடையாது. இது முல்லா கமிட்டி அறிக்கையிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பெண் கைதிகள்:

1995 மே 12ல் டைம்ஸ் ஆஃப் இந்தியா நாளேட்டில் வெளியான தகவல் ஆறு ஆண்டுகளுக்கு மேலாக விசாரணைக் கைதிகளாக அடைக்கப்பட்டிருக்கும் பெண்கள் பற்றிய விவரங்களை தெரியப்படுத்தியது.

திஹார் சிறையில் பெண் கைதி ஒருவர் கர்ப்பமாக்கப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து இந்திய மனித உரிமைகள் ஆணையம் பெண் கைதிகளுக்கு உரிய பாதுகாப்பு செய்யப்படவேண்டுமென அறிவுறுத்தியுள்ளது. ஜெயில் அதிகாரிகளே அந்தப் பெண் கைதியைக் கற்பழித்து கர்ப்பிணியாக்கிவிட்டனர்.

சிறைகளைக் கண்காணிக்கும் ஏற்பாடு:

கைதிகளை சித்ரவதை செய்யாமல் தடுக்க வேண்டுமெனில் சிறைகள் சரியானபடி கண்காணிக்கப்படவேண்டும். தற்போதுள்ள மேற்பார்வை முறை "ஜெயில் விசிட்டர்" முறையாகும். ஆனால் இது சரியானபடி நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. சஞ்சய்சூரி Vs டெல்லி நிர்வாகம் (1988 Suppl Sec 160) என்ற வழக்கில் உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பில் இதுபற்றி சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. "ஜெயில் விசிட்டர் போர்டில் சமூகத்தின் பல்வேறு தரப்பினரும் இடம்பெறுதல் அவசியம். பல்வேறு சமூக இயக்கங்களைச் சேர்ந்தவர்கள், நல்ல சமூகப் பின்னணி கொண்டவர்கள், பத்திரிக்கையாளர்கள், சமூக சேவகிகள், நீதிபதிகள், ஓய்வு பெற்ற நீதிபதிகள் போன்றோர் அதில் பொறுப்புகளில் அமர்த்தப்பட வேண்டும். செஷன்ஸ்

படிப்பகம்

www.padippakam.com

நீதிபதிக்கு முக்கியமான பங்கு அதில் இருக்கவேண்டும். சிறை நிலவரம் குறித்த சரியான சித்திரிப்பினை அவர் தரவேண்டும்” என உச்சநீதிமன்றம் தனது தீர்ப்பில் குறித்துள்ளது.

சிறைக்கைதிகளின் உரிமைகள் மீறப்பட்டால் அதை எதிர்த்து இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவுகள் 32 மற்றும் 226ன் அடிப்படையில் உயர்நீதிமன்றங்களிலும், உச்சநீதிமன்றத்திலும் ரிட் மனு தாக்கல் செய்ய முடியும். சிறையில் காணப்படும் மோசமான நிலைகளை எதிர்த்து கைதிகளும் போராடவே செய்கின்றனர். தமிழ்நாட்டிலும், ஆந்திரத்திலும் இப்படியான போராட்டங்கள் நடந்துள்ளன. 54 கோரிக்கைகளை முன் வைத்து ஆந்திர சிறைகளில் இருந்த அரசியல் கைதிகள் ஒரு மாத காலப் போராட்டம் ஒன்றை 1995 ஜனவரியில் நடத்தினார்கள். 1995 மார்ச் மாதத்தில் மதுரை சிறையில் கைதிகள் நடத்திய போராட்டம் கலவரமாக வெடித்தது. இதில் இரண்டு ஆயுள் சிறைவாசிகளும் சிறையின் முதன்மை வார்டரும் கொல்லப்பட்டனர். 21 ஜெயில் ஊழியர்கள் உட்பட 97 பேர் காயமுற்றனர்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினை (ICRC) இந்திய சிறைகளைப் பார்வையிட 1995ல் இந்திய அரசு அனுமதித்தது. இது ஒரு திருப்பு முனையாகும். அதைத் தொடர்ந்து ஜம்மு காஷ்மீர் பகுதிகளில் உள்ள சிறைகளை அந்த குழு மூன்றுமுறை பார்வையிட்டு அறிக்கையொன்றை அளித்துள்ளது. அதில் பல சீர்திருத்தங்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

இந்தியாவில் இதுவரை சிறை சீர்திருத்தங்களுக்காக ஐந்து கமிட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்திய சுதந்திரத்துக்குப்பிறகு 1980ல் நீதிபதி A.N.முல்லா தலைமையில் அமைக்கப்பட்ட நான்காவது கமிட்டி 1983ல் சமர்ப்பித்த தனது அறிக்கையில் பல்வேறு முக்கியமான சீர்திருத்தங்களைப் பரிந்துரைத்துள்ளது. 1986ல் பெண் கைதிகளுக்கான பிரச்சனைகளை ஆராய நியமிக்கப்பட்டதே ஐந்தாவது கமிட்டியாகும். இதன் தலைவராக நீதிபதி கிருஷ்ணய்யர் இருந்தார். அதுவும் பல்வேறு பரிந்துரைகளைச் செய்துள்ளது.

ஆனால் அவை யாவும் காகிதத்தில்தான் உள்ளன. அவற்றை நடைமுறைப்படுத்துவது சிறைவாசிகளின் போராட்டத்தால் மட்டுமே சாத்தியமாகிவிடாது. சமூக இயக்கங்கள் ஒவ்வொன்றும் இதனைத் தமது கடமையாகக் கொள்ளும்போதே அது சாத்தியப்படும். சிறைவாசிகளும் மனிதர்கள்தான். அவர்களது உரிமைகளும் காக்கப்படவேண்டியவைதான் என்கிற புரிதலை வெகுமக்களிடம் உண்டாக்க வேண்டியது நம் அனைவரது கடமையாகும். அப்போதுதான், சமூகத்தின் புறக்கணிக்கப்பட்ட மூடுண்ட பகுதியாக சிறைகள் இருப்பது மாறும்.

சிறைச்சாலைகள் இல்லாத சமூகத்தைக் கனவு காண்கிற நாம் இப்போதுள்ள சிறைகளைத் திறந்த தன்மை (Transparent) கொண்டவையாக மாற்றுவதன்மூலமே நம் கனவை நனவாக்க முடியும். சமூகமே ஒரு திறந்தவெளி சிறையாக மாற்றப்பட்டுவரும் இன்றைய சூழலில் நம்முடைய பொறுப்பு மேலும் அதிகரித்துள்ளது.

LRSA மையம் வெளியிட்டுள்ள **State of Human-Rights in India** 1996 என்ற நூலில் **Jails and Prisoners** என்ற அத்தியாயத்தின் தமிழ் வடிவம்.

மொழிபெயர்ப்பு: ஆதவன்.

படிப்பகம்

www.padippakam.com

ஈழம்: தென்னாசிய சாதியமைப்பிலிருந்து தலைகீழ் மாறான மலையக சாதியமைப்பு

வ.ஐ.ச. ஜெயபாலன்

இந்தியத் தமிழர்கள் என்று உத்தியோகபூர்வமாகவும் 1960களில் மலையகத் தமிழர்கள் என்று இனத்துவ அரசியல் கலாசார அடிப்படையிலும் அடையாளம் காணப்படுகிற இந்திய-இலங்கைத் தமிழர்களது சமூக பொருளாதார இனத்துவ அமைப்பு எத்தகையது என்பதை ஒரு சிறு கட்டுரையின் பகுதியாக ஆராய்வது கடினம். இலங்கையின் குடிசனத்தொகை மதிப்பு அறிக்கைகள் கூட இந்த இனச்சமூகத்தின் உண்மையான தொகையை நேரடியாகத் தெரிவிக்கவில்லை. பல்வேறுபட்ட இவர்களது உருவாக்கமும் பல்வேறுபட்டது.

தென் இலங்கைக்கு கடந்த ஓரிரு நூற்றாண்டுகளுக்குள் புலம் பெயர்ந்த தென்னியந்தியருள் "சாலையர்" (சலாகம) சாதியினரைப் போன்று சிங்கள மயமானவர்கள் புறநீங்கலாக தமிழராக எஞ்சியிருக்கிற இந்திய வம்சாவளியினர் அனைவரும் அவர்கள் தம்மை உத்தியோகபூர்வமாக இந்தியத் தமிழர்கள். இலங்கைத்தமிழர் என எப்படி அடையாளப்படுத்தியிருப்பினும் அவர்கள் இந்திய-இலங்கைத் தமிழர்களாவர்.இவர்களது இனத்துவ வளர்ச்சியின் அடிப்படையான சமூகத் தொகுதி மலையகத் தமிழர்களாவார்.

மத்திய மலைநாடு சார்ந்து 1930களில் தோற்றம் பெற்று 1960களில் தம்மைத் தெளிவாக அடையாளம் காட்டி 1980-90களில் பெருவெடிப்பாக பரந்துபடுகிற இந்திய-இலங்கைத் தமிழர்களது கற்ற மத்திய தர வர்க்கமும், தோட்டப் பிணைப்புகளில் இருந்து விடுபடுகிற தொழிலாளி வர்க்கமும், வர்த்தக முதலாளிகளும் இவர்களது புத்திஜீவிகளும் கலைஞர்களும் தாம் ஒரு பிரதேசத்தை மையமாகக் கொண்ட தனித்த ஒரு இனமாக வளர்ச்சி பெற்று வருவதை சந்தேகமறப் பிரகடனப்படுத்தியுள்ளனர்.

1960களிலேயே இவர்கள் தாம் இந்திய அல்லது தேயிலை ரப்பர் பெருந்தோட்டத் தமிழர்களாக அடையாளப்படுத்தப்படுவதை நிராகரித்தனர். மறுபுறத்தில் இலங்கைத்தமிழர்களது தொங்கு தசையாகத் தாம் அடையாளம் காணப்படுவதையும் இவர்கள் நிராகரித்தனர். இவர்கள் தம்மைத் தனித்த உயர்மலையக பிரதேசம் சார்ந்தவர்களாக அடையாளம் கண்டுகொண்டனர். இந்த அடையாளப்படுத்தலே, இந்த அரசியல் சமூக கலாசார உணர்வே மலையகத் தமிழர்களது அரசியலில் குறிப்பாக பாராளுமன்ற அரசியலில் மேற்படி வெளிவாரிப்படுத்தப்பட்ட உயர்சாதி உயர்வர்க்கப் பிரிவினரின் ஆதிக்கத்தை உடைப்பது இதுவரை சாத்தியப்படவில்லை. ஒருவகையில் இந்தச் சமூக பொருளாதார சாதி அமைப்பையும் அதன் அரசியலையும் தெளிவாகப் புரிந்து கொள்வது தொண்டமானின் எழுச்சியையும் வீழ்ச்சியையும் சரியாகவே புரிந்து கொள்வதற்கு உதவும்.

சாதி, சமூக அமைப்பைப் பொறுத்து அனைத்து இந்திய-இலங்கைத் தமிழர்கள்-குறிப்பாக மலையகத் தமிழர்கள் தென்னாசிய சாதி சமூக அமைப்பில் இருந்து தலைகீழாக மாறுபட்டுள்ளமையைக் கவனத்தில் எடுத்தல் வேண்டும். தென்னாசிய சாதி, சமூக அமைப்பில் பல்வேறு இனங்களைச் சார்ந்த இந்திய நாட்டவர்களாயினும் சரி, இலங்கையைச் சேர்ந்த தமிழர்களாயினும் சரி, சிங்களவர்களாயினும் சரி பல்வேறு ஒத்த அடிப்படைப் பண்புகளைக் கொண்டிருக்க, மலையகத் தமிழர் மட்டும் சாதி, சமூக அமைப்பு ரீதியாக ஏனைய இனங்களுடன் ஏன் மாறுபடுகின்றனர்? எவ்வகையில் மாறுபடுகின்றனர்? என்பது மலையகத் தமிழர்களின் சமூகவியலின் அடிப்படை அம்சமாகும்.

படிப்பகம்

www.padippakam.com

ஏன் மாறுபடுகின்றனர்? அனைத்து இந்திய-இலங்கைத் தமிழர்களதும் சமூக உருவாக்கம் அண்மைக்காலத்துள் குறிப்பாக ஒன்று ஒன்றரை நூற்றாண்டுகளுள் ஏற்பட்ட பல்வேறுபட்ட தென்னிந்தியத் தமிழர்களின் புலப்பெயர்வுகளின் அடிப்படையில் தோற்றம் பெற்றதாகும். பல்வேறுபட்ட நோக்கங்களுடன் ஏற்பட்ட இந்தப் புலப்பெயர்வுகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு சாதி வர்க்க சமூகப் பிரிவுகளை அடிப்படையாகக் கொண்டு அமைந்ததாகும்.

தென் ஆசிய சமூகங்களை வர்க்க நீதியாக ஆராய்கின்றபோது ஏனைய சமூகங்களைப்போலவே அதுவும் கோட்பாடு ரீதியாக முதலாளித்துவ வர்க்கம் சிறியதாகவும் மத்தியதர வர்க்கம் இடைத்தரமானதாகவும் பாட்டாளி வர்க்கம் பரந்துபட்டதாகவும் அமையும் இலகுபடுத்தப்பட்ட மாதிரியில் இனங்களின் வர்க்க அமைப்பு முக்கோணப்படத்தைக் கொண்டது. தென்னாசிய இனங்களை சாதி அமைப்பு ரீதியாக ஆராய்கின்றபோது மேற்படி இனங்களின் சாதிவாரி மாதிரிப்படம் தலைகீழாக நிறுத்தப்பட்ட முக்கோணப்படமாக அமையும். (பிராமணர் புற நடை) இதற்குக் காரணம் தென்னாசிய இனங்கள் வர்க்க ரீதியாக கீழ்ப்பட்ட பாட்டாளி மக்களை தனிப்பெரும்பான்மையாகக் கொண்டிருந்தபோதும் சாதிவாரியாக மேம்பட்ட உயர்சாதியினரை தனிப்பெரும்பான்மையினராகக் கொண்டிருப்பதுதான்.

இந்த உயர்சாதி, உழைக்கும் தொழிலாளி, விவசாயிகளின் கணிசமான பகுதியையும் சொத்துடைய பரந்துபட்ட உயர்வர்க்கத்தின் பெரும்பகுதியையும், உள்ளடக்கி அமைவது தான் இங்கு சிக்கலான அம்சம். வர்க்க அடிப்படையில் தொகை ரீதியாக சிறுபான்மையாக பலகீனப்பட்டுள்ள உயர் வர்க்கத்தவன் சாதிரீதியாக, சாதீய உறவு ரீதியாக மத்தியதர, பாட்டாளி வர்க்கங்களின் பெரும்பான்மையினருடன் இணைந்து பெரும்பான்மையினனாகிறான். இதனால் தென்னாசிய இனச்சமூகங்கள் பாட்டாளி வர்க்க ஒருமைப்பாட்டை சாதி ரீதியாகப் பலகீனப்படுத்துகிற அகமுரண்பாட்டைக்கொண்ட சமூகங்களாக அமைந்துள்ளன.

மலையகத் தமிழர்களது சமூகம் எந்த வகையில் இத்தகைய தென்னாசிய இனச் சமூகங்களுடன் முரண்படுகிறது என்கிற விடயம் ஆர்வம் தருவதாகும்.

மலையக இனச் சமூகம் அடிப்படையில் தேயிலை ரப்பர் தோட்டங்களின் தொழிலாளர் தேவையை இலக்காகக் கொண்டு குடிபெயர்த்துவரப்பட்ட தென்னிந்தியாவின் நிலமற்ற ஒடுக்கப்பட்ட சாதிகளைச் சார்ந்த பாட்டாளி வர்க்கத்தினரை அடிப்படையாகக் கொண்டதாகும். இதனால் இவர்கள் மத்தியில் வர்க்க ரீதியாக தனி முழுப்பெரும்பான்மையினராக பாட்டாளி வர்க்கம்அமைகிறபோது சாதிவாரியாகப் பெரும்பான்மையினராகவும் ஒடுக்கப்பட்ட சாதியினரே அமைகின்றனர். இது வர்க்க ரீதியாகவும் சாதிரீதியாகவும் பாட்டாளி மக்களே பெரும்பான்மையினராக உள்ள ஒரு நிலையாகும். முக்கியமான மற்றொரு விடயம். இவர்களது உயர்சாதி உயர்வாக்கப்பிரிவு வர்த்தக நோக்கங்களுக்காக கொழும்பையும் பின் தென்னிலங்கை நகர்ப்புறங்களையும் இலக்காக கொண்டு புலம்பெயர்ந்து வந்த பிரிவாகும். இவர்கள் மலையகத் தமிழர்களது பிரதேசத்து முதன்மை நில உடமையாளர்களல்ல. மலையகத் தமிழர்கள் வாழும் பிரதேசத்து நில உடமை முன்னர் பிரிட்டிஷ் கம்பெனிகளதும் தற்போதைய அரசு தனியார் கம்பனிகளதும் உடமையாக மாறியுள்ளது. இதனால் ஏனைய தென்னாசிய சமூகங்களைப் போலல்லாது வர்க்க அடிப்படையில் மட்டுமின்றி சாதி அடிப்படையிலும் சிறுபான்மைப்பட்டிருக்கிற மலையகத் தமிழர்களது உயர்சாதியினர் சாதி வர்க்க ரீதியாகப் பெரும்பான்மையினரான பாட்டாளி வர்க்க தலித் சாதிப்பிரிவினர் மீது நிலம், கோவில் சார்ந்த சமூக மேலாதிக்கத்தைக் கொண்டிருக்கவில்லை. இதனால் பிரித்தாளுவதும் நீண்டகாலத்திற்குச் சாத்தியமில்லை.

படிப்பகம்

www.padippakam.com

ரவிக்கைக்கு பின்னால் என்ன இருக்கிறது: சோளிக்கே பீச்சே

மஹாஸ்வேதா தேவி

அங்கே என்ன இருக்கிறது என்பதுதான் அந்த வருஷத்தின் தேசியப் பிரச்சனை. அது தேசியப் பிரச்சனையாக மாறியதால் அக்காலகட்டத்தின் தீராத பிரச்சனையாகிப்போன மற்ற விஷயங்கள் அதாவது பொய்த்துப்போன விளைச்சல், பூகம்பம், பயங்கரவாதிகள் என்று சொல்லப்பட்டவர்களுக்கும் அரசுத் துருப்புகளுக்குமிடையில் நடக்கும் மோதல்கள், கொலைகள், சாவுகள், சாதியை மீறி கல்யாணம் பண்ணிக்கொண்ட குற்றத்துக்காக ஹரியானாவில் ஒரு ஆணும் ஒரு பெண்ணும் சிரச்சேதம் செய்யப்பட்ட சம்பவம், நர்மதா அணை குறித்து மேதாபட்கரின் அவரது சகாக்களின் அநியாயமான கோரிக்கைகள், நூற்றுக்கணக்கான கற்பழிப்புகள், லாக்-அப் கொலைகள், சித்ரவதைகள் இன்னபிற சாதாரண சமாச்சாரங்கள் எல்லாமே இயற்கை விதிப்படி செய்தித்தாள்களின் பிரதான இடங்களைப் பிடிக்க முயற்சி செய்து தோற்றுப்போயின. இவை எல்லாவற்றையும்விட முக்கியமானது சோளிக்கே பீச்சே ரவிக்கைக்குப் பின்னால் என்ன இருக்கு?

இம்மாதிரி பிரச்சனைகள் தேசத்தின் வாழ்க்கையில் சாதாரண பிரச்சனைகளை மிதித்து துவைத்துச் சென்றுவிடுகின்றன. இதுவே விதி. இதனால்தான் "அங்கே என்ன இருக்கிறது" என்பது அவ்வளவு முக்கியமானதாகிறது. இந்தியாவின் ஆன்மா ஆழ்ந்த உறக்கத்தில் அடைத்து வைக்கப்பட்டிருப்பது மட்டுமல்ல, தேவையானபோது அது விழித்துக்கொள்ளவும் செய்யும் என்பதற்கு இது ஒரு நிரூபணம்.

இப்படியாக, எல்லோரும் அங்கே என்ன இருக்கிறது என்பதைக் கண்டுபிடிப்பதில் தீவிரமாக ஈடுபட்டிருந்தார்கள்: பத்திரிகைகள், தணிக்கைக்குழு, விடுபட்டு பிராவை எதிர்க்கும் பெண்கள், தேசம் முழுவதிலும் ஏகப்பட்ட அமைப்புகள், கேபிள் டி.வி.சேனல்கள் சர்வசமயங்களையும் சேர்ந்த ஸ்தாபனங்கள், அரசியல்வாதிகள். கல்நாயக் படத்தின்; கேஸட்டை ரகசியமாகப் பார்ப்பதென்பது அப்போதைய சாதாரண வழக்கமாக மாறிப்போனது.

தேசம் இப்படி தீவிரமான காரியத்தில் ஈடுபட்டிருந்ததைப் பார்த்துதானோ என்னவோ நலம்விரும்பிகள் பம்பாயிலும், கல்கத்தாவிலும் பெரிய குண்டுகளை வெடிக்கச் செய்தனர். அது தேசத்தின் மூளையை அதற்கே உரிய இடத்திற்கு கொண்டுவந்தபோது - இந்தியா திடீரென்று கண்டுபிடித்தது, ரவிக்கைக்கு பின்னால் மத்தியகிழக்கு நாடுகள் இருக்கின்றன. இந்த கண்டுபிடிப்பு இன்னுமொரு குண்டுவெடிப்பு, தன் கட்டுமானம் நொறுங்கிப் போக காரணம். அது திடீரென்று புரிந்து கொண்டது, ரவிக்கைகளைப் போடுவதற்கும், ரவிக்கைகளைக் கழற்றுவதற்கும் அதற்கப்புறமான தில்லுமுல்லுகள் இன்னபிற விஷயங்களுக்கும் மத்திய கிழக்கே காரணம் என்பதை - இந்தியாவின் வெகுஜன கலாச்சாரத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் கலாச்சார ஊடகம் பம்பாய் சினிமாக்கள்தான் என்ற செய்தியை இளைஞர்களின் மூளைக்குள் செலுத்திக்கொண்டிருந்த சக்திமிக்க "லாபி" இதனால் மண்டை காய்ந்தது. அவர்களுடைய எதிர்லாபியின் தலைவர் கருத்தரங்குகளுக்கு போகமுடிந்தால் கௌரவமாக, சந்தோஷமாக நடந்துகொள்பவர் ஒரு துண்டுப்பிரசுரத்தை அச்சிட்டு அதை செய்தித்தாள்களுக்குள் வைத்து விநியோகிக்கச் செய்தார். உலகம் முழுவதையும் சுற்றிக்கொண்டுவிடக்கூடிய பம்பாய் திரைப்படங்கள் ஒரு ரிமோட் கண்ட்ரோல் மூலமாக இந்திய வெகுஜனங்களை சிரிக்கவும், அழவும், ஆடவும் பாடவும்செய்கின்றன.அவைஇணையானதொரு அரசாங்கத்தைப்போலவே செயல்படுகின்றன, என்று அவர் தெரிவித்திருந்தார். இந்தச் செய்தியைப் படித்ததும் பைத்தியக்கார ஹரிபதா டாடா பில்டிங்கின் உச்சியில் ஏறி நின்று "படையெடுப்பு"

படிப்பகம்

www.padippakam.com

"படையெடுப்பு" என்று கத்த உடனடியாக அவர் தடா சட்டத்தின்கீழ் சிறையில் அடைக்கப்பட்டார். எந்த சிறை யார் கைது செய்தது எதுவும் தெரியாது. படையெடுப்பு என்ற சொல் தேசத்தை கவலைப்பட வைக்கிறது. 106 வயதான சுதந்திர போராட்ட வீரர் கோபிகிருஷ்ணபாபு கேட்டார். என்ன? இங்கிலீஷ்காரங்க திரும்பவும் படையெடுத்து வாராங்களா? இந்தியாவைப் புடிக்கப் போறாங்களா? இந்திய மொழிகள் ஒன்றைக்கூட அறியாத இந்தியஅறிவுஜீவிகள் நாடெங்கிலுமிருந்து தலைநகரத்தில் கூடினார்கள். இறுக்கி மூடப்பட்ட கதவுகளுக்குப்பின்னால் ஒரு கருத்தரங்கில் கூடி பின்வரும் அறிவுப்பூர்வமான முடிவை எடுத்தார்கள். கலாச்சாரப் புரட்சியைக் காட்டிலும் கலாச்சார படையெடுப்பு மிகவும் ஆபத்தானது. ஆக, அதைத்தடுப்பதற்கு என்ன செய்யவேண்டுமோ அதைத்தான் இந்தியா செய்துகொண்டிருக்கிறது. ரஷ்யா இல்லை. மார்க்ஸ்-லெனின்-மாவோ எல்லோரும் தோற்றுவிட்டார்கள். இயற்கையாக ஏற்பட்ட இந்த வெற்றிடத்தை திருட்டு கேஸட்டுகளால் நிரப்பவேண்டும். இந்தவிதத்தில் சோளிக்கே பீச்சே காலத்துக்கேற்ற ஒரு தேவாமிர்தமாகும். வீட்டுவேலை செய்யும் வேலைக்காரி தினமும் பெருத்துக்கொண்டே போகும் தன் சவம் போன்ற உடம்பை ஒற்றைத்துணியில் சுற்றியபடி சொல்லிக்கொண்டு போனாள். "என்னோட வாழ்க்கையில மேல் துணியே போட்டதில்ல, இதுல ரவிக்கைய எங்க போடறது". இந்த மாதிரி பிரச்சனையில் தேசம் தீவிரமாக மூழ்கிக்கிடந்ததால் உபின் பற்றிய செய்திக்கு ஒண்ணரை இஞ்ச் இடம்தான் செய்தித்தாளில் கிடைத்தது. தேசத்தின் பார்வையிலிருந்து தப்பியும்விட்டது.

2

உபினுடைய செய்தி உபினைப்பற்றிய செய்தியாக வெளியாகவில்லை. ஜரோவாவுக்கும் சியோபுராவுக்கும் இடையில் ரயிலில் அடிபட்டு நசுங்கிக் கிடந்த பெயர் தெரியாத ஒரு மனிதனின் உடல் உபினுடைய உடல்தான் என்பது முதலில் யாருக்கும் தெரியாது. அதற்குமுன்பே உபினின் நண்பனும் சீடனுமான உஜனுக்கு ஒரு போஸ்ட் கார்டு வந்திருந்தது.

"ஜரோவாவுக்கு வா.மிகவும் அவசரம் - உபின்"

இந்தக்கடிதம்தான் உஜனை ஜரோவாவுக்கு அழைத்து வந்தது. உபினின் முடிவை அவன் அறியவும் செய்தது. அந்த போஸ்ட் கார்டு உஜனுக்கு மிகுந்த அதிர்ச்சியை உண்டாக்கிவிட்டது. இப்போது, உபின் காணாமல் போன ஆரம்ப நாட்களை அவன் நினைவுபடுத்திப் பார்த்தான். அவன் அந்தக் கடிதத்தை ஷீத்தல் மல்யாவிடம் எடுத்துக் சென்றான். கல்கத்தாவின் சால்ட்லேக் ஏரியாவில் தெற்குப்பக்கம் நெடிய மரங்களும், வற்றாமல் ஓடும் கெஷ்டோபூர் கால்வாயும், வடக்கே சில அசாதாரணமான வீடுகளும் உள்ள ஒருமுட்டுச் சந்தில் இருந்த தனது சொந்த அபார்ட்மென்ட்டுக்கு ஷீத்தல் வந்திருந்தாள். அவ்வளவு அழகான, உறுதியும் துல்லியமும், முப்பத்து மூன்று வயதில் கூட இளமையும் கொண்ட ஒரு பெண்ணை ஏன் ஷீத்தல்-குளிர்ச்சி- என்று அழைக்கவேண்டும். உஜனுக்குத் தெரியவில்லை. உபினும் ஷீத்தலும் கணவன் மனைவி. உபின் அலைந்து திரியும் புகைப்படக் கலைஞன். ஷீத்தல் இமயமலை ஏறுவதில் பிரபலமான வீராங்கனை. ஒரு வருஷத்தில் ஒன்றரை மாதங்களைக்கூட அவர்கள் சேர்ந்து கழிப்பதில்லை. இருந்தபோதிலும், ஒருவருக்கொருவர் எப்படி அன்போடிருக்கிறார்கள். அதுவும் உஜனுக்குப் புரிவதில்லை. உஜனால் பலவற்றைத் தெரியாதவனாக சுலபமாக இருக்கமுடியும். அவன் உபினுக்காக மட்டும் தன்னை அர்ப்பணித்துக்கொண்டவன். அவ்வப்போது உபின் பீஹாருக்கும், ஒரிஸ்ஸாவுக்கும் புகைப்படங்கள் எடுக்கச் செல்வான், உஜனையும் அழைத்துச் செல்வான். உபினின் புகைப்படங்களுக்கு வெளிநாடுகளிலும், உள்நாட்டிலும் ஏகக்கிராக்கி. இதில் உஜனுக்கும் லாபம். சால்ட் லேக் பகுதியில் இருந்த அபார்ட்மென்ட் உஜனின் ரசனைக்கு ஒத்ததாக இல்லை. அசாத்தியமான அளவுக்கு அப்பழுக்கற்ற அந்த அபார்ட்மெண்ட்டில் யாரும் வசிக்கவில்லை. எப்பொழுதோ ஒருதரம் ஷீத்தல் வருவாள். எல்லாமே பிரச்சனைக்குரியதாக தோன்றும். உபின்

படிப்பகம்

www.padippakam.com

சொல்வான், அதைப்பற்றி ஏன் யோசிக்கவேண்டும்? ஷீத்தல் இயற்கையின் குழந்தை. இந்த மரங்கள் இந்தப்பசுமை இந்த குறுகலான அமைதியான கால்வாய், முட்டி முடிந்துபோகும். இந்தச்சாலை இவை அவளுக்குத் தேவைப்படுகின்றன.

ஷீத்தல் இருவிதமாக தோன்றக்கூடியவள். இமயமலையில் மீண்டும் மீண்டும் ஏறி வெற்றிக்கொள்ளும் உறுதிமிக்க ஷீத்தல். மரங்களும் நீரும் சூழ்ந்த அமைதியில் இங்கே மூழ்கிப்போகும் இன்னொரு ஷீத்தல். இமயமலைகளுக்கும், இந்த சால்ட்லேக் ஏரியாவுக்கும் அப்பால் இயற்கையான அழகு இந்தியாவில் ஏராளமாக இருக்கிறது. ஷீத்தலால் அந்த காட்சிகளைத் தாங்கிக் கொள்ள முடியாது. மனப்பான்மையைப் பொறுத்தவரை அவள் 2094ஆம் வருஷத்தைச் சேர்ந்த ஒரு பெண் அல்லது ஷீத்தலின் நூற்றாண்டு இன்னும் வரவில்லை.

இந்த விஷயங்களை இரைந்து சிரித்தபடி உபின் சொல்வான். அவன் வயது முப்பத்தைந்தா, ஐம்பதா என்று நீங்கள் சொல்லமுடியாது. அவன் திடகாத்திரமானவன். தாடி வைத்திருப்பான். பளிச்சிடும் கண்கள். நாலைந்து நாட்களுக்கு ஒருமுறை குளியல், மாமிச உணவு, பீர் குடிப்பான். பீடிகளைப் புகைப்பான், உஜன் வீட்டில் கூட்டுக்குடும்பத்தின் தேவைக்கு பகிர்ந்து கொளளப்பட்ட வீட்டின் ஓர் மூலை அறையில் கிடப்பான். டெல்லியில் ஆடம்பரமான ஓட்டல் அறையிலும் வீட்டில் இருப்பதுபோலவே இருப்பான்.

ஷீத்தல் அசையாமல் அமர்ந்திருந்தாள். ஓடும் கால்வாயைப் பார்த்தபடி

உஜன் ஷீத்தலிடம் அந்த போஸ்ட் கார்டை தந்தான்.

-ஐரோவாவுக்கா

-அப்படித்தான் அவன் எழுதியிருக்கிறான்

-எனக்கு எழுதவில்லை.

-ஆனால் இந்த சமயங்களில் நீ வழக்கமாக கதம்குரியில் இருப்பாய்.

-ஆனால் டெல்லிகு அவன் ஐரோவாவிலிருந்தும் போயிருக்கலாம்.

-ஆமாம்.

அவனோடயே இருக்கவேண்டுமென்று உன்னிடம் சொல்லியிருந்தேன். அந்த நேரத்தில் ஆப்பிள் எஸ்டேட்டில் எவ்வளவு வேலை இருக்கும் தெரியுமா! உனக்கு பணமும் கொடுத்திருந்தேன்.

நீ பணம் கொடுக்காதிருந்தாலும்கூட நான் உபினைப் பார்த்துக் கொண்டிருப்பேன். அவன் டெல்லியில் அவ்வளவு பைத்தியக்காரத்தனமாக நடந்துகொள்வானென்று எனக்கு எப்படித் தெரியும்? நான் பீடி வாங்கப்போயிருந்தேன், அந்த சமயம் போலீஸ்...

உஜனின் குரல் உடைந்தது.

ஆமாம் பேப்பரில் படங்களைப் பார்த்தேன்.

மோசம்.மோசம்.

ஆமாம் ஒரு பேனரின் புகைப்படம். அதில் ஆங்கிலத்தில் எழுதியிருந்தது. The halfnaked ample breasted female figures of orissa are about to be raped. Save them Save them.

நான் அதற்குமுன் டெல்லிக்குப் போனதில்லை. அந்த நகரத்தைப்பற்றி ஒன்றும் தெரியாது. கடைசியில் எதுவும் செய்யமுடியாமல் நான் திரும்பிவிட்டேன்.

பிரமாதம்!

திடீரென்று அவசரத்தோடு உஜன் சொன்னான், எனக்குத் தெரியும். அவன் எனக்குத்தான்

படிப்பகம்

www.padippakam.com

செய்தி தெரிவிப்பானென்று. அப்படியே செய்திருக்கிறான். ஆமாம், நான் திரும்பி வந்ததிலிருந்து அதற்காகக் காத்திருந்தேன்.

நீ அதிகமாக எதையும் செய்துவிடவில்லை. கோபமாகவோ, பிரமிப்போடோ இருக்கும்போது ஆழமாக மூச்சுவிட்டு ஷீத்தல் தன்னை கட்டுப்படுத்திக் கொள்வாள். ஒரே நிமிடத்தில் தன்னை அமைதிப்படுத்திக் கொண்டு அவள் கேட்டாள்.

ஏன் ஜரோவா உஜன்?

உனக்கும்தான் தெரியுமே

போனமுறை ஏன் அவன் அங்கு போனானென்று தெரியவில்லை. ஆமாம், யானைகள் அப்போது இடம்பெயர்ந்து கொண்டிருந்தன. பிறகு, வறட்சி.

பிறகு நதிநீரில் நச்சுமருந்து.

பஞ்சகாலம், ஏறக்குறைய பஞ்சகாலம்.

ஆமாம் ஆமாம். அந்தப்படங்கள் தேசிய நாளிதழ்களில் வந்தன. லென்ஸ் மெகஸினில்கூட வந்தன. அது நான்குமுறை. ஐந்தாவது முறை?

உஜன் மௌனமாயிருந்தான்.

ஐந்தாவதுமுறை,

எனக்குத்தெரியாது. நான் பிடாலாவுக்கு போய்விட்டேன். உபின் போகவில்லை.

யாருடைய புகைப்படங்கள் இவை?

ஒரு கிராமத்துப்பெண் பெரிய உயர்ந்து நிமிர்ந்து நிற்கும் மார்பகங்கள் ஒரு குழந்தையின் வாயில் திணிக்கப்பட்டிருந்தது. அவளது துணியின் ஓரத்தால் அவளது மார்பகம் மூடப்பட்டிருந்தது. அதே பெண் வேறு பல பெண்களோடு தலையில் நீர் சுமந்து போகிறாள். ததும்பும் ஜாடிகளைப்போல நிரம்பி வழியும் மார்பகங்கள்.

யாருடைய படம் உஜன்?

கங்கோர் என்றான் உஜன். காங்கோரென்றால் என்ன எனக்குத் தெரியவில்லை.

ஷீத்தல் திடுக்கிட்டாள். கங்கோர்?

கங்கோர் என்றால் கங்கௌரியா?

அப்படியென்றால்?

நீ ஒரு பத்திரிகையாளன் உஜன்! பெயர்கள் உனக்கு சுவாரசியமாகப்படவில்லை?

இல்லை. பெயரில் என்ன இருக்கிறது?

ஷீத்தல் உடனே முறையான முன்னாள் ஷீத்தல் மல்யாவாக மாறிவிட்டாள். ஃபெஸ்டிவல் ஆஃப் இண்டியாவுக்கு டாக்குமென்டரி தயாரித்த ஷீத்தல். நேர்முக வர்ணனை வழங்கும் குரலில் அவள் பேசினாள். கங்கோர் திருவிழா ராஜஸ்தானில் நடைபெறுகிறது. கங்கா வழிபாடு! கங்காதேவி வழிபாடு! விசித்திரம்? கங்கை ஆறு ராஜஸ்தான் வழியே ஓடுவதில்லை.பெரிய ஆறுகள் கூட...

ராஜஸ்தான் என்றால் ராஜாக்களின் தேசம் என்று பொருள். ஒரு காலத்தில் அங்கே கங்கை ஓடியிருக்கலாம்.

சுஜன், இல்லை இல்லை உஜன்!

தெய்வாம்சம் நிறைந்தவன்.

நீ ரொம்பவும் தெய்வீகமானவன். ரொம்பவும் மிகக்குறைந்த கலாச்சார விழிப்புணர்வு.

படிப்பகம்

www.padippakam.com

உபின்கூட சொல்வான். வங்காளிகள் தெய்வாம்சம் பொருந்தியவர்கள். இந்தியாவிலுள்ள மற்ற மாநிலங்களைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதுகூட அவர்களுக்குத் தெரியாது.

இந்தப் படங்கள் எங்கிருந்து கிடைத்தன.

உபின் மறைத்து வைத்திருந்தான்.

கங்கோருடன் உபினுக்கு..?

இல்லை!

பாதிப்பஞ்சம் ஏறக்குறைய பஞ்சகாலம்.வேலை தேடி கங்கோரின் கூட்டம் ஜரோவாவுக்கு வந்தது. செங்கல் சூளைகளில் கூலிக்கு அவர்கள் வேலை செய்தார்கள். உபினும் உஜனும் அங்கு வந்து சேர்ந்தபோது அந்த கூட்டம் அங்கு வந்து இரண்டு மூன்று மாதங்கள் ஆகிவிட்டிருந்தன. கங்கோர் ஆரோக்கியமாயிருந்தாள். குழந்தை பால் குடிப்பதை பார்த்ததும் உபின் ஒரு போட்டோ எடுத்தான்.

கங்கோர் ஆட்சேபிக்கவில்லை. ஆனால் கையை நீட்டினாள் சார்...பணம்? போட்டோ எடுத்தீர்களில்லையா..காசு கொடுங்கள். உஜனுக்கு அதிர்ச்சியாயிருந்தது. உபின் தன் பாக்கெட்டிலிருந்த காசையெல்லாம் சுருட்டி அவளிடம் கொடுத்தான்.

பொதுப்பணித்துறை பங்களாவை நோக்கி செல்லும்போது உஜன் சொன்னான், நீ அறுபது எழுபது ரூபாய் கொடுத்திருப்பாயா? என்னவொரு வெட்கங்கெட்ட பெண்!

உபின் சொன்னான், இது உனக்கு அதிர்ச்சியாயிருக்கிறதா உஜன்! கேள் நண்பா! நான் இந்தப்படங்களை காசுக்கு விற்கும்போது அவள் மட்டும் ஏன் காசு வாங்கக்கூடாது? அவர்களெல்லாம் வாயில்லாப்பூச்சிகளல்ல உஜன், அவர்களுக்கும் புரிகிறது, நிவாரணம் வழங்குகின்ற பெரியமனிதர்களும்கூட உள்ளூர வேறு ஒரு திட்டம் வைத்திருக்கிறார்களென்பதை அவர்கள் அறிவார்கள்.

பிறகு அவன் சொன்னான். கடவுளே! அந்த மார்பகங்கள், சிலை மாதிரி. நீ பார்த்தாயா அவற்றை?

நான் பார்க்கவில்லை.

நடப்பதுதான், இது நடக்கக்கூடிய ஒன்றுதான். சுதந்திரம் வந்ததற்குப்பிறகு என்னுடைய நண்பனின் மாமா ஒருத்தர் தண்டகாரண்யா காட்டுக்குப் போயிருந்தார். மானுடவியல் அறிஞர். ஆதிவாசிப் பெண்களின் ஆடையற்ற மார்பகங்களை பார்த்து...

வெட்கங்கெட்ட மனிதன்

அவரும்கூட அப்படித்தான் சொன்னார். வெட்கம்..வெட்கம்.. என்று சொல்லி அவர்களை ரவிக்கை அணியச் சொன்னார். இப்போது அணிகின்றனர். அப்போது அவர்கள் மறுத்துவிட்டனர். அப்புறம் அவர் கொஞ்சம் கொஞ்சமாக புத்திகெட்டுப்போய்விட்டார்.

அதைவிடு. வேறு ஏதாவதுபேசு.

அவள் மார்பகங்களை நான் பார்த்தபோது...

வெட்கக்கேடு உபின்.உனக்குக் கல்யாணமாகிவிட்டது.

அழகானதை புகழவும் மதிக்கவும் கற்றுக்கொள்.

கங்கோர் உபினின் தலைக்குள் புகுந்துவிட்டாள். அந்தப் படங்கள் இங்கு இல்லை. இரவில் வரட்டியின் நெருப்பில் சற்றே முன்னால் குனிந்தபடி மாவு உருண்டைகள் வாட்டிக் கொண்டிருக்கும் கங்கோர். அழுக்கடைந்த அந்த சிவப்பு துணியின் கீழே கோனார்க் சிற்பம் போன்ற அவளது மார்பகத்தின் பிளவு..ஒளிசிந்திக் கொண்டிருக்கிறது.

படிப்பகம்

www.padippakam.com

ஒரு ரயில் கடந்து செல்கிறது. கங்கோரின் கூட்டம் அதைப் பார்க்கிறது. அவளது மார்பகங்கள் அஜந்தா குகை ஓவியங்களைப்போல, வானத்தின் பின்னணியில்... அழுக்கடைந்த ரவிக்கை,அழுக்கடைந்த சிவப்புத்துணி, பேனும் அழுக்கும் நிறைந்த கேசம்...

இரண்டாவது முறை கங்கோர் சொன்னாள், ஒரு படத்துக்கு நூறு ரூபாய்.

உபின் தனது கடிகாரத்தைக் கழற்றி அவளிடம் தந்தான்.

கங்கோர் அந்த கடிகாரத்தைத் தூக்கி வீசிவிட்டாள். பதினொன்று பத்து. கடிகாரம் நின்றுவிட்டது.

கடிகாரம் நின்றுவிட்டது. நின்றுபோனதாகவே இருந்தது. உபின் அதை ரிப்பேர் செய்யவே இல்லை.

திகைத்துநின்ற உபினைப்பார்த்து கங்கோர் ஆபாசமாகத் திட்டினாள். தேவடியா மகனே, பெட்டைப்பயலே. என்னிடம் வாட்சைக் கொடுத்துவிட்டு அந்தப் பக்கம் போய் அதை நான் திருடியதாக போலீசில் சொல்லலாமென்று பார்க்கிறாயா? போய்விடு..போய்விடு..

கங்கோரின் வீட்டுக்காரன் வந்து அவளுக்கு இரண்டு அடிகொடுத்து அழைத்துப்போனான்.

அன்றைக்கு உபின் சாராயக்கடைக்கு போனான். இல்லை, அவனால் அந்த பாலூட்டும் அங்கங்களை மறக்க முடியவில்லை.

அவனது மூளையில் பூகம்பமாய் அது எழுந்தது. உஜன்! அங்கேதான் எல்லா சூட்சுமங்களும் இருக்கின்றன. இப்படி அது எப்படி இருக்க முடியும்?

உபினை அழைத்துச் செல்வதற்காக உஜன் தொலைவில் ஒரு சிமெண்ட மூட்டைமேல் உட்கார்ந்திருந்தான். அவனுக்கு கங்கோரின்மீது ஏககோபம். அவனை நோக்கித்தான் கங்கோர் வந்தாள்.

சார்! சார்! அவன் என் புருஷனில்லை! எங்களுடைய கான்ட்ராக்டர். அவன் எங்களிடம் வேலை வாங்குவதற்காக வந்தவன். என் புருஷன்..வீட்டில் இல்லை...திருடியதாக போலீஸ் அடித்துப் பிடித்துச் சென்றுவிட்டது..நாங்கள் வந்த இடம் மோசமான இடம் சார்!

வெளியே போ! போ என்று கத்தினான் உஜன்.

வாயைத் துணியால் பொத்திக்கொண்டு கங்கோர் அழுதாள்....கேமிரா சார்கிட்ட சொல்லுங்க..இங்கிருந்து என்னை அழைச்சுகிட்டுப் போயிட சொல்லுங்க. கட்டிக்க ஒரு துணி..சாப்பிட ஒருவாய். தாயும் பிள்ளையும் படுத்துக்க ஒரு இடம்.

என்ன செய்யறது சார்...நிலமில்லை...பயிரில்லை..வாழ்வதே கஷ்டமாயிருக்கு..பானை சட்டி, அடுப்பு, கத்தி..ரூம்களைக் கழுவணுமா? துவைக்கணுமா? எது வேணும்னாலும் செய்றேன் சார்..

உனக்கு புருஷன் இருக்கான்!!

அவன் என் வீட்டுக்கு வரமாட்டான் சார்!

ராத்திரியில இருட்டுல வருவான்...காசு கொடுப்பேன்...காண்ட்ராக்டருங்க நல்லவங்க இல்ல சார்..

இங்கிருந்து போய்விடு..இல்லேன்னா போலீஸைக் கூப்பிடுவேன்.

உஜன் எழுந்து வேகமாக நடந்தான். உபின் கங்கோர்...கங்கோர் என்று முனகியபடியே இருந்தான். அவனை இழுத்துச் செல்வதுதான் பிரச்சனையாக இருந்தது. உபினும் உஜனும் மறுநாள் புறப்பட்டுவிட்டனர்.

படிப்பகம்

www.padippakam.com

உபின் பாறையைப்போல் மௌனத்தில் இறுகியிருந்தான். வைத்துக் கொள்ள முடியாது-உஜன் அப்படியொரு உடலமைப்பைக் காப்பாற்ற முடியாது..ஒன்றுமிருக்காது. எல்லோராவிலுள்ள பெண்களின் மார்பகங்கள் அழிந்து கொண்டிருப்பதை நீ உணர்ந்தாயா?

கங்கோர் ஒரு மாயம்!

உஜன்!

யெஸ், ஷீத்தல் சொல்லு!

உபின்.

உஜன் கல்கத்தாவுக்கு மீண்டும் உணர்வுபெற்றுத் திரும்பினான். இல்லை! என்றான். உபின் மறுபடி மறுபடி சொல்லிக் கொண்டிருப்பான். நாட்டுச் சாராயம் ஓ.கே! நாட்டுப்புறத்துப் பெண்களை என்னால் சகித்துக் கொள்ள முடியாது!

ஷீத்தல் மெல்ல முறுவலித்தாள்.

இந்தப்பெண்ணைப்பற்றி உனக்கு வேறெதுவும் தெரியாதா?

தெரியாது. தெரிந்து கொள்ளவும் விரும்பவில்லை.

சரி. டெல்லிக்குப் போவதற்கு முன் என்ன நடந்தது?

தெரியாது. உஜனுக்குத் தெரிந்திருக்காது. உபின் அருணாச்சலுக்குப் போகாதது, கல்கத்தாவுக்கு வந்தது அவையும்கூட உஜனுக்குத் தெரியாது.

அருணாச்சலுக்குப் போகவில்லை, கல்கத்தாவுக்கு வந்தானா எனக்குத் தெரியாது. ஜரூராவாவுக்குப் போனதும்கூட எனக்குத் தெரியாது. திடீரென்று பெரும் அவசரத்தில் என்னிடம் வந்தான். உர்த்தே புர்த்தே-

என்ன?

டிப்பிக்கல் பெங்காலி எக்ஸ்பிரஷன்.

டோண்ட் பி ஸோ டிப்பிக்கல். எனக்கு பெங்காலி அவ்வளவு புரியாது. நான் கற்றுக்கொண்டது உபினுக்காக. எங்கள் கிளப்பைச் சேர்ந்த மலையேறுபவர்கள் பலர் வங்காளிகள்தான். உபினுடைய பெங்காலி முழுக்க...

பெயரில் மட்டும்தான் பஞ்சாபி. மூன்று தலைமுறையாக கல்கத்தாவில்.

உபின் தனது பதினெட்டாவது வயதில் கல்கத்தாவை விட்டுப்போனான்.

அதைப்பற்றி பேசியிருக்கிறான்.

அப்புறம்?

ஏதோ பயங்கரமான ஒன்று நிகழ்ந்திருப்பதுபோல் தோன்றியது. அவன் சொன்னான். கடந்த நாட்களில் எங்கெங்கோ ஓடி அலைந்திருக்கிறேன்.

உபின் சொன்னான். நரகவேதனை! நடந்து, ட்ரக்குகளில்; போலீஸ் ஜீப்புகளில். அலைந்து-கங்கோர் கூட்டத்தின் சுவடு கூட தெரியவில்லை. அவர்கள் எங்கே என்பது பற்றி யாரும் எதுவும் சொல்லவில்லை. பங்களாவிலிருக்கும் காவல்காரன் சொன்னான், ஜரோவாவுக்கு அவள் வந்துதான் ஆகவேண்டும். கங்கோர் உண்மையிலேயே ஏதோ மோசமாக பண்ணியிருக்கிறாள்..ஒரு தகவலும் தெரியவில்லை. கான்ஸ்பிரஸி ஆஃப் சைலன்ஸ்!

அந்தத் தகவலை வைத்துக்கொண்டு நீ என்ன செய்யப் போகிறாய் உபின்? உஜன் கேட்டான்.

அவளைத் திரும்ப அழைத்துவருவேன்.

படிப்பகம்

www.padippakam.com

எங்கே?

எங்கே வேண்டுமானாலும்

எதற்கு?

உனக்குப்புரியாது உஜன்..நான் அவளைக் காப்பாற்றியிருக்கலாம்.

அவள் கல்யாணமான பெண்.

நான் அதைச் செய்ய முடிந்திருந்தால்..இல்லை. உஜன் இல்லை. நான் தூங்கப்போகிறேன்.

உனக்குத் தெரியுமா ஷீத்தல். அவன் மூன்று நான்கு நாட்கள் தொடர்ந்து தூங்கினான். அதன்பிறகு, நான் டெல்லிக்குப் போகிறேன் என்றான். அப்புறம்..

இப்போது நீ என்ன செய்யப்போகிறாய்?

ஏன் ஜரோவாவுக்குப் போகவேண்டும். நீ போகவில்லையா?

இல்லை. நான் அவனுக்காக காத்திருப்பேன்.

எங்கே?

கதம்குரியில்.

அப்படியானால் நான் போகிறேன்.

யெஸ்

நீ போக வேண்டாமா? நீ அவன் மனைவி...

இல்லை. எங்கள் உறவு அப்படிப்பட்டதல்ல. உபின் எங்காவது தொலைந்து போவான். திரும்பவும் வருவான். அவனும் அவனது கேமராவும் நானும் அந்த இமயமலையும் ஒருவேளை எதிர்காலத்தில்..

நீ கதம்குரியில் வசிப்பாய்?

ஒருவேளை..

நீங்கள் குறைந்தபட்சம் ஒன்றாகவாவது வசித்திருக்கலாம். அப்படி ஒரு மனிதன்.. தனியே வாழ்ந்து பைத்தியமாகி...

எப்போது அவன் அப்படி கிறுக்குத்தனமாக நடந்துகொண்டான்?

மார்பகங்களைக் காப்பாற்றுங்கள் என்பது பைத்தியக்காரத்தனமில்லையா?

உபின் நிச்சயமாக அப்படி எண்ணியிருக்கமாட்டான். ஆல்ரைட் உஜன்! இந்த பணத்தை வைத்துக்கொள். அவனைக் கண்டுபிடித்ததும் உடனே எனக்கு ஃபோன் பண்ணு.

எனக்கு பணம் தேவையில்லை.

ஷீத்தல்அந்தப் படங்களை கவனமாகப் பார்த்தாள். மார்பு, மார்பகம். மார்பகம் என்றால் என்ன? கொழுப்பு திசுக்கள். அதற்கு இவ்வளவு கவலையா!

எதற்காக உபின் இவ்வளவு கவலைப்பட்டான்?

உஜன் புறப்பட்டுக்கொண்டிருந்தான், போய்விட்டான். ஷீத்தல் கதவை மூடினாள், ஸிலிக்கன் பொருத்தப்பட்ட தனது முன்புறத்தில் கையை வைத்துப் பார்த்தாள். ஷீத்தலின் ரவிக்கைக்கு பின்னால் இருப்பது ஸிலிக்கன் மார்பு. உபின் ஒருமுறை சொன்னான். இதெல்லாம் செயற்கையானதில்லை ஷீத்தல்?

உபினுக்கு இவற்றின் ரகசியம் எப்படி தெரியும்? இந்த மார்பகங்கள் எப்போதும் எதிர்த்து நிற்கும். ப்ளாஸ்டிக் பூக்கள் போலவா, ஷீத்தல்? உபின் கேட்பான்.

படிப்பகம்

www.padippakam.com

'சொன்னான்' - 'சொல்வான்' - இல்லை இல்லை உபினை நிச்சயம் இறந்தகாலத்தில் குறிப்பிடமுடியாது. நிச்சயம். ஷீத்தல் பெருமூச்செறிந்தாள். மனமே அமைதியடை அமைதியடை. உபின் எல்லா படங்களையும் எடுக்கட்டும். ஷீத்தலின் இமயமலைப் பயணம் முடிவுக்கு வரட்டும். ஒருவேளை எப்போதாவது யாரேனும் ஒருத்தர் கதம்குரியில் நிரந்தரமாக வசிக்கலாம்.

சுஜன்கபிர் அறைக்குள் நுழைந்தான். அந்தப் படங்கள் இன்னும் அப்படியே சிதறிக்கிடந்தன. அவற்றைப் பார்த்தபடி அவன் கேட்டான். ஏன் உபின் ரவிக்கைக்கு பின்னால் என்ன இருக்கிறது என்பதில் அவ்வளவு ஆழ்ந்து போய்விட்டான்?

ஷீத்தலால் பதில் சொல்ல முடியாது. உஜன் பணத்தை எடுத்துக் கொள்ளவில்லை.

3

கங்கோரும் அவளது இயற்கையான சிக்கலான வியர்வைச் சுரப்பிகள் அல்லது முலைகள் ஏன் உபினின் மண்டையைப் பாடாய்படுத்தின என்பது அவனுக்குத் தெரியாது.

முலைகளை சிக்கலான வியர்வைச் சுரப்பியென்று அழைக்கலாம். அதில் ஏராளமான கொழுப்பு இருக்கிறது. இந்த சுரப்பித்திரள் மிகவும் வசீகரமானது. அதில் பதினேழு பால்சுரக்கும் பிரிவுகள் உள்ளன. அந்த சுரப்பிகள் முலையின் மையப்பகுதிவரை செல்கின்றன. பிரசவத்தின்போது உடலின் ரத்தம் பாலாக மாறுகிறது.

உபினுக்கு இவையெல்லாம் தெரியும். அவனுக்குத் தெரியும். திரவ ஸிலிக்கனின் அருள்பெறாத இயற்கையான மார்பகம். எனவே தனித்துவம் மிக்கது. கங்கோரும் அவளது மார்பும் ஆபத்திலிருப்பதாக அவன் உணர்ந்தான்.

அவன் டெல்லிக்குப் போவதற்குமுன் அருணாச்சலுக்குப் போயிருக்கவேண்டும், வழியில்தான் அந்த எண்ணம் உதித்தது. அவன் போகவேண்டிய இடம் ஜரோவா.கல்கத்தாவில் இறங்கி, தலையைப் பிய்த்துக்கொண்டு ட்ரெயினில் கோமோவுக்கு ஓடி அப்புறம் பஸ் பிடித்து- இப்படியாக சியோபுராவுக்கு வந்தான். பிறகு ட்ரெயின், மத்புராவில் தங்கல், அப்புறம் ஜரோவா.

ஆனால் மதிய வெயிலில்கூடஅனைத்தும் நிசப்தத்தில் இருந்தன. ஜரோவாவில், இரவு கவிந்ததைப் போல. ஜரோவாவில்இரவுகள் நிசப்தமாயிருக்கும், பகல்கள் இரைச்சலாயிருக்கும். இப்போது பகல்களும்கூட நிசப்தமாயிருந்தன. கங்கோர் கூட்டத்தின் குடிசைகள், தடுப்புகளைச் சுற்றிலும், ஓடுகள்வேய்ந்த கிடங்குகளைச் சுற்றிலும், அவர்களது துணிகள் செடிகளின்மேல் காயவில்லை, கிணற்றடிகளில் சந்தடி இல்லை.

எங்கே, எங்கே எங்கே?

கடையிலிருந்து டீ வாங்கி வரட்டுமா? வாட்ச்மேன் கங்கோரின் கூட்டம் எங்கே?

குளிக்கிறீர்களா?

எங்கே அவர்கள்?

காண்ட்ராக்டர் மார்க்கெட் பகுதியில் திரிந்து கொண்டிருந்தான். அவனுக்குத் தெரியவில்லை, கடைக்காரர்கள் எவருக்கும் தெரிந்திருக்கவில்லை.

உபின் ஹெஷிகோராவுக்குப் போனான். லாத்மிக்குப் போனான், கிராமம் கிராமமாகப் போனான். லாத்மியில் சாராயபோதையில் மிதந்துகொண்டிருந்த கங்கோரின் கணவன் கங்கோர் என்ற பெயரைக் கேட்டதும் காறித்துப்பினான்.

நம்பிக்கையே இல்லாமல், ஒரு குழந்தை அழுததை உபின் கேட்டான். எலும்பும் தோலுமாய் கறுப்பு நிறத்தில் பன்னிரெண்டு வயதுப் பெண்ணொருத்தி ஒருவயது பையனை இடுப்பில் சுமந்தபடி நின்று கொண்டிருந்தாள். அந்தப் பையன் கங்கோருடைய குழந்தையாக

படிப்பகம்

www.padippakam.com

இருக்க வேண்டும். எங்கேயோ பயங்கரமான சதி நடக்கிறதுஅதனால்தான் இந்த ஜனங்கள் பாறைபோல மௌனமாக இருக்கிறார்கள்.

அந்த காவலாளி சொன்னான். கங்கோர் ஜரோவாவுக்கு வந்துதான் ஆகவேண்டும்- கங்கோர் மோசமான காரியமொன்றை செய்துவிட்டாள்.

போலீஸும் ஜரோவாவுக்கு வரப்போகும் நிலை.

உபின் திரும்பிவிட்டான். பயங்கரமானவொன்று எங்கோ நடந்திருக்கிறது. இந்த தேசத்துக்கு அது தெரியாது. உபினின் மண்டைக்குள் பூமி குலுங்கியது, தரை விரிசல் கண்டது. பிளவு எரியும் மணலை கக்கியது, மூடிக்கொண்டது. மீண்டும் பிளந்தது. உஜன்! உபின் உணர்ந்து கொண்டான். ரயில் தடதடத்துப் போய்கொண்டிருந்தது. அவன் மீண்டும் ஜரோவாவுக்கு வந்தாக வேண்டுமென்பதை அவன் உணர்ந்து கொண்டான்.

4

உபின் வந்திறங்கியபோது, ஜரோவா தனது மௌன சபதத்தை உடைத்துவிட்டிருந்தது. அதே கடைகள், சொற்களால் விவரிக்கமுடியாத கடைகள், எண்ணெயில் பொரித்த இனிப்புகளையும், வறுவல்களையும் விற்கும் கடைகள். பஸ்களின் சக்கரங்கள் கிளப்பிய புழுதியடர்ந்த கடைகள் சந்தை நாளில் மாட்டு வியாபாரம் வழக்கம்போல நடந்தது. உபின் தனது மனதின் ஆழத்தில் கங்கோர் அங்குதான் இருக்கிறாள், நிச்சயமாக அங்குதான் இருக்கிறாள் என்பதை உணர்ந்தான். காவலாளி அவனைப் பார்த்தான், முறைத்தான். எங்கோ 'சோளி க்கே பீச்சே' பாடல் ஓடிக்கொண்டிருந்தது.

போனதரம் உன் பையை விட்டுவிட்டுப் போய்விட்டாய்?

அந்தப் பையை வைத்திருக்கிறாயா?

என்னுடைய அறையில் இருக்கிறது, கங்கோரையா தேடிக்கொண்டிருக்கிறாய்?

எங்கே அவள்?

அவள்...

காவலாளி பேசிக்கொண்டே போனான். நீங்கள் படம்பிடித்து அவளைப் பாழாக்கிவிட்டீர்கள் சார், இல்லையென்றால் அவளுக்கு எப்படி அவ்வளவு துணிச்சல் வரும்?

கங்கோர் என்ன செய்தாள்? செத்துப் போய்விட்டாளா?

இந்த உலகத்தில் கங்கோர்கள் சாவதில்லை சார், அவர்கள் கொல்வதற்காகப் பிறக்கிறார்கள். வெட்கங்கெட்ட நாட்டுப்புறத்துப் பெண்... உடம்பை எப்போது பார்த்தாலும் குலுக்கிக்கொண்டு....மார்க்கெட் ஆட்களைப் பார்த்து உங்களை போட்டோ பிடிக்கவில்லை என்னைத்தான் பிடிச்சார், பாருங்க...

அப்புறம்?

கங்கோர் எல்லோரையும் பாவிகளாக்கிவிட்டாள்.

எப்படி?

அவள் போலீஸைப் பற்றி புகார் சொன்னாள். நீங்கள் வந்தபோது அவள் சியோபுராவில் இருந்தாள்.

ஏன்?

பின்னே, என்ன சார்? சியோபுராவில்தான் ஜெயில் இருக்கு, பெரிய போலீஸ் ஸ்டேஷன் இருக்கு, கோர்ட் இருக்கு. சியோபுராஜில்லா இல்லையா? அங்கேதான் அவள் போகவேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com

இப்போ அவள் சியோபுராவில்தான் இருக்கிறாளா?

பின்னே எங்கே? போறது வர்றது போறது வர்றது, ஒவ்வொரு வாரமும், அவள் பின்னாடியே போலீஸ் வந்துகிட்டிருக்கு. அதனாலே காண்ட்ராக்டரோ கூலி ஆளுங்ககூட வர்றதில்ல. சிவபெருமானோட இந்த உலகத்துல பொம்பளைங்க ஜாக்கிரதையா இருக்கணும். இதைப் புரிஞ்சக்கலேன்னா உங்களுக்கு தண்டனைதான். இந்தப் பெண்ணாலதான் போலீஸ் இங்கே வருது. ஏகப்பட்டதடவை. போலீசும் ஆம்பளைங்கதான்றத இந்தப் பொண்ணு புரிஞ்சுக்கல. அவங்கள்கிட்ட வம்பு பண்ணினா அவங்களுக்கு வெறி வந்துடும்.

ஏன், ஏன், ஏன் அவங்களுக்கு வெறி வரும்?

போலீஸ் அவளை விட்டுடுமா? எப்பவாச்சும் அப்படி போலீஸ் விட்டுருக்கா? ட்ரெயின்ல ஏறி அவள் ஓடியிருக்கலாம்.ஆனால் அவள் புகார் சொன்னாள்.. அதனால அவள் வந்துதான் ஆகணும்.போலீஸ் நிச்சயம்...

கங்கோர் எங்கே? அவள் குழந்தை எங்கே?

யாராவது கிராமத்துக்குள்ளே அவளை விடுவாங்களா? அங்கே ஒரு இடமும் கிடையாது, ஜரோவாவில் ஒருத்தர்கூட அவளோடு பேசமாட்டார்கள். அவள்சியோபுராவிலிருந்து வருகிறாள். என்ன செய்வாள்னு எதிர்பார்த்தோமோ அதையே அவள் செய்கிறாள்.

எங்கே அவள்?

இருட்டியதற்குப் பிறகு நீங்கள்அவளை சந்தையில் பார்க்கலாம். நல்லா தண்ணி போட்டுவிட்டு...

கங்கோர் சாராயம் குடிக்கிறாளா?

பின்னே என்ன?

நான் அவளை இங்கிருந்து அழைத்து செல்லப்போகிறேன்.

முட்டாள்தனம் சார், உங்களுக்கு ஒரு பேர் இருக்கு. உங்களுக்கு ஒரு மதிப்பிருக்கு. ஜரோவாவை யாருக்குத் தெரியும்? நீங்கள் படம் பிடிச்சீங்க. நீங்கதான் செய்தியில எங்களைப்பற்றி வரவழைச்சீங்க. அவளை அழைச்சிட்டு போகப்போறீங்களா?

அவள் காப்பாற்றப்பட்டாகவேண்டும்.

உபினின் மண்டை வேலை செய்யவில்லை.அந்த காவலாளி சொன்னதை அவன் உள்வாங்கிக்கொள்ள முடியவில்லை.

ஆனால் போலீஸ்.

சியோபுரா போலீஸ் என்ன செய்துவிடுவார்கள்? பீஹார் போலீஸ்காரர்களிடமிருந்து எவ்வளவோ வாக்குமூலங்களை நான் பதிவு செய்திருக்கிறேன். நான் பத்திரிகை செய்திகளில் படங்களைப் பிரசுரிப்பேன்.

வாங்க, பையை எடுத்துக்குங்க, சோதிச்சுப் பார்த்துக்குங்க. போலீஸ் அடிச்சிட்டுப் போயிருப்பாங்க. குளிச்சிடுங்க. ஹோட்டல்லேர்ந்து சாப்பாடு வாங்கியாறேன். இருட்டுறதுக்கு முன்னால வரமாட்டாள்.

உபின் குளிக்கவில்லை. கட்டிலில் படுத்துக்கிடந்தான். சாயங்காலம் ஆகும்வரை தூங்கினான். உஜன் இருந்திருந்தால் அவனை சாப்பிட வைத்திருப்பான். மன உந்துதலின் வெறியிலேயே பலநாட்களை கடத்திக்கிட்டிருந்தா. உள்ளுக்குள் உடைந்து மயக்கம் போட்டு விழுந்திடுவேன்னு சொல்லியிருப்பான்.

படிப்பகம்

www.padippakam.com

உஜன், கொஞ்ச நாட்களா உபின் உடைந்து கொண்டிருக்கிறான். உபின் தோற்றுப்போனவன். இத்தனைமுறை பயணம் பண்ணி இத்தனை முறை ஜரோவாவைப் படம் பிடிக்கிறதுல என்ன பயன்? விஷமாகிப்போன தண்ணியைக் குடிச்சு பலபேர் செத்துட்டாங்க, பயிர் பொய்த்து பலபேர் ஊர்விட்டு ஊர் குடிபெயர்ந்துட்டாங்க-அந்த சமயம் உபின் மாநில அரசாங்கத்திடம் கேட்டான். நோ! இதைப் பஞ்சம்னு சொல்லமுடியாது. இப்பகூட பாருங்க எலும்பும் தோலுமா இருந்தாலும் சந்தையில நீங்க ஆடு மாடுகளைப் பார்க்குறீங்க, புழுதியும், டீசலும் நாறுகிற உணவுப் பண்டங்களைப் பார்க்குறீங்க-வீடியோ பேலஸ்கள் பிஸியா இருக்கு, இப்போதைய தேசிய கீதம் “சோளி க்கே பீச்சே” சத்தமா கேட்குது-கங்கோருக்குத் தெரியும் ரவிக்கைக்குப் பின்னால் என்ன இருக்கு என்பது.எதுவும்மாறவில்லை. நெறைய கிடங்குகள். புது போலீஸ் ஸ்டேஷன்.அவர்கள் பெண்களை கொடுமைப்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். ஆபாசச்சிரிப்பு, ஓசியில் சாப்பிடுகிறார்கள். உபின் உடைந்து போவதற்கும் காரணங்கள் இருக்கத்தான் செய்கின்றன. ஷீத்தலின் கிருமிகளற்ற வீட்டுக்குள் நுழையும்போது அவனுக்கு மூச்சுத்திணறியது. இல்லை, ஆரம்பத்திலிருந்தே வாழ்கையை மறுவார்ப்பு செய்தாகவேண்டும்.

அந்திசாயும் நேரத்தில் உபின் கண்விழித்தான். பலவீனத்தோடு ஒடுங்குவதுபோல் ஒரு உணர்வு. இப்போதெல்லாம் அந்த உணர்வு அவனை ஆட்டிப்படைத்து பம்பரத்தைப்போல அவனை சுழற்றிக்கொண்டிருந்தது. திடீரென்று இம்மாதிரியான இடத்தில் அவன் தனித்திருப்பது போலவும்-எல்லா இடங்களிலும் அவன் மட்டும் தனித்திருப்பது போலவும். இப்படியொரு தனிமையில் இயற்கையான வாழ்வின் தேவைகளை இந்த அளவுக்குப் புறக்கணித்துவிட்டு வாழ்வது அவ்வளவு சரியில்லை. கங்கோரின் வளர்ந்த மார்பகங்கள் இயற்கையானவை.செயற்கையாகத்தயாரிக்கப்பட்டவையல்ல.அவை புகைப்படமெடுப்பதற்கான பொருட்களாக அவனுக்கு முதலில் ஏன் தோன்றியது? அந்த நெஞ்சு ஆபத்திலிருப்பதாக ஏன் தோன்றியது?

என்னவொரு பைத்தியக்காரத்தனம் சார்,

போங்க போங்க உங்களக்கு வீடு இல்லையா? காவலாளிக்கு வீடுண்டு, மனைவி குழந்தைகள் உண்டு. உபினுக்கென்று எந்த வீடும் காத்திருக்கவில்லை, எங்கும் பார்ப்பது போன்ற திருமணம் எதுவும் அவனுக்கு நடந்திருக்கவில்லை.ஆனால் இப்போது அவன் கங்கோரைக் காப்பாற்றியாக வேண்டும். அவசரத்தை உணர்ந்த அவனது புலன்கள்அவனை சாராயக்கடையை நோக்கி இட்டுச் சென்றன. நாட்டுச்சாராயத்தின் அடர்த்தியான மணம், மாமிசத்தின் மசாலா வாசனை, ஊத்தை நாற்றம், திறந்த சாக்கடையிலிருந்து அதைத்தாண்டி மலக்குழிகளிலிருந்து குமிழியிடும் நாற்றம். உபின் தன் செவிகளை, மூக்கைப் பொத்திக்கொண்டு அமர்ந்தான். திடீரென்று சோளி க்கே பீச்சே ஓட ஆரம்பித்தது.

கங்கோர் அப்போதுதான் வந்து கொண்டிருந்தாள். சிவப்பும் மஞ்சளுமான பாலியெஸ்டர் துணிகளை உடுத்தியிருந்தாள், நாள்பட்ட அழுக்கின் நெடிவீச வந்துகொண்டிருந்தாள்-உபின் பதற்றத்தோடு நடுங்கியபடி கண்களை உயர்த்தினான்-அடர்த்தியான நிறம் கொண்ட ரவிக்கை, திமிரும் முலைகள், எண்ணெய்தடவி பின்னிவிட்ட தலைமுடி, கிளர்ச்சியூட்டும் சந்தேகப் பார்வை.

உபினும் கங்கோரும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டார்கள். கூர்மையான அனுபவப்பட்ட முறுவலொன்று கங்கோரின் உதடுகளில் பூத்தது. யாரரோ சில ஆட்களின் கைகளை அவள் தள்ளிவிட்டாள். காண்ட்ராக்டர், கேமரா சார் எனக்காக ரொம்ப நாட்களா அலையிறார். இன்னைக்கு அவர்தான் என்னோட ஆள், என்ன சார்?

உபின் முன் வந்தான். அவள் தன்னை இட்டுச் செல்ல அனுமதித்தான்.

படிப்பகம்

www.padippakam.com

என்ன பண்ணனும் சார்? அவனுக்கு காண்ட்ராக்ட் போட்டுத் தருவதைத்தவிர வேறெதுவும் தெரியாது. ஆனால் பூஸன்! உன்னை நான்தான் ப்ரமோட் பண்ணினேன். இந்த வியாபாரத்துல எல்லாமே லாபம்தான்.

எல்லோரும் சிரித்தார்கள். ஒருவர் விடாமல்.

ஒருத்தன் கேட்டான். கங்கோர் உன்னோட ரவிக்கைக்கு பின்னால் என்ன இருக்கு? காதலா?

வாங்கசார்.

கங்கோர் எழுந்து கொண்டாள். என் பின்னால் வாங்க என்று சொடுக்கும் விரல்களால் விளித்தபடி நடந்தாள்.

பிறகு சிதைந்த சாலை, புதர் செடிகள், தண்டவாளங்கள் எல்லாம் விரிந்தன, உடைந்து நொறுங்கிய பஸ் ஒன்று ஓரமாய் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இப்போது எல்லாமே விற்பனைக்குதான். வேலை செய்கிற பஸ், அதுபோலவே உடைந்துபோன இந்த மஹாவீர் பஸ். அதற்கு அப்பால் சிதைந்துபோன கிடங்குகளின் வரிசை, கங்கோர் வேகமாக நடந்தாள். ஒரு குடிசையின் தகரக்கதவை உதைத்துத் திறந்தாள்.

அந்த அறைக்குள் வேறு என்ன இருந்தது என்பதை உபினால் பார்க்க முடியவில்லை. கங்கோர் விளக்கின் திரியை உயர்த்தியபடி தனக்குத்தானே நேர்முக வர்ணனை போல பேசிக்கொண்டாள்.

சியோபுராவுக்குப் போனால் இதில் இன்னும் அதிகமாகப் பணம் கிடைக்கும். ஆனால் அங்கிருக்கும் போலீஸ் ஸ்டேஷன் அவளை அங்கு நுழைய விடுவதில்லை. அவள் ஜரோவாவிலேயே இருக்கவேண்டும்.கோர்ட் கேஸ் வருகிற தேதியில் மட்டும் சியோபுராவுக்கு போகவேண்டும், தேதியை போலீஸ்காரர்கள் சொல்லுவார்கள். கங்கோர் எங்கேயாவது ஓடிவிட்டால் இதில் போதுமான பணம் வராது. அவள் எங்கேதான் ஓடுவாள். ஒவ்வொருவரும் இப்போது அறிவார்கள் கங்கோர் அவர்களை அடையாளம் காட்டியதை, போலீஸ் ஸ்டேஷனில் பேசிய பேச்சுகளை, அவர்களை அடையாளம் காட்டியதை, இப்படித்தான் எல்லாம் பறிபோனது.

கங்கோர்!

நீங்கள் என் மார்பை பலமுறை படம் பிடித்தீர்கள் சார். ஆனால் உங்களோட திட்டம் எனக்குத் தெரியும். இல்லேன்னா அவ்வளவு பணம் தந்திருப்பீங்களா?

கங்கோர்!

கங்கோர் தனது துணியை அவிழ்த்துவிட்டாளா அல்லது வெறுமனே தூக்கிக்கொண்டாளா? அதுக்கு மட்டும்னா இருபது ரூபா. நைட் முழுக்க இருக்கணும்னா அம்பதுருபா, சீக்கிரம் சொல்லுங்க.

நீ விபச்சாரமா பண்றே கங்கோர்?

பின்னே இது என்ன, தேவடியா மவனே?

நீ– கழற்று– ரவிக்கையை கழற்று–

கங்கோர் இரைந்து மூச்சுவிட்டாள். கோபம் அப்பிய குரலில் சொன்னாள். உனக்கு கேக்கலியா? தொடர்ந்து போட்டுக்கிட்டேயிருக்காங்களே, பாடிக்கிட்டேயிருக்காங்களே, என்மேல பசங்கள ஏவிவிட்டு–ரவிக்கைக்கு பின்னால் என்ன இருக்கு..ரவிக்கை..சோளி க்கே பீச்சே...சோளி க்கே

இல்லை கங்கோர்–

படிப்பகம்

www.padippakam.com

இல்லை கங்கோர்_

நீயும் ஒரு தேவடியா மகன்தான்டா....என் மார போட்டோ புடிச்சேயில்ல.. சரி நான் காட்றேன்..ஆனா ஒண்ணு உன் பாக்கெட்ல இருக்குற எல்லாத்தையும் எடுத்துக்குவேன்...சரியா...

ஹரிக்கேன் விளக்கு உருவாக்கிய நிழலுருப் படிவில் இரண்டு நிழல்கள் வன்மமாக இயங்குவது தெரிந்தது. கங்கோர் தனது ரவிக்கையைக் கழற்றினாள். கழற்றி உபின்மீது வீசியெறிந்தாள். பாரு, பாரு, பாரு, வைக்கோல் பதர், குப்பை - என்ன இருக்குதுன்னு பாரு.

முலைகள் இல்லை. இரண்டு காய்ந்த தழும்புகள், சுருக்கம் படிந்த தோல், தட்டையாக இரண்டு எரிமலைப் பிளவுகள் நெருப்புக் குழம்பை உபின்மீது துப்பின-கேங் ரேப்..கடித்துக் குதறி கேங் ரேப்..போலீஸ்..கோர்ட் கேஸ்.. மீண்டும் ஒரு கேங் ரேப்..லாக்-அப்பில்...இப்போது ஜரோவாவிலிருந்து சியோபுராவுக்கு..சியோபுராவிலிருந்து ஜரோவாவுக்கு...காண்ட்ராக்டர் ஆள்பிடித்துத் தருகிறான்...ஜனங்களைக் கலக்கி பயமுறுத்தி..அந்தப் பாடல் ஒலிக்கிறது..அந்தப் பாடல்...

உபின் தள்ளாடி நிலையின்றி எழுந்து நின்றான்.

கங்கோர் அவனது பாக்கெட்டுகளில் லாவகமாக கையைவிட்டாள், பேண்ட் பாக்கெட்டுகளில் அதை துழாவினாள்..என்னவொரு வன்மையான கோரமான நாற்றம் அவள் உடம்பில்..அவள் தரையை எட்டி உதைத்தாள்.

உபின் வெளியே வந்தான், கங்கோர் இப்போதும் அலறிக்கொண்டு, பாடிக்கொண்டு, தகரத்தாலான குடிசைச்சுவர்களை தறிகெட்டு உதைத்துக்கொண்டிருந்தாள். உபின் ஓடினான். ரவிக்கைக்குப் பின்னால் இருப்பது சாதாரண விஷயமில்லை; அதற்குப்பின்னால் மக்கள் சீரழிக்கப்படுகிறார்கள், உபின் விரும்பியிருந்தால் அவன் தெரிந்து கொண்டிருக்கலாம், தெரிந்திருக்கலாம்.

உபின் ரெயில்வே தண்டவாளங்கள் நெடுக ஓடினான்.

5

உஜன் வெகுநாட்கள் கழித்து அங்கு வந்தான்.

ஜரோவா அமைதியாயிருந்தது. கிடங்குகள் இருந்த இடத்தில் புதிய பேருந்து நிலையம். ஜரோவாவுக்கு புதிதாக போலீஸ் ஸ்டேஷன் வந்திருந்தது. உஜனுக்கு செத்துப்போன மனிதன் ஒருத்தனின் பலமாதங்கள் ஆகிப்போன பழைய புகைப்படமொன்று கிடைத்தது.

கங்கோர் என்ற பெயரில் ஜரோவாவில் யாருமே வாழ்ந்திருக்கவில்லை.

காணாமல் போன உபின்பூரியை இன்னும் தீவிரமாக தேடிக்கொண்டிருப்பதாக கோப்புகளும், பிற காகிதங்களும் கூறுகின்றன. ஆனால் அந்தக் காகிதங்கள் கொண்டவை போன்ற ஃபைல்கள், மற்ற ஃபைல்களின் கீழே புதையுண்டு மூழ்கிப் போய்விடும்.

மஹாஸ்வேதா தேவி (1926)
கடந்த ஆண்டுக்கான ஞானபீட பரிசுபெற்ற வங்காளி எழுத்தாளர். இக்கதையை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் முக்கியமான பெண்ணிய விமர்சகரான காயத்ரி சக்ரவர்த்தி ஸ்பீவக்.

தமிழில் : ரவிக்குமார்

நன்றி: Breast Stories-Mahaswetadevi , Seagull books 1997

படிப்பகம்

www.padippakam.com

'தீண்டாமை' எனும் கருத்துருவாக்கம்

டாக்டர் கோ.விசயவேணுகோபால்,
இந்தியவியல்துறை, பிரஞ்சுஆய்வு நிறுவனம், புதுவை.

தமிழ்ச் சமுதாயம் மேல், கீழ், இடை முதலான பல படித்தர நிலைகளில் இயங்கி வந்தமையைத் தமிழில் நமக்கு இன்று கிடைக்கும் மிகப்பழைய நூலான தொல்காப்பியம் எடுத்துக்காட்டுகிறது. ஈ, தா, கொடு எனும் வினைச்சொற்கள் முறையே இழிந்தோன், ஒப்போன், உயர்ந்தோன் ஆகியோரோடு இணைத்துக் கூறப்படுவது இதற்கு நல்ல சான்று. ஏவலர், அடித்தொழில் செய்வோர் எனப் பல பிரிவினரும் சுட்டப்படுகின்றனர். சங்க நூல்களிலும் இத்தகு படித்தரச்சமுதாயமே எடுத்துக்காட்டப் பெறுகிறது. இழிசினன், கடைசியர் போன்ற வழக்காறுகள் அக்காலச் சமூகப் படித்தர நிலைகளை எடுத்துக்காட்டுவனவாகும். இவையன்றி இனக் குழுக்களைக் குறிக்கும் பாணர், பறையர், துடியர் போன்ற வழக்காறுகளும் காணக்கிடைக்கின்றன.அந்தணர், அரசர், வைசியர், வேளாளர் என்ற நாற்பெரும் பிரிவுகளும் சுட்டப்படுகின்றன.

இக்காலம்வரை இப் படித்தர நிலைகள் பொருளாதார, பணி ஏற்றத்தாழ்வுகளை அடிப்படையாகக் கொண்டே விளக்கப்பட்டுள்ளனவேயன்றி 'தீட்டு' (Pollution) என்ற அடிப்படையில் விளக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. மனு தரும சாத்திரம் முதலான நூல்களில் காணக்கிடக்கின்ற இந்த தீட்டுக் கோட்பாடு சோழர் காலத்தேதான் தமிழகத்தில் தலைதூக்குகிறது. முதலாம் இராசராசனுடைய கல்வெட்டொன்றில் 'தீண்டாச்சேரி' என ஊர்ப்பகுதி குறிப்பிடப்படுகிறது. இங்குத்தான் முதன்முதலில் தீண்டுதல் அல்லது தொடுதல் உயர்ந்த நிலை தாழ்ந்த நிலை மக்களிடையே கூடாத ஒன்றாகக் கருதப்பட்டமை தெளிவாகிறது. தீண்டாமை எனும் வடநெறிக்கோட்பாடு சோழர்காலத்தே வழக்குப் பெற்றமை இராசராசனின் கல்வெட்டால் புலனாகிறது.

புதுவை மாநிலத்தைச் சேர்ந்த, பாகூரில் உள்ள திருமூலநாதர் திருக்கோவிலில் பொறிக்கப்பட்டுள்ள முதலாம் இராசேந்திரனின் கல்வெட்டு தீண்டாமைக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு ஊரில் வாழ்ந்த ஒரு குழு மக்களைத் தீண்டாதார் எனக் குறிப்பிடுகிறது. முதலாம் இராசராசன் காலத்திலேயே முதலாம் இராசேந்திரனும் இளவரசனாக விளங்கியமையை வரலாற்றாய்வாளர்கள் எடுத்துக்காட்டியுள்ளனர்.எனவே கி.பி.பத்தாம் நூற்றாண்டின் பிற்பகுதிவாக்கில் இக்கோட்பாடு உரம் பெற்றுவிட்டது எனக் கருதலாம்.

பாகூரில் உள்ள முதலாம் இராசேந்திரனின் கல்வெட்டில் வாகூரில் உள்ள (இப்போது பாகூர் என வழங்குகிறது) பேரேரி நீரைப் பயன்படுத்துவோர் ஏரிவரியாக ஒவ்வொரு போகத்திற்கும் இவ்வளவு நெல் அளந்து தரவேண்டுமென்ற செய்தி குறிப்பிடப்படுகிறது. இப்படி நீரைப் பயன்கொள்ளுகிறவர்கள் ஏரி மேடிட்டுப் போகுங்காலை அதனைத் தூர்வார்க்கும் பணியில் ஈடுபடவேண்டும் என அரசன் ஆணை இடுகிறான். இவ்வரியை ஏரிவாரியம் செய்யும் பெருமக்கள் வசூலிக்கவேண்டுமெனவும் அவ்வாறு கட்டாமல் விட்டால் ஏரி வாரியஞ் செய்கிறவர்களே இவ்வரியைக் கட்டவேண்டுமெனப் பணித்துள்ளான். அரசனின் ஆணை "திருவாணை" எனக் கல்வெட்டில் குறிப்பிடப்படுகிறது.இவ்வாணையைத் திருமூலத்தானத் திருக்கோயில் பெருங்குறிப்பெருமக்கள் (கோயில் நிருவாகம் செய்வோர்)கோவிலில் கல்வெட்டாகப் பொறித்து வைத்தனர். பேரேரியின் நீரைப் பயன்கொள்ளும் உள்ளூர்ப் பெருமக்களும் குடியேறிய பெருமக்களும் தூர்வார்க்கும் பணி செய்ய மேற்கொள்ளும்போது எத்தகையவர் தேர்ந்தெடுக்கப்படவேண்டுமென்றும் அவர்கள் எத்துணை அளவு தூர்

படிப்பகம்

www.padippakam.com

வார்க்கவேண்டுமென்றும் கல்வெட்டில் திருவாணையாகக் குறிப்பிடப்படுகின்றன. இதன்படி இவ்வூரிலும் புறவூர்களினின்றும் இவ்வூர் போந்து குடியேறி ஏரிநீர்ப்பயன்கொள்ளும் விவசாயிகளுள் தீண்டாதாரொழிய நீக்கி எஞ்சியவர்களுள் பத்து வயதுக்கு மேலும் எண்பது வயதுக்குக் கீழும் உள்ளவர்கள் நான்கு சாண் உள்ள கோலால் இருகோலுக்கு இருகோல் அகலமும் (2 X 2கோல்) ஒரு கோல் மடங்கும் (ஆழம்) கொண்ட ஒரு குழியை ஆண்டுதோறும் இவ்வூர் ஏரியில் தோண்டவேண்டும். அவ்வாறு குழி தோண்டாதவர்கள் ஆண்டொன்றுக்கு காற் பொன் ஏரிவரியாகச் செலுத்தவேண்டும். ஏரி வரி வசூல் செய்ய அமைக்கப்பட்ட ஏரி வாரியத்தார் வரியைக் குறிப்பிட்டபடி வசூல் செய்யாவிட்டால் ஒவ்வோராண்டும் ஒரு கழஞ்சு பொன் ஏரி வரியாகச் செலுத்த வேண்டும். இத்திருவாணையைத் தெரிவித்தவர் கப்பூர் உடையார் என்பவர்.

தமிழ்ச் சமுதாய வரலாற்றில் முக்கியமான திருப்புமுனைக் கோட்பாட்டை விளக்கி நிற்கும் வாசகங் கொண்ட கல்வெட்டு வருமாறு:-

இக்கல்வெட்டு: முதலாம் இராசேந்திர சோழனின் 16-ஆம் ஆட்சியாண்டில் (1.12.1027) பாகூர், திருமூலநாதர், கருவறை மேற்குச் சுவரில் பொறிக்கப்பட்டுள்ளது.

1. ஸ்வஸ்தி ஸ்ரீ திரு மன்னி வளர இருநிலமடந்தையும் பொற்ச்செயற்ப்பாவையும் சிர்த்தனிச் செல்வியும் தன்பெருந்தெவியராக்கி இன்புற நெடுதுயிலூழி இடைதுறைநாடும் துடர் வனவெலிப் படர் வனவாசியும் சுள்ளிச்சூழ்மதிள் கொள்ளிப்பாக்கையும் நண்ணற்கருமுறண் மண்ணைக்கடக்கமும் பொருகட லிழத்தரையர்தம் முடியும் ஆங்கவர் தெவியர் ரொங்கெழில் முடியும் முனைவர் பக்கல் தென்னவன் வைத்த சுந்தரமுடியும் இந்திரநாரமும்.

2. தெண்டிரை ஈழமண்டல முழுவதும் எறிபடைக் கெரளன் முறைமையில்ச் சூடுங்குலதனமாகிய பலர்புகழ் முடியும் செங்கதிர்மாலையுங் சங்கதிர்வெலைத் தொல்பெருங்காவல் பல்பழந்திவும் செருவில்ச் சினவில் இருபத்தொருகால் அரைசுகளை கட்ட பரசுராமன் மெவருஞ் சாந்திமற்றிவரண் கருதி இருத்திய செம்பொற்றிருத்தகு முடியும் பயங்கொடு பழிமிக முயங்கியில் முதுகிட்டொளித்த சயசிங்கன் அளப்பெரும் புகழொடும் பிடியில் இரட்டபாடி எழரை இலக்கமும்

3. னவநெதிக் குலப்பெருமலைகளும் விக்கிரமவிரச் சக்கரகொட்டமும் முதிர்படவல்லை மதுரமாமண் (ட*) லமும் காமிடை வளைய நாமனைக்கொனையும் வெஞ்சினவிரப் பஞ்சபள்ளியும் மாசடைப்பழன சாசுணிதெசமும் அயர்வில் வண்கீர்த்தி யாதிநகர (க*)வையில் சந்திரன் தொல்குலத்திந்திரரதனை விளையமர்களத்தில்க் கிளையொடு பிடித்து பலதனத்தோடு நிறை கலதனக்குவையும் சிட்டரும் செறிமிளை ஒட்ட விஷையமும் பூசுர செர்நல்க் கொசலைநாடும் தன்

4. மபாலனை வெம்முனை அழித்து வண்டுறைசொலை தண்டபுத்தியும் இரணசூரனை முரணுகத் தாக்கி திக்கன கிர்த்தி தக்கணலாடமும் கொவிந்தசாந்தன் மாவிழிந்தொட்டத் தங்காத சாரல் வங்காளர் தெசமும் தொடுகடல்ச் சங்கொட்டடல் மயில் (ல*)னை வெஞ்சமர் விளாகத் தஞ்சுவித்தருளி ஒண்டிறல்வி யானையும் பெண்டிர் பண்டாரமும் நித்தில நெடுங்கடலுத்திரலாடமும் வெறிமலர் திர்த்த தெறிபுனற் கங்கையும் அலைகடல் நடுவுட்ப் பலகல(க)ஞ்செலுத்தி சங்கிராமவிசையொற்த்துங்கபந்மநாகிய கிடா(ர*)பொத்தரையனை வாகயம் பொ

5. ருகடல் கும்பக்கரியொடும் அகப்படுத் தூரிமயிறி பிறக்கிய பெருநெதிப் புறக்கமும்

படிப்பகம்

www.padippakam.com

ஆர்த்தவன் (நகர்)நகர்ப் பொர்த்தொழில் வாசலில் விச்சாதிரதொரணமும் மொய்த்தொளிர் புனைமணிக் க(த*)வமும் நிறை ஸ்ரீவிஜையமும் துறை நிர்ப்பன்னையும் பண்மலைஊரெயிற்றான் மலை(யூ)ரும் ஆழ்கடலகழ்சூழ் மாருடிங்கமுங் (கலங்) கலங்காவல்வினை இலங்கா கொகமுங் கொப்புறு நிறைபுனல் மாப்பப்பாளமுங் காவலம் புரிசை மெவிலிபங்கமும் மிளைபட(ட) பந்தூர்றுடை வளைப்பந்தாறுங் கலைத்தக்ெ

6. கார் புகழ் தலைத்தக்கொலமுந் தியதமர் வல்வினை மாதாமலிபங்கமுங் கலாமுதிர்க் கடுந்திரல் இலாமுரிதெசமுந் தெனக்கவார்பொழில் மானக்கவாரமுந் தொடுகடற் காவற் கடுமுரட் கடாரமும் மாப்பொரு தண்டாற்கொண்ட கொப்பரகெஸரிபந்மரான உடையார் ஸ்ரீராஜேந்திர சொழதெவற்கு யாண்டு 16-ஆவது ஜயங்கொண்ட சொழமண்டலத்துப் பவித்திர மாணிக்கவளநாட்டு வாகூரான அழகிய சொழ சதுர்வே திமங்கலத்துப் பெருங்குறிப் பெரு மக்களொ(ம்*) இவ்வா

7 ட்டை தனுநாயற்று பூர்வக்ஷத்து பிரிதிபதமும் வெள்ளிக்கிழமையும் பெற்ற பூராடத்தினாள் இரா நம்மூர் அழகியசொழன் அம்பலத்தெய் இன்னாட்டு வகைசெய்கின்ற உய்யக்கொண்டார்வளநாட்டு திருவழுந்தூர்நாட்டு கப்பூர்உடையார் நிலன்வெண்காடனாரும் இருந்து நம்முர் எரிக்கு எரியாயமாக புறவூரா இருந்து இவ்வூர் நிலத்து நெல்லும் வரகும் கரும்பும் எள்ளும் உள்ளிட்டுப் பயிர்செ(ய்*) தாரைப் பொகங்கள்டொறும் பன்னிருசாண் கொலால் இருநூற்றைம்பத்தாறு குழிகொண்ட

8. தொரு மாவாக மாத்தால் எண்ணாழி கொள்ளுங் கங்கைகொண்ட சொழன்மரக்காலால் கைய்செய்வாரத்தெய் நெல்லு இரு தூணியும் ஆட்டாண்டுதொறும் பொகங்கடொறும் அவ்வவாண்டு எரிவ(ா*) ரியஞ் செய்வாரெ எரி ஆய்யமாகக் கொள்வராகவும் புறவூர் இருந்து இவ்வூர் உழுத குடிகளை எரியாய மல்லது மற்று இறை கொள்ளப்பெறாதாராகவும் இவ்வூரிலும் இவ்வூரொடும் எறினவர்களிலும் இருந்தாரில் திண்டாத(ா*) ரொழிய நிக்கி நின்றாரில்ப் பத்து வயஸுக்கு மெல் எண்பது வயஸு

9. க்கு கிழ்ப்பட்டாரை முதலெடுத்து நாற்சாண் உள்ள கொலால் இரு கொலுக்கு இரு கொல்லகலமும் ஒரு கொல் மடற்(கு*)ங் கொண்டு பெரால் ஒரு குழி ஆட்டாண்டுதொறும் இவ்வூர் எரியிலெய் கல்லக்கடவர்களாகவும் இப்பரிசு கல்லகடவாரெ அவ்வவ்ஆண்டு எரிவாரியஞ் செய்வாரெய் குழி கல்லுவிக்க (க*) டவர்களாகவும் குழி கல்லக்கடவார் குழிகல்லாதாரெ எரியாயமாக பெரால் காற்பொன் அவ்வவ் ஆண்டு எரிவாரியஞ் செய்வாரெ தண்டிக்கொள்ளப் பெறுவார்களாகவும் குழி கல்லாதா

10. ரைத் தண்டக்கடவ பொன் அவ்வவ்ஆண்டு நெராகத் தண்டாத எரிவாரியஞ் செய்வாரை பெரால் கழஞ்சு பொன் எரியாயமாக கொள்வதாகவும் இவ்வூர் நிலம் அடுத்தபடி யன்றி அடையில் அழிந்துண்டாரை எரியாயமாக பெரால் கழஞ்சு பொன் கொள்ள பெறுவதாகவும் எரியாயமாகக் கூடுவனவெயிற்றில் எரிக்கணக்கன் ஒருவனுக்கு நிசதம் பதக்கு நெல்லும் இவ்வெரிக்கு வெண்டுவனவெயி(ற்*)றுக்கு மல்லது அழிப்பாரும் இப்பரிசு செய்யாமல் காப்பாரும் திருவாணை என்று இக்க

11. ப்பூருடையார் திருவானைகூறினமையில் இப்பரிசு செய்வதாய் இவ்வண்ணம் எரியாயமாகக் கல்வெட்டுவித்தோம் பெருங்குறிப் பெருமக்கள்ளொம் பணித்தார் பாக்கைச் சொமாந(ம்*) பிக்கிரமவித்தனும் பாவைக்கால் நின்றந(ம்*)பிபட்டனும் நெல்வங்கன் ஸ்ரீகுமாரக்கிரமவித்தனும் பணியால் உத்தமபிரியன் எழுத்து யாண்டு 18 நாள் 30(எ)ரியா(ய)ம் சுட்டி திருவாணைகூறின திருவாணைகூற்று விட்டெந் கப்பூருடையாநெந்

படிப்பகம்

www.padippakam.com

கலக மனதின் அடிப்படைக்கூறுகள்

ரணஜித் குஹா

காலனிய இந்தியக் குடியானவர்களை மதமரபு ஆட்சி புரிந்தது. மதமரபின் பக்தி என்கிற வழிபாட்டு மரபு நிலபிரபுத்துவ கருத்தியலின் அடிப்படையான தேவை என்பார் டிடி.கோஸாம்பி. பக்தி என்றாலே, ஒருவன் தன்னைத் தனது எசமானர்களுக்கு முற்றிலும் அர்ப்பணித்தலாகும். காலனிய இந்தியக் குடியானவர்கள், தங்களை ஆண்ட 'சர்க்காரி', 'சருகாரி', 'சமீந்தாரி'களுக்கு அடிபணிந்திருந்தார்கள். தாழ்த்தப்பட்ட சாதியினர், உயர்சாதி எசமானர்களுக்காக உயிர்த்தியாகம் செய்தது பற்றிய கதைப்பாடல்கள் பல உள்ளன. கூர்க் நாட்டுப்புறக் கதை ஒன்றில், செத்துப்போன எசமான் சிதைமீது தாழ்ந்த சாதி அடிமை ஒருவன் விழுந்து உடன்கட்டைஏறிய தகவல் வந்துள்ளது. இவனுக்குப் பிறகு, மூதாதையர் வழிபாட்டுத் தெய்வம் என்ற தகுதி தரப்பட்டது. உணவும், மதுவும் இவனுக்குப் படைக்கப்பட்டன.

இவ்வாறு கருத்துக்களின் அதிகாரத்தால் குடியானவர்கள் கட்டுண்டு இருந்தவரை, ஆதிக்க வர்க்கங்களுக்குரிய அதிகாரம் பத்திரமாக இருந்தது. ஆனால் உரிய காலம் கனிந்தபோது, இதே கட்டுண்ட நிலையிலிருந்துதான்,அதிகாரத்தை எதிர்த்துக் கிளம்பிய கலகத்திற்கான வலிமையும் பெறப்பட்டது. ஆயினும் இதுவே முழுமையாகப் பரிணாமம் அடைந்த வர்க்க ஓர்மையை நிர்மாணித்து விடவிலலை. அப்படிப்பட்ட வர்க்க ஓர்மையின் தொடக்கம் என்று இதனைக் கொள்ளலாம். இந்நிலையை, 'எதிர்மறையான, எதிர்த்துப் பேசுகின்ற மனப்பான்மை' என்று கிராம்சி குறிப்பிடுவார். வரலாற்றுக்காலம் நெடுகவும் ஒடுக்கப்பட்டுவந்த கீழ்வர்க்கங்கள், தொடர்ந்து எதிர்மறைச் செயல்கள் ஊடாகத்தான் சொந்த விழிப்புணர்வைச் சாதிக்க முடியும் என்பார் கிராம்சி.

பல்வேறு வேறுபாடுகளைக் கொண்ட குடியானவர் கூட்டங்களில் ஒரு பகுதியாரிடம் வர்க்க ஓர்மை உருவாகியது. இதனை எதிர்மறை வர்க்க ஓர்மை என்றே காணவேண்டும்.அதாவது, எதிர் வர்க்கத்தைப்பற்றிய, பிரபுக்களைப் பற்றிய ஓர்மை என்று கூறலாம். பதினெட்டு, பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் காலனிய இந்தியாவில் நடந்த குடியானவர் கிளர்ச்சிகளை, இடதுசாரிகள், சோசலிச, பொதுவுடைமை இயக்கங்களின் வரலாற்றுக்கு முந்தைய விசயங்களாகவே பார்த்தார்கள். இந்தக் கிளர்ச்சிகள் நூற்றுக்கு நூறு ஒரு கோட்பாட்டின்படி திட்டமிடப்பட்டு, சற்றும் பிசகாமல், ஓர்மையோடு நடந்தால்தான் அவை சரியானவை, கவனத்தில் கொள்ளத்தக்கவை என்று பார்க்கும் பார்வை இது என்று கிராம்சி குறிப்பிடுவார்.

இவர்கள் நினைப்பதைப்போல, குடியானவர் கலகங்கள் ஒன்றும் திடீரெனத் தாமாகவே கிளம்பவில்லை. தானாகவே எதுவும் தோன்ற முடியாது என்பார் கிராம்சி. இவர்கள் கலகங்கள் காரியத்தோடுதான் வெடித்தன. குடியானவன் எதிர்க்கும்போது தான் என்ன செய்கிறான் என்பதை அறிந்தே செய்தான். ஆதிக்க சக்திகளின் அதிகாரத்தை அழித்து அந்த இடத்தில் என்ன மாற்று அதிகாரத்தை நிறுத்துவது என்கிற குறிஇலக்கு இல்லாத காரணத்திற்காக இந்த எழுச்சிகளை அரசியலுக்கு முந்தியதாகக் கருத முடியாது. இந்தக் கிளர்ச்சிகளின் அரசியல் பண்.அவற்றின் எதிர்மறை மற்றும் தலைகீழ்ப்படுத்தும் நடவடிக்கையால் நிரூபணமாகிறது. இவற்றில் பழமைவாதப்போக்கும் இருந்தது; தீவிரப் போக்கும் இருந்தது. ஆளும் பண்பாட்டிலிருந்து தேர்வு செய்யாமல் மரபாகப் பெற்ற அம்சங்களும் இருந்தன. அதே சமயம், கலகக்காரர்களின் வாழ்நிலைமைகளை உருமாற்றுகின்ற தீவிரச் சாய்வும் இருந்தது.

படிப்பகம்

www.padippakam.com

காலனிய இந்தியாவில் வெடித்த இந்தக் கிளர்ச்சியின் எதிர்மறைகள் இருவகையான கொள்கைகளால் செயல்படுத்தப்பட்டன. ஒன்று: தேர்ந்தெடுத்துத் தாக்குவது. தாக்குவதில் தரம் பிரிப்பது; வரிசையறிவது. குறிப்பிட்ட எதிரிகளின் தொகுதியிலிருந்து ஓரிரு உடைமைப் பிரிவினரை இனம் கண்டு தாக்குவது. ஓர்மையான பகை என்பார் ஹில்டன்.

இரண்டு: எதிரிகளில் குறிப்பிட்ட பிரிவினர் அல்லது குறிப்பிட்ட பொருட்கள்மீது தாக்குதல் தொடங்கி, விரிவடைத்து, தாக்கப்படுகின்றவர்களோடு ஒப்புமை கொண்ட ஏனைய எதிரிப் பகுதிகளின்மீதும் தாக்குகின்ற பொதுத் தாக்குதலாக இடம் பெயருகின்ற நிலை. இந்த இயக்கத்தை ஒப்புமையும் இடப்பெயர்ச்சியும் என்று கூறலாம். நிலக்கிழார்களை எதிர்த்துக் கிளம்பிய கலவரங்களில் பல, அரசாங்கத்தை எதிர்க்கும் இயக்கமாக இடம் பெயர்ந்துள்ளன. உதாரணத்துக்கு மாப்பிள்ளைமார் கலவரங்களைச் சொல்லலாம். இதற்கு நேர்மாறாக, ஐரோப்பிய தோட்டப் பண்ணையார்களுக்கு எதிராகத் தொடங்கிய சாயக்கலகங்கள், சமீன்தாரிகளுக்கு எதிரானதாக இடம் பெயர்ந்தது. அன்றைய பிரிட்டிஷ் காலனிய அதிகாரத்தின் முத்தரப்பாக விளங்கிய சர்க்காரி, சகுகாரி, சமீந்தாரி ஆகியவற்றை எதிர்த்துக் குடியானவர்கள் கலகங்கள் கிளம்பியது ஓர் அரசியல் உண்மை. அன்றைய குடியானவரிடையே தோன்றிய மிகவும் சன்னமான அரசியல் ஓர்மை இதுவாகும்.

குடியானவர் கலகங்களின் எதிர்மறைக் குணத்தின் இன்னொரு வெளிப்பாடு, ஆதிக்கம் புரிந்த அதிகாரத்தின், அதிகாரப்பூர்வமான குறிகளை அழித்தல் அல்லது அபகரித்தல்.

'தலைகீழாகப் புரட்டுவோம்' என்பதுபோன்ற முழக்கங்கள் இதில் அடங்கும். இதே முழக்கத்தை எதிரிகளும் கையாளுவார்கள். ஓர் எச்சரிக்கைபோலக் கூறுவார்கள். கலகம் புரிபவர்கள் மட்டுமின்றி, கலகத்தை அடக்கும்சக்திகளும் 'தலைகீழாக்குதல்' என்கிற எதிர்மறை உத்தியைக் கையாளுவார்கள். அன்றைய மனுவும்கூட, அரசன் தண்டம் என்கிறஅதிகாரத்தைச் சரிவரப் பயன்படுத்தாவிட்டால், யாகத்திலுள்ள அவியைக் காகம் தின்னும், நாய் நக்கும், யாருக்கும் உடைமை பூணும் உரிமையின்றிப் போகும்; கீழானதுமேலாகும் என்று எச்சரித்துள்ளார். கலகக்காரர்கள், கீழானவற்றை மேலுக்குக் கொண்டு வருபவர்களாக ஆதிக்க சக்திகள் விளக்கும். இப்படிக் கீழ் மேலாகும் என்பது பற்றிய பார்ப்பன பயம், கலிகால முடிவில் ஏற்படப்போகும் பேரதிர்ச்சி தரும் கீழ்மேல் மாற்றம் பற்றிய சித்திரத்தில் காணப்படுகிறது. இதுபற்றி 'வாயு புராணம்' குறிப்பிடும்போது பார்ப்பனர்கள் சூத்திரரைப் போலவும், சூத்திரர் பார்ப்பனரைப் போலவும், அரசர்கள் திருடர்களாகவும், திருடர்கள்அரசர்களாகவும் மாறுவார்கள். கணவர்களுக்கு மனைவிகள் துரோகம் புரிவார்கள். வேலைக்காரர்கள் எசமானர்களுக்கு விசுவாசமின்றி நடப்பார்கள் என்று எச்சரித்துள்ளது.

இப்படிப்பட்ட கீழ் மேலாகும் நிகழ்வு, நிஜ வாழ்வில் நடக்காமல் தடுப்பதற்கு எல்லா மரபான சமூகங்களின் மேலாதிக்கப்பண்பாட்டில் கீழ் மேலாதல் சடங்கு ஆண்டுக்கு ஓரிரு தடவைகள் நிகழ்த்தப்படுகின்றன. குறிப்பாக மதத்தின் மூலமாக இது புனிதச் சடங்காக ஊடகப்படுத்தப்படுகிறது. இப்படிப்பட்ட சலுகை தரப்படும் சந்தர்ப்பங்களில் அமைப்பு ரீதியில் தாழ்த்தப்பட்டவர்கள், தங்களைவிட சமூகத்தில் உயர்ந்தவர்களின் அந்தஸ்தை தாற்காலிகமாகப் பெறுகின்ற உரிமம் பெறுகிறார்கள். வேலைக்காரர்கள் எசமானர்களாகவும், பெண் ஆண்களாகவும், குழந்தைகள் பெரியவர்களாகவும் நடிக்கிறார்கள். ஆதிக்கம் - கீழ்ப்படிதல் ஆகிய நிலைமைகளுக்குரிய காட்சி மற்றும் வார்த்தை வகைப்பட்ட குறிகள் தற்காலிகமாக இடம் பெயர்கின்றன. ஆனால் இந்தவிதச் சடங்குத்தனமான கீழ்மேல் மாற்றங்கள் எல்லாம் சமூக ஒழுங்கை அழிக்கவோ, பலவீனப்படுத்தவோ செய்வதில்லை; மாறாக அதனை மேலும் பலப்படுத்துகின்றன.

படிப்பகம்

www.padippakam.com

உதாரணமாக, மலபார் தெய்யம் பண்டிகையில், நாயர்களின் பகவதிவிழாவில், கீழ்ச்சாதியைச் சேர்ந்த சாமியாடி முகமூடியணிந்து நாயர் சாதியாருக்கு ஆசி வழங்கி, எச்சரிக்கை செய்து, தானம் கேட்டு, இறுதியில் முகமூடியைக் கழற்றிவிட்டுத் தனது சடங்குச் சேவைக்காக அவர்களிடமிருந்து உரிய சன்மானங்களைப் பெறுவதைக் கூறலாம். இதனால் நாயர்களின் மரபான அதிகாரம் மீண்டும் வலியுறுத்தப்படுகிறது. எனவே தாற்காலிகமாக அனுமதிக்கப்படும் தலைகீழ் மாற்றம் என்பது பெரும்பாலும், அதிகாரத்தை வலுப்படுத்தவே செய்யும். ஹோலி பண்டிகையும் இந்தவகைப்பட்டதே. கற்காலத்தில் தோன்றி வளர்ந்த இந்தச் சடங்கின் மீது பார்ப்பனிய இந்துத்துவம் முழு சாத்திர அந்தஸ்தை வழங்கியது. உண்ணாவிரதம், குளியல், பூசை முதலியவற்றைக் கொண்ட முழு விரதமாக இது ஆகியுள்ளது. இந்தச் சடங்கின்போது சாதி, குடும்பம், பால் உறவுகள் எல்லாம் குலைகின்றன.கெட்ட வார்த்தைகள், வசைகள், உடல்வகை வன்முறைகள் இடம்பிடிக்கின்றன. இவற்றுக்கு தண்டனைகள் இல்லை. ஏனெனில் இந்தச் சடங்குவகை மீறல்கள் நிஜமான மீறலைக் கட்டுவது கிடையாது. இவை வழுவமைதிகளைப் போன்றவை.

ஆயினும் இப்படிப்பட்ட சில சந்தர்ப்பங்களில், இதில் பங்கு பெறுகிறவர்களின் தூண்டுதலால், திடீரென மாற்றம் ஏற்படலாம். கேலியான கிளர்ச்சியாக உத்தேசிக்கப்பட்டது, நிஜமான கிளர்ச்சியாக மாறலாம். பண்டிகைக் கொண்டாட்டம் கலவரமாக ஆகலாம்.

மதச்சார்பான திருவிழாக்கள் கலவரத்தைத் தூண்டிவிட்டுள்ளன. தீபாவளி, முகரம் பண்டிகைகள் சிப்பாய்க் கலகங்களைத் தூண்டியுள்ளன. ஆனாலும், பொதுவாக இப்படிப்பட்ட நிகழ்வுகள் பாதுகாப்பு உபாயங்களாகவே உள்ளன.

இவை, சமூகத்தின் அரசியல், ஒழுங்கு அமைப்பைத் தொடரச் செய்கின்றன; அவற்றைப் புனிதப்படுத்துகின்றன. குடியானவர் கிளர்ச்சியைச் தொடர்ச்சியறுப்பாக, புனிதமற்றதாக ஆக்குகின்றன. கிளர்ச்சியின் பணி, விசயங்களை உண்மையாகத் தலைகீழாக்குவதாகும். ஆதிக்கம்-ஆட்படுதல் என்ற உறவின் அடிப்படையான ஒழுங்கைக் குலைக்கின்றது. ஒரு குறிவகைப்பட்ட உடைப்பைச் செய்கிறது.

மதம் மட்டும் சுருபம், படிமம் என்று குறிமயப்படுத்தப்படவில்லை. அரசியலும் மிக அதிக அளவில் குறிமயப்படுத்தப்பட்டுள்ளது. உதாரணமாக, நிறங்கள், வில்லைகள், கட்சிகள், சீருடைகள் போன்றவை அரசியலில் குறிமயப்படுத்தப்பட்டவையாகும். அதிகாரம்-ஆட்படுதல் என்கிற உறவு, விரிவான குறியீடுகள் மூலமாகச் செயல்படுகின்றது. இந்தக் குறிகள், விதிகளாக ஒழுங்கமைவு பெற்றுள்ளன.

அடித்தள மட்டங்களில் நூற்றாண்டுக்காலமாக பூர்வமக்கள் மரபில் புதையுண்டிருந்த குறிகளைக் கற்ற-வைதீக சக்திகள் சுமிருதிகளில், திட்டவட்டமான, சட்டங்களாக உருவாக்கி வைத்தன. புரோகிதக் குறுக்கீட்டால் இவை புனிதத்துவம் பெற்றன. இந்திய நிலபிரபுத்துவம் முதிர்ச்சி பெற்ற காலகட்டத்தில், இவை, பெற்றோர்-பிள்ளைகள், குரு-சீடன், கடவுள்-மனிதன் முதலான முக்கிய அதிகார உறவுகளாக, மாதிரிச்சட்டகங்களாக உருவெடுத்தன. ஏனைய உறவுகள், இவற்றை முன்மாதிரிகையாகக் கொண்டு முறை செய்யப்பட்டன. இதனைப் பதிவு செய்தன சுமிருதிகள். முன்னோர் கூறியவற்றில் முக்கியமான ஏறுவரிசைக் கிரமங்களை அப்படியே திரும்பக்கூறும் மரபும், புதியவற்றைப் பழைய மாதிரிச் சட்டகங்களோடு இணைக்கும் முயற்சியும் இணைந்து ஒரு பொதுவான அமைப்பு, ஒழுங்கு உருவாகி, மொத்த சமூகத்தில் ஆதிக்கம்-ஆட்படுதல் என்பதைக் குறிப்பீடு செய்தது. காலனி ஆட்சி ஏற்பட்ட காலத்தில்,அதன் கையில் நன்கு வளர்ச்சி பெற்ற குறியியல் எந்திரம் கிடைத்தது. தனது அதிகாரத்தை வெளிப்படுத்த இந்த எந்திரம் வாகாக அமைந்தது. ஆளும் பண்பாட்டில்,

படிப்பகம்

www.padippakam.com

ஆதிக்கம்-ஆட்படுதல் என்கிற உறவுமுறை எப்படிப்பட்ட விதங்களில் பிரதிநிதித்துவம் செய்யப்படுகிறது என்பதைக் காணவேண்டும். வார்த்தை அளவிலும், வார்த்தைகள் அல்லாத அளவிலும் ஆதிக்கம்-ஆட்பட்ட நிலைமைகள் பிரதிநிதித்துவம் செய்யப்பட்டுள்ளன.

முதலில் பேச்சில் வரையறுக்கப்பட்ட வேறுபாட்டைப் பார்க்கலாம்.

குடும்பத்தில், சிறியவர்கள், மூத்தவர்களைப் பெயர் சொல்லி அழைக்கக்கூடாது. அப்படி அழைப்பது மரியாதைக்குறைவு. பெண்ணுக்கு இந்தத் தடை அதிகம். அவள் கணவன் மற்றும் அவனுடைய உறவினர்களின் பெயர்களை உச்சரிக்கலாகாது. பேச்சிலுள்ள இந்த தடைகள், குருதிஉறவு, பால் வகைப்பட்ட அந்தஸ்தை வரையறை செய்தன. இதற்கும் அதிக அளவில், இவை சாதி, வர்க்க உறவில் வரையறை செய்தன. இன்ன வருணத்தாரிடம் இப்படிப் பேசலாம் என்கிறது மனு சுமிருதி. மொழியின் பயன்பாட்டை வைத்து சாதியின் அந்தஸ்தைப் பதிவு செய்யும் வழக்கம் கி.பி.பத்தொன்பதாம் நூற்றாண்டுவரை மலபாரில் இருந்து வந்தது.

பெரிய சாதிக்காரரோடு பேசுகையில் சின்னச் சாதிக்காரன் பேச்சின் ஊடே ஊடே தன்னைத் தாழ்த்திக் கேவலமாகப்பேசவேண்டும். தனது சாப்பாட்டை, வீட்டை, உடைமையைக் கேவலமாகப் பேசவேண்டியது முறை. மலபாரில், வசிக்கும் வீட்டை, சாதிக்கு ஏற்றவாறு வித்தியாசமான பெயர்களில் கூறவேண்டும். பறையன் வீடு "சேரி', செர்மான் வீடு 'சாலை' கொல்லர், தச்சர், நெசவாளர், கள் இறக்குவோர் (தீயர்) வீடு, 'புரம்' அல்லது 'குடி'. கோவில் பணியாளர் வீடு 'வரியன்' அல்லது 'பிஷரம்', நாயர் வீடு 'வீடு' அல்லது 'பவனம்' நாயர் சாதியில் ஆண் இருக்கும் இடம் 'இடம்' எனப்படுகிறது. அரசன் வாழும் வீடு 'கோவிலகம்' அல்லது 'கோட்டம்' நம்பூதிரி பார்ப்பனர் வீடு 'இல்லம்'. இவர்களில் உயர்ந்த பதவி வகிப்பவர் வீடு 'மனை' அல்லது 'மனக்கள்' என்று அழைக்கப்பட்டதாக லோகன் விவரித்துள்ளார்.

செம்மொழி, கொச்சைமொழி என்கிற ஏற்றத்தாழ்வான பிரிவிலும் ஆதிக்கம்-ஆட்படல் உறவு பிரதிநிதித்துவம் ஆவதைக் காணலாம்.

மதப்பிரசங்கம், கல்வி மற்றும் அரசியல் விரிவுரைகள், தனியார் கடிதத்தொடர்பு, பத்திரிகைத் தலையங்கம் முதலானவற்றில் செம்மொழியும், வேலைக்காரர்கள், தொழிலாளிகள், ஏவலாளர்கள், குடும்பத்து உறுப்பினர்கள், நண்பர்கள் ஆகியோரின் உரையாடல்களிலும், நாட்டுப்புற இலக்கியம் முதலானவற்றிலும் வேறுவிதமான மொழியும் காணப்படுகின்றன. தென்னிந்தியாவில் தமிழ்ப்பார்ப்பனர், பார்ப்பனர் அல்லாதார் வட்டார வழக்குகளில் காணப்படுகின்ற வேறுபாடும் இப்படிப்பட்டதே. கன்னடத்திலும் இந்நிலை உண்டு. இந்தி பேசும் வட இந்திய கிராமங்களில், தாழ்சாதி ராஜபுத்திரர் பேச்சு கொச்சைப்பேச்சாகவும், பணக்கார ராஜபுத்திரர் பேச்சு உயர்தரப் பேச்சாகவும் வகை செய்யப்படுகின்றன. பெரிய சாதிக்காரர்கள், தாழ்சாதிக்காரரிடம் கொச்சை மொழியிலும், தங்களுக்குள்ளே உயர்தர மொழியிலும் பேசுகிறார்கள். குறிப்பாக மதம், அரசியல் சம்பந்தமாகப் பேசும்போது. திராவிட மொழிகளில் செந்தமிழ்-கொடுந்தமிழ் வழக்குகள் இந்த அடிப்படை கொண்டவை. செந்தமிழ்ப் பேச்சு கற்றோர் மற்றும் அதிகாரபூர்வத்தின் குறியாக உள்ளது. இது, ஏனைய மக்களின் பேச்சில் இல்லை. அவர்கள்இதற்கு உரியவர்களாக இல்லை.

மனுவில், மொழிக்கும், பேசுபவன்-கேட்பவன் ஆகியோருக்கு இடையிலுள்ள ஏற்றத்தாழ்வான இடைவெளிக்கும் உள்ள உறவு கூறப்படுகிறது. பார்ப்பனரை அவதூறு பேசும் சத்திரியருக்கு நூறு பணமும், வைசியருக்கு நூற்றைம்பது முதல் இருநூறு பணமும், சூத்திரருக்கு வதையும் தண்டனையாகக் கூறப்பட்டுள்ளது. சூத்திரனின் பேச்சுறுப்பாக்கிய நாக்கை அறுப்பது அவதூறு பேசியதற்குரிய தண்டனை.

படிப்பகம்

www.padippakam.com

மௌனம் என்பது ஆதிக்கத்துக்கு ஆட்பட்ட நிலையின் அடையாளமாகும். தென்னிந்தியாவில் பண்ணையாட்கள், தம் ஆண்டைகளிடமிருந்து உத்தரவுகளைப் பெறுகிறபோது கையால்தம்முடைய வாயைப் பொத்துவது, பண்ணையாட்கள் மீது ஆண்டைகளுக்குள்ள அதிகாரத்தை அங்க அசைவின் மூலமாக, மொழிகடந்தவிதமாக அங்கீகரிக்கும் செயலாகும். ஆண்டையின் சொல்லுக்குச் சொல் பதில்கூறுவது ஆட்களின் அதிகப்பிரசங்கித்தனமாகக் கண்டிக்கப்படும்.

ஆனால் குடியானவர் கிளர்ச்சியின்போது இந்த முறைகள் எல்லாம் மீறப்படுகின்றன. கிளர்ந்து எழும் குடியானவர்களின் பேச்சு வன்முறையாக, சீற்றம் மிக்கதாக வசையாக, வார்த்தையின் கௌரவம் மிகவும் கீழ் இறங்கியதாக அமையும். இந்தியக் கிராமங்களில் சாதி வர்க்கங்களுக்கு இடையில் நடக்கும் பகிரங்கமான கைகலப்புக்களில் வார்த்தைகள் எப்போதும் வசைகளாகின்றன. 'கெட்ட' வார்த்தைகள் அடுக்கடுக்காக வெளிப்படும்.

குடியானவனுக்கு எழுதப்பட்ட வார்த்தை வெறுப்பைத் தந்தது. குமாஸ்தாக்களும், நீதிபதிகளும், வழக்கறிஞர்களும், நிலபிரபுக்களும் வைத்திருக்கிற அலுவலகத்தாள்கள் தன்னையும், தன் குடும்பத்தையும் நிரந்தர அடிமைகளாக்கும்; வாழ்வைப் பறித்துவிடும் என்பதை எப்படியோ அறிந்திருக்கிறான். எழுதுதல் என்பது அவனுடைய எதிரியின் அடையாளம். எழுத்து மனிதரைச் சுரண்டும். அறிவை, ஒளியைத் தராது என்று நினைக்கிறான் என்பார் லெவிஸ்த்ராஸ். அதாவது எழுத்துக்கும் அதிகாரத்துக்கும் உள்ள உறவை உணர்ந்திருக்கிறான் எனலாம்.

கிளர்ச்சிகளின்போது தங்களால் வேறு ஏதும் செய்ய முடியாத நிலையில்,குடியானவர்கள், சமீன்தாரி, சருகாரி சர்க்காரிகளிடமிருந்த ஒப்பந்தப்பத்திரங்கள், கோப்புக்கள், கச்சேரி, காடி, அரச அலுவலகங்கள் ஆகியவற்றை எரித்தார்கள். கிராமத்தானுக்கு, எழுத்து என்பது ஆதிக்கத்தின் குறியீடு. அரை நிலபிரபுத்துவ சமூதாயத்தில் ஆதிக்கப்பகுதி, எழுத்தை, எழுதுவதை மதரீதியானதாகவும், மந்திர சக்தியாகவும் கருதியது. எழுதுவது என்பது திறன் அல்ல. அருள் என்று கருதப்பட்டது. எழுதப்பட்ட எழுத்துக்கு மாந்திரீகப் பண்பு இருப்பதாகக் கருதப்பட்டது. இந்துமதத்தில் எழுத்து என்பது புரோகிதர், கணேசர், சரஸ்வதி ஆகியோரோடு சம்பந்தப்பட்டதாக, புனிதமானதாகப் பார்க்கப்படுகிறது.

இனி, மொழியல்லாத, மொழிக்குத் துணையான ஆதிக்க வெளிப்பாடுகளைக் காணலாம். இவை, சைகைகள், உடல் அசைவுகள் முதலிய குறிகளைக் கொண்டவை. இவற்றோடு காலம், இடம் ஆகியவற்றில் செய்யப்படும் இடைவெளிகளும் வார்த்தைமூலம் அல்லாதபடியான ஆதிக்க வெளிப்பாடுகளில் அடங்கும். ஒவ்வொரு சமூகமும் தனது பண்பாட்டின் அடிப்படைக் கொள்கைகளைச் சேமித்து வைக்கிற ஒரு ஞாபகமாக, உடலைக் கருதுகின்றது. இந்நிலையை எழுதப்படிக்கத் தெரிந்த சமூகத்துக்கு முந்தைய சமூகங்களில் முழுமையாகக் காணலாம். ஏனெனில் இத்தகைய சமூகங்களில் பதிவு செய்ய வேறெதுவும் இருந்ததில்லை.எனவேதான் இந்து தர்மசாத்திரங்களில் 'சைகைகள்' முக்கிய இடம் வகிக்கின்றன.

மனு சுமிருதியில் பல இடங்களில், எழுந்து நிற்றல், நெடுஞ்சான்கிடையாகப் படுத்தல், பாதங்களில் விழுதல் முதலிய சைகைகள், ஆட்பட்ட தகுதியைச் சுட்டுகின்றவையாகக் கூறப்படுகின்றன. உடலின் மொழியாகிய இந்தவித சைகைகளின் அதிகாரம், சாத்திரங்களில் மட்டுமின்றி, அரசு அதிகாரத்திலிருந்தும் பெறப்படுகின்றது.

முகலாய அரசுகள் உருவாக்கிய, சலாமிடுதல் போன்ற சைகைகள், பிரிட்டிஷார் காலத்திலும் தொடர்ந்தன. குனிதல், பாதங்களைக் கையால் தொடுதல் முதலான சைகைகள்,

படிப்பகம்

தந்தை-மகன், கணவன்-மனைவி, ஆண்டை-பண்ணையாட்கள், உயர்சாதிக்காரர்-தாழ்சாதிக்காரர் ஆகியோரிடையிலும் காணப்படுகின்றன. உயர்சாதியாரின் காலில் விழுவது, தலை தரையில்படுமாறு வணங்குவது முதலான தொன்மையான அடிமைச் சைகைகள் பேரரசுகள் எழுந்து, வீழ்ந்ததால் மாற்றம் பெறவில்லை; மாறாக, வெகு மக்களின் வன்முறைப் போராட்டங்களின் குறுக்கீடு காரணமாகவே மாற்றம் நிகழ்த்தப்பட்டது.

குடியானவர் கிளர்ச்சியின்போது குடியானவர்களின் அவமரியாதை புரியும் சைகைகள் அவர்களுடைய எதிரிகளைப் புண்படுத்தியது. இந்தவிதத் தாக்குதல், சரீரத் தாக்குதலைவிடக் குறைந்ததல்ல.

காலம், இடம் ஆகியவற்றில் உள்ள தொலைவுகளும், ஆதிக்கத்தின் அளவுகளைச் சுட்டும். முதல் மரியாதை பெறும் உரிமை, கால அளவில் முதல் நிலையில் ஏற்படுகின்ற அதிகாரத்தை உணர்த்தும். சாதிவரிசையில் இந்த முதல் மரியாதை செயல்படுகிறது. இடத்தில் உள்ள தொலைவுகளிலும் இந்த வரையறை உண்டு.அரசனுக்கு அருகில் நிற்றல், எட்டநிற்றல் என்பவை அரியாசனத்துக்கும் அவனுக்கும் உள்ள உறவைச் சுட்டின. வயதில் மூப்பு என்பது கால அளவில் உண்டாகும் அதிகார அடையாளம். பெரியவர்களுக்கு அருகில் பக்கத்தில் நடக்காமல் சிறியவர்கள் சற்றுப்பின்னே வருதல், கணவனுக்குப் பின் மனைவி தொடர்ந்து வருதல் ஆட்பட்ட நிலையின் இடவகையான அடையாளங்கள். இருக்கையில் அமர்தல், தள்ளித் தரையில் அமர்தல், தூரத்தில் நிற்றல் ஆகியவை இடரீதியில் சாதி மற்றும் பொருளாதார ஏற்றத்தாழ்வைச் சுட்டின.

மீசையை மேல்நோக்கி முறுக்கிவிடுவது இந்தியாவின் உயர்சாதியாரின் ஸ்டைல். கீழ்ச்சாதிக்காரன் முறுக்குமீசை வைத்தால் உதைத்துச் சிறைக் காப்பிட்டு ஊர் எல்லையைவிட்டே துரத்தப்படுவான். இதேபோல் உடை, அணிபவை ஆகியவற்றிலும்அந்தஸ்து அடையாளம் உண்டு. வேலைக்காரப்பெண் மூக்குவளையம் அணியக்கூடாது; கீழ்ச்சாதிப்பெண் தங்க அணிகலன் பூணக்கூடாது; பெரியசாதிப் பெண்களிலிருந்து பார்த்த மாத்திரத்திலே ஆடை, அணிகலன்களில் கீழ்ச்சாதிப் பெண்கள் வேறுபடவேண்டும் என்று விதிக்கப்பட்டது. குடை பிடிப்பதும், செருப்பணிவதும் உயர்தகுதி அடையாளங்கள். குடைபிடித்தல் என்பது பிரபுத்துவ முடியாட்சிக் காலந்தொட்டு இன்றுவரை உயர்தகுதியின் குறியீடாகத் தொடர்ந்துள்ளது.

கீழ்வெண்மணி நிலக்கிழான், கம்யூனிஸ்டுகளின் பேச்சைக்கேட்டு, கூலிச் சனங்கள் தற்போது தன்வீட்டு வராண்டாவில், செருப்புப்போட்ட காலுடன் நின்று, எதிர்த்து நேருக்கு நேர் பேசுவதை அவமரியாதையாகக் குறிப்பிட்டதைப் பார்க்கிறபோது செருப்புப் போடுவதன் பின்புலம் விளங்கும்.

அனைத்தையும்விட, ஆடை, உடைகளில்தான் அதிகபட்சமான குறிமயமாக்கல் நிகழ்ந்துள்ளன. உடலைவிட ஆடையே உயர்ந்தபட்ச குறிப்பீடாகும் என்பார் பார்த்.(Roland Barthes) இந்தியாவில், உயர்சாதியார்க்கு முன்பாக, கீழச்சாதியார்கள் தங்கள் இடுப்பிற்குமேல் ஆடை அணியக்கூடாது. தலைப்பாகை அணிவது உயர்ந்தவர்களின் தகுதி.

போக்குவரத்து முறைகளிலும் ஆதிக்க-ஆட்பட்ட குறியீடுகள் உள்ளன. கீழ்ச்சாதியார்கள், உயர்சாதியார் தெருவில் நடக்கலாகாது;அவர்கள் எதிரில் குதிரைச் சவாரி போகக்கூடாது. பல்லக்கில் போகக்கூடாது. சந்நால் கிளர்ச்சிகளில், ஆதிக்கப்பகுதியார்களின் தலைப்பாகை, குதிரை, பல்லக்கு ஆகியன அபகரிக்கப்பட்டுப் பயன்படுத்தப்பட்டன. உயர்ந்தவர்களின் அதிகாரத்தை அபகரிக்கும் நோக்கோடும்,அதனைக் கிண்டல் செய்யும் நோக்கோடும் இவை பயன்படுத்தப்பட்டன.

www.padippakam.com

குடியிருக்கும் வீடுகளின் தோற்றம் ஆதிக்கத்தின் முக்கிய அடையாளம் வீடுகளின் ஒய்யாரத்தோற்றம், கிளர்ச்சிகளின்போது சினத்தை ஊட்டியது.இவை தாக்குதலின் இலக்குகளாயின. ஆங்கிலேயர் ஆட்சியில் 'பங்களாக்கள்', வெள்ளையர் அரசின், ஆதிக்கத்தின் குறியீடுகளாயின. சந்தால் கலவரங்களில் எரிக்கப்பட்ட பங்களாக்கள் பல.

சமாதான காலங்களில், ஒடுக்கப்பட்டவன் தனது அடையாளத்தைத் தனது சொந்தப் பண்பாட்டின்படி முன்நிறுத்தாமல், தனது எதிரியின் பண்பாட்டைப் பின்பற்றுகிற எதிர்மறை ஓர்மை கொண்டவனாக இருக்கிறான். இந்தப் போக்கு, கலவரங்களின்போது அதிகரிக்கிறது. 1855-ஆம் ஆண்டில் நடந்த சந்தால் கிளர்ச்சியின்போது இரண்டு பார்ப்பனப் பூசாரிகளைக் கடத்திவந்து சரியான சடங்கு காரியங்களைச் சந்தால் இனத்தார் செய்தார்கள். மேல்வருண தருமங்களைச்சூத்திரர்கள்கடைப்பிடிப்பதுகலிகாலத்தின்அழிவு என்கிறது புராணம். இந்துமதத்தின் தலையான குறியீடு: கோவில் . இது அந்தந்தப் பகுதியில் வாழும் இந்து நிலக்கிழாரின் குடும்பத்தால் பராமரிக்கப்பட்டது. இது அவனுடைய கௌரவக் குறியீடு. அவன் வாழும் இடத்திற்கு அருகில்தான் கோவில் இருக்கும். இந்தக் கோவில், இந்து நிலச்சுவான்களுக்கும், இந்துக்களல்லாத குடியானவர்களுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலுக்குக் காரணமாகியது பலமுறை.

ஆக, ஆயுதக் கிளர்ச்சியின் முதன்மையான போர்முறை தலைகீழாக்குதலாகும்.இது ஓர் அரசியல் போராட்டம். இதில், கிளர்ச்சிக்காரர்கள் தங்கள் எதிரிகளுடைய ஆதிக்கக் குறியீடுகளை அபகரித்தார்கள் அல்லது அழித்தார்கள். இதன் மூலமாகத் தங்களுடைய ஆட்பட்ட நிலையின் அடையாளங்களை அகற்ற முயன்றனர். இதனால், தவிர்க்கவியலாதபடி இவர்களுடைய போராட்டம், எதிர்மறையாகக் கட்டமைக்கப்பட்டதாக ஆகியது. எந்த அதிகார அமைப்பிற்கு எதிராகக் கிளர்ந்து எழுமாறு தள்ளப்பட்டதோ அதிலிருந்தே தனக்குரிய கருவிகளை எடுத்துக்கொண்டது. இவ்வாறு குடியானவன், 'கடன்வாங்கிய மொழியில்' பேசினான். இந்த மொழியைத்தவிர (எதிரியைத் தவிர) அவனுக்கு வேறெதுவும் தெரியாது. 'ஒரு புதிய மொழியைக் கற்றறிந்த ஆரம்ப நிலையிலுள்ள ஒருவன் எப்போதும் அதனைத் தனது தாய்மொழிக்கே மொழி பெயர்க்கிறான' என்று கார்ல் மார்க்ஸ் கூறியதைப் பொருத்திப் பார்க்கலாம்.அதாவது, குடியானவனுக்குத்தான்பிறந்த, அரை நிலபிரபுத்துவ அரசியலின் மொழிதான் தெரியும்.அதையேதான் மொழிபெயர்த்தான். இது, ஒரு தலைகீழ் இயக்கம். எதிர்மறையான ஓர்மையில் நிகழ்த்தப்பட்டது. மனு அன்று எச்சரித்தபடி, கீழ், மேலானதாக ஆக முயன்றது.

'தலைகீழாக மாற்றுதல்' என்பது அவசியம்தான். ஆனால் இதுவே, வன்முறையான குடியானவ எழுச்சிகளுக்குப் போதுமானதாக இல்லை. இச்செயலை ஆட்சியாளர்கள் 'குற்றம்' என்றார்கள். இருக்கிற வித்தியாசங்களை வரிசை மாற்றுவது கடும் தண்டனைக்குரிய குற்றமாக சுமிருதிகள் கூறியதை நோக்கவேண்டும். குற்றம் வேறு; குடியானவர் கலகம் என்பது வேறு. இரண்டுமே இரு வேறுபட்ட வன்முறைகளிலிருந்து பெறப்படுபவை. குடியானவர் கலகம் என்பது பொதுமக்கள் மற்றும் மக்கள் குழுவின் சம்பவம். குற்றம் என்பது ஒருசிலர் அவரது சில குழுக்களின் சூழ்ச்சியால் செயல்படுவது. கிளர்ச்சி என்பது பாதிக்கப்பட்ட மக்களின் வெளிப்படையான செயல், வெகுமக்கள் செயல்.குடியானவர் கிளர்ச்சிகளை அதிகார வட்டம் சூழ்ச்சி-சதிக் கோட்பாட்டை வைத்துத்தான் அணுகியது. இவர்கள் தாமே தலைமை ஏற்றுக் கிளர்ச்சி நடத்த முடியாது; இவர்களுக்குப் பின்னால் கிராமத்து உயர் வகுப்பைச் சேர்ந்த சதிகாரர்கள் இருப்பதாக நம்பியது. கிராமக் கிளர்ச்சியில் பங்கெடுத்தவர்களை அதிகாரப்பூர்வ ஆவணங்களில் ரௌடிக் கும்பல்கள் என்றே குறிப்பிடப்படும். ஆவணங்களில், 'கொள்ளையர் கிராமம்' என்றிருந்தால், அரசின் ஆயுதசக்திகளை எதிர்த்துத் திரண்ட கிராமம் என்பது பொருள். 'தொற்றுநோய்', 'நஞ்சு' என்று ஆவணத்தில் குறிப்பிடப்பட்டிருந்தால்,

படிப்பகம்

www.padippakam.com

கிளர்ச்சி செய்யும் கிராமக் குழுக்களிடையே உருவாகும் ஒருமைப்பாடு என்பது பொருள். 'வெறியர்கள் என்றிருந்தால், சிலவித மீட்புவாத அல்லது தூய்மைவாத சித்தாந்தங்களால் ஊக்கம் பெற்ற கலகக்காரர்கள் என்பது பொருள். 'சட்டமின்மை' என்றிருந்தால், மக்கள் எவற்றைத் தீய சட்டங்கள் என்று முடிவு செய்கிறார்களோ அவற்றைப் புறக்கணிக்கிறார்கள் என்பது பொருள். எனவே கலகக்காரன் என்றால் குடியானவன்; குற்றம் என்றால் தலைகீழாக்க முனைதல் என்ற விசேசமான அர்த்தம் இருக்கிறது.

கிராமப்புறங்களில் வறுமை, பஞ்சம், வறட்சி மிகுந்த காலங்களில் குடியானவர்களில் கொள்ளைக்காரர்கள் எண்ணிக்கை கூடியது. அன்றும் சரி, இன்றும் சரி. பசி-வன்முறை ஆகியவற்றுக்குள்ள தொடர்புகளை அரசாங்கங்கள் கவனிக்கத் தவறுகின்றன. வறுமையைத் தீர்க்க குடியானவ இளைஞர்கள் கொள்ளைக்கூட்டங்களில் சேர்ந்தார்கள். இவர்களுக்கு அன்றைய வெள்ளை அரசாங்கம், 'குற்றமரபினர்' என்று பெயரிட்டது. குடியானவர்கள், வறுமையால் உந்தப்பட்டு பல்வேறுவகையான குற்றங்களை அங்கீகரித்தனர்; அதற்கு ஒத்துழைத்தனர். ஆனால், இவர்களுடைய வன்முறைகள், லேவாதேவி வர்க்கத்தை நோக்கியே செலுத்தப்பட்டிருப்பதை நோக்கும்போது, குடியானவர் எழுச்சியில் அதன் வன்முறைக்கு அடியிலுள்ள வர்க்க குணத்தைக் காணலாம்.

இடச்சூழலை ஒட்டிய மொழிப் பிரயோகத்தால் அர்த்தம் தீர்மானிக்கப்படுவதைப்போல குற்றமும் புதிய சமூக பின்னணியில் வைத்துத் தீர்மானிக்கப்படவேண்டும்.ஏற்கனவே குற்றவாளிகள் என்று சட்டவிரோதிகளாக்கப்பட்ட உதிரிக் குழுக்கள், பிறகு பெரிய அளவில் கிராமப்புற எழுச்சிகளைத் தோற்றுவித்தன.தித்து மிர் என்கிற மல்யுத்தவீரன் பெரிய நிலச்சுவான்களுக்கு அடியாள். சிறை சென்று வந்த இவன் மெக்கா சென்று சையத் அகமதுவின் சீடனாகிச் சீர்திருத்தக்காரனாகி வருகிறான். வந்தவன் நிலபிரபுக்களுக்கு எதிராக, மக்களின் வன்முறையை திருப்பிவிடுவதற்காகப் போராடுகிறான். அன்று, கொள்ளைக்காரர்கள் கலகக்காரர்களாக மாறியதே பெரும்பாலும் நிகழ்ந்தது.

பொதுவாக இந்தக் கிளர்ச்சிகள் எல்லாம்,அரசன் அல்லது கடவுளின் பேரால் கிளர்ச்சி செய்து, மக்களின் எதிரிகளை அழிக்கப்போவதாக அறிவித்துள்ளன. இதனால்தான், கிளர்ச்சிக்காரர்கள், மக்களிடமிருந்து பணம், உணவு, குடி ஆகியவற்றை வரியாக வசூலித்தார்கள்.

குடியானவ கிளர்ச்சிகளில் கூட்டுவன்முறை, சமூக உழைப்பு ஆகிய கூறுகளைக் காணலாம். சமூக உழைப்பு என்பது மீன்பிடித்தல், வேட்டையாடுதல், விவசாயம் ஆகியவற்றில் வெளிப்பட்டது. காவல் நிலையத்தைச் சூறையாடப்போகும்போது 'நல்ல அறுவடை', 'கொழுத்த கடா சிக்கிவிட்டது' முதலிய வேளாண், மற்றும் வேட்டை தொடர்பான முழக்கங்கள் வெளிப்பட்டன. சமூக உழைப்பிற்காக மக்களை ஒருங்குதிரட்டும் குறிகள் விவசாயப் போராட்டத்திற்கு அணி திரட்டும் குறிகளாக தொடர்புபடுத்தப்படலாயின. சாதாரண காலங்களில், கொம்பை ஊதுவது, சில குழுக்களுக்கு 'மீன்பிடித்தல்' என்பதன் குறி, சிலவற்றுக்கு 'வேட்டையாடுதல்' என்பதன்குறி, சிலவற்றுக்கு 'அறுவடை' என்பதன் குறி. கிளர்ச்சியின்போது தாக்குதலுக்குத் தயார் நிலையை அறிவிப்பதற்கும் கொம்பை ஊதினார்கள். கிளர்ச்சித் தாக்குதலும், சமூக உழைப்பும் சங்கமமாகின்றன. சந்தால் கிளர்ச்சிகளில் பெண்களும் கூடைகளோடு கலந்துசென்று தானியங்களைக் கொள்ளையடித்து வந்தார்கள். கொள்ளைப் பொருட்களை, தலைவன்,பூசாரி, பறையடிப்பவன், மற்றவர் என்று அவரவர் தகுதிக்கு ஏற்ப பங்கு போட்டுக் கொண்டார்கள்-வேட்டைப்பொருள், மீன் ஆகியவற்றைப் பங்கு போட்டது மாதிரி இது.

படிப்பகம்

www.padippakam.com

காலனி ஆட்சியை எதிர்த்த கிராமப்புறக் கலவரங்களில் நான்கு முறைகள் அல்லது போராட்ட வடிவங்கள் காணப்பட்டன.

1. நாசப்படுத்துதல்: எதிரியின் குறியீடுகளை நாசப்படுத்துதல். சமீந்தார், மகஜன் பங்களாக்கள்,ஆலைகள், இருப்புப்பாதைகள்,காவல்நிலையம், நிர்வாகக் கட்டிடங்கள், அரசு அலுவலகங்கள், அதிகாரிகளின் குடியிருப்புக்கள்ஆகியவற்றை இடித்து அழித்தல்.

2. எரித்தல்: மேற்படி இடங்களுக்கு எரியூட்டுதல் கிளர்ச்சிக்காரர்களுக்குப் பொருளாதார ஆதாயம் தரக்கூடியவற்றையும் தீயிட்டு அழித்தார்கள்.இருப்புப்பாதை நிர்மாணவேலையில் சந்தால் இன மக்களுக்கு நிரம்ப வேலை வாய்ப்பு இருந்தும் அதனை அழிக்க முனைந்தனர். இந்த வேலை வாய்ப்பினால் சமீந்தார், மகஜன்களின் கோரப்பிடியிலிருந்து தப்பிக்க நல்ல வாய்ப்பு இருந்தும்கூட அழித்தார்கள். இதற்குக்காரணம், இருப்புப்பாதை வேலையால் கிடைக்கும் பணம், வெள்ளி, தங்கம் என்கிற பொருளாதார நலனைவித தங்கள் கௌரவம், தங்கள் இனப்பெண்களின் மானம் ரயில்வே சாகிபுகளால் பறிபோகாமல் இருப்பதே பெரிதாக அவர்களுக்குப்பட்டுள்ளது. சந்தால்கள், தங்கள் எதிரிகளின் மகசூல்களை அழித்தார்கள். எனவே பொருளாதார நலனைவிட அரசியல் நோக்கம்தான் பிரதானமாக இருந்தமை தெரிகிறது. கலக வன்முறை உலகமெங்கும் அரசியல் ரீதியானது; மேலதைக்கீழானதாக்குவது. குற்றவியல் வன்முறை எதிரியின் பொருளாதாரத்தை அபகரிப்பது.

3. உண்ணல்: உண்பது என்பது அரசியல் இயக்கத்தின் பிரிக்கமுடியாதபடி ஓரங்கம். தலைகீழாக்கலின் ஒருகருவி இது. கலகக்காரர்கள் தங்களின் 'பொதுச் சேவை'க்காக எதிரிகள் மீதுவிதிக்கப்பட்டதண்டனையாக இது அமைந்தது. இந்தியக் கிளர்ச்சிகளில் எதிரிகளின் உணவை விருந்தாக உண்பது குறித்து அதிகச் சான்றில்லை.இந்துச் சாதிய வழக்கங்கள், தீட்டு போன்றவை இதற்குக் காரணமாகலாம்.

4. *கொள்ளையடித்தல்:* உலக முழுக்க நிகழ்ந்துள்ள எல்லாவித எழுச்சிகளிலும் காணத்தக்க அம்சம் இதுதான். நாசப்படுத்துதல், எரித்தல்,சூறையாடல் என்பவற்றின் ஆதரவோடு நிகழ்த்தபபட்டது.கொள்ளையடித்தல். இவ்வாறு சூறையாடுவது கடவுளின் கட்டளை என்றார்கள் சந்தால் மக்கள். இவை எல்லாமே எதிரிகளின் சொத்துக்களைக் குறி வைத்துஅழித்த செயல்களே.பணத்தைவிட, தானியம், கால்நடைகளே அதிகம் கொள்ளை போயின. 'ஆநிரை கவர்தல்' இதில்முக்கியமானது. குடியானவர் நோக்கம் திருடுவதல்ல. எதிரிகளின் மூலாதாரங்களை அழிப்பது; அவர்தம் அதிகாரத்தை நிர்மூலம் செய்வது. கொள்ளையடிப்பது, யுத்தத்தின் விரிவாக்கம். யுத்தத்தைத் தொடர்ந்து நீடிப்பதற்காகக் கொள்ளையிடுவது அவசியமானது. மேற்குறித்த நான்கு அம்சங்களையும் தனித்தனியாகப் பார்த்தால் குற்றம் போலவே தோன்றும். இவை அனைத்தும் முழுமையான, நன்கு உட்செறிக்கப்பட்ட வன்முறையாகும்.

இந்தக் குடியானவர் கிளர்ச்சியில் குடியானவர் தம் வில், அம்பு மூலம் புரிந்த கொலைகளை அதிகாரவட்டம் மிகைப்படுத்தியது.வலுவான ஆயுதம் கொண்ட இராணுவத்தை எதிர்கொண்ட குடியானவர்கள் புரிந்த கொலைகள் தற்காப்புக் கொலைகளே. கொலை என்பது கலகத்தை ஒடுக்கிய ஆதிக்க சக்திகளின் வழிமுறையாகும். கிளர்ச்சியில் இந்த வழிமுறை இல்லை. குடியானவ கிளர்ச்சியில் செய்த கொலைகள் குறிப்பிடத்தக்கவை அல்ல. எதிரியின் படை,கூலிப்படை,ஆள்காட்டிகள், கருங்காலிகள் ஆகியோரைக் குறிவைத்துக் கொல்லுதல் ஒருமுறை; பழைய எசமான், லேவாதேவி, நிலப்பிரபு செய்த கொடுமைகளுக்கு, கிளர்ச்சியின்போது வஞ்சம் தீர்ப்பது ஒருமுறை.

படிப்பகம்

www.padippakam.com

கலகக்காரனின் ஓர்மை எதிர்மறையானது; விடுதலை எய்திய ஓர்மையல்லஇது. மாறாகப் பழைய அதிகார உறவுகளைத் திருப்பிப்போட முயன்றது; பழம் பண்பாட்டிலேயே சிக்கிக்கொண்டது. இந்தப்பழம் பண்பாடு குடியானவனுக்குத் தன்னைவிடத் தகுதி கூடியவனின் உடல்மீது மரியாதையுணர்வை ஏற்படுத்தியிருந்தது. இப்படிப்பட்ட உடலுக்கு எதிராகத் தாழ்ந்தவர்கள் கையை உயர்த்துவது பாவம் என்றிருந்தது அரசன், பார்ப்பனன், தந்தை, குரு முதலானவர்களின் உடல்களைத் தொடர்வது நிலவுடைமையாளரின் உடல்கள். இந்த உடல்களின் ஆளுபண்பாட்டின் குரலை, கிளர்ச்சிகளாலும்கூட விலக்கி மறுக்கமுடியவில்லை. அதிகாரத்தைச் சேர்ந்தோரைக் கலகக்காரர்கள் கொல்லாமல்விட்டதற்குக் காரணம், இரக்கமோ கருணையோ அல்ல; தங்களது ஆட்பட்ட நிலைமையை அகவயமாக முழுசாக மீற முடியாத பலவீனம்தான். கலகத்துக்கு அதிகாரம் பற்றிய முதிர்ச்சியடைந்த, நேர்மறையான கருத்தாக்கம் ஏதும் உருவாகவில்லை. அதனால் அதனிடம் மாற்று அரசு மற்றும் அதிகாரம் எழவில்லை. அதனிடம் எதிர்மறைதான் இருந்தது; புனர் நிர்மாணம் அதன் நோக்கமில்லை.

கலகங்களின் அதிவேகமான பரவலுக்கு அதிகாரபூர்வ வட்டத்தால் சரியான விளக்கம் தர முடியவில்லை. கற்ற சிலருடைய சூழ்ச்சி என்றுதான் பார்த்தது. கலகச் செய்தி எழுத்தால் அன்றி வாய்வார்த்தையால் பரவியது. தகவலை அறிவித்தலும் பரப்புதலும் ஏக காலத்தில் நிகழ்ந்தன. கொம்பு, பறை, அம்பு, மாமரக்கிளை, இலை மூலம் பரவின. கிளர்ச்சியில், அநாமதேயப் பேச்சு என்கிற 'வதந்தி'தான் வேகமாகப் பரப்பிய ஊடகமாகும். வதந்தி, எதிரிகளுக்குக் கிலியை உண்டாக்கியது; மக்களிடம் கலகம் பற்றிய செய்தியைப் பரப்பிற்று. வதந்தி மூலம் முதலாளியத்துக்கு முந்திய சமூகங்களில் சமூகவயமாக்கம் நிகழ்கிறது. வதந்திக்கு அசுரத்தனமான வேகம் உண்டு. கதைகள், பேரழிவுகள் பற்றிய தீர்க்கதரிசனங்கள் படுவேகமாகப் பரவுவதற்கு வதந்தி முக்கிய காரணமாகும். மக்கள் கூடிய சந்தைகளில்தான; வதந்தியின் சமூகவயமாக்கும் காரியம் செயல்பட்டது. வதந்தியை வெகுசனச்சொல்லாடல் என்பார்கள். இது, கதை-தொன்மம் என்ற இரு துருவங்களுக்கு இடையில் அமைகிறது. அநாமதேயம், வதந்திக்குத் திறந்த தன்மையை அதன் சுதந்திரத்தை வழங்குகிறது. 'ஒரு பிரதிக்கு ஆசிரியர் ஒருவரைத் தருவது என்பது அந்தப் பிரதிமீது ஒருஎல்லையைத் திணிப்பதாக ஆகும்; அதற்கு ஒரு இறுதி வார்த்தையைத் தந்து எழுத்தை முடித்துவிடுவதாகும்' என்று பார்த் கூறியது. வதந்திக்கும் பொருந்தும். வதந்திக்கு இறுதியான வார்த்தை என்று சீல் வைக்கப்படுவதில்லை. புதிய அர்த்தத்தை வாங்கிக் கொள்ளும் ஒரு கொள்கலம் போல அது திறந்தபடியே இருக்கிறது.

எதிரிகளின் பார்வையில் வதந்தி என்பது திட்டமிட்டுப் பரப்பப்படுவதாகத் தெரியும்.ஆனால், இது, கலகக்குழுவின் கருத்தியல் சக்தியால், விசையால் தானாகவே நிகழ்கிறது. எளியமக்களின் வதந்திகள் அற்பமாகவும், நம்பமுடியாததாகவும் இருந்தாலும், சந்தேகத்திற்கு இடமின்றி, இவற்றின் நோக்கம், காலனிய அரசின் பாதகமான விவசாயக் கொள்கைகள் பற்றியதாக இருந்தது.

அரை நிலபிரபுத்துவத்தைச் சேர்ந்த குடியானவன், இருக்கிற நிலைமைகள் மனிதத் திட்டத்தாலன்றி, கடவுளின் திட்டத்தால் நடப்பதாக நம்பினான். உறவுகள், நிறுவனங்கள், அதிகாரச் செயல்பாடுகள் எல்லாம் மதத்தால் மேல்நிர்ணயம் செய்யப்படுவதாகக் கருதினான். இதனால், கிளர்ச்சியின்போது பெரும்பாலான அரசியல் நிகழ்வுகளை, பகுதி-மதரீதியான சட்டங்கள் மூலமாக பொருள் கொண்டான். ஆகவே, வதந்திகளும், மதப்பண்புகளை உட்கொண்ட அரசியல் ஓர்மையாக இருந்தன. முண்டா குடியானவர்களை மாபெரும் ஆயுதப் போராட்டத்திற்குத் திரட்டியது, வதந்தியால் கிளப்பப்பட்ட ஒரு மதவகைப்பட்டஉற்சாகம்தான். 1807-ஆம் ஆண்டில் வேலூர் சிப்பாய்க் கலகத்தில் பறங்கி அரசாங்கம் எல்லா இந்துக்களையும்

படிப்பகம்

www.padippakam.com

கிறிஸ்தவர்களாக மத மாற்றம் செய்யப்போகிறது; உப்பில் பன்றி, பசு இரத்தத்தைக் கலந்துள்ளது; ஒவ்வொரு நகரம், கிராமத்திலும் நாடு பூராவும் சர்ச் கட்டப் போகிறது என்ற வதந்தி எழுந்து கலகத்தைப் பரப்பியது.

இங்கே, குடியானவன் தனது தலையெழுத்துத் தன்னால் செயல்படுவதாக எண்ணாமல், தன்னைமீறிய வெளிச் சக்திகளால் தீமானிக்கப்படுவதாக எண்ணினான். இது பொய்யான ஓர்மைதான்; ஒருவித அந்நியமாதல்தான். கார்ல் மார்க்ஸ் கூறியபடி இது, சுய-அந்நியமாதலின் உற்பத்திதான். அரசியல் விசயங்கள், மத விசயங்களாகக் கருதப்பட்டன. இந்த ஓர்மையைச் சுமந்து சென்றது 'வதந்தி'.

குடியானவர்கள் தங்களுடைய அற்பமான ஆயுதங்களுக்கு ஈடாக, இராணுவ தளவாடங்கள்; அமைப்புக்களின் இல்லாமைக்கு ஈடாக நம்ப முடியாத கற்பிதங்களை வைத்துக்கொண்டார்கள். தங்களுடைய கலகத்தலைவர்களுக்கு தொன்மத்தனமான சக்திகளைக் கற்பித்துக் கொண்டார்கள். தலைவர்களுக்கு புனிதர், புரோகிதர், மருத்துவர், போதகர், தீர்க்கதரிசி முதலானவர்களின் செயல்களைக் கற்பித்தார்கள். அற்புதங்கள், வசியங்கள் தீர்க்கதரிசனங்கள் யாவும், குடியானவர்களுக்குத் தங்களைவிட பலம் வாய்ந்த எதிரிகளுக்குத் தாக்குப்பிடிக்கும் சக்திவாய்ந்த தாக்கங்களாக அமைந்தன.

1900வரை நடந்த கலவரங்கள் எல்லாம் சிப்பாய்க் கலகம் தவிர-இனக்குழு குடியானவர் கிளர்ச்சிகளே.இவற்றில் குருதிப்பிணைப்பும், பிராந்திய இடப்பிணைப்பும் பின்னிப் பிணைந்திருந்தன. இந்தப் பின்னணியில், நிலைமையின் வெளிச்சத்தில், இதனைக் காலனிய காலகட்டத்தின் இந்திய தேசியம் என்று அறிவாளர் கற்பித்த வரலாறு உண்மை அல்ல என்பது புரியும். இது வெகுமக்கள் தங்களை ஈடுபடுத்திய செயல்பாடாகும். இது, காங்கிரஸ் கட்சியின் சட்டபுத்தகத்திற்கோ, காந்தியத்திற்கோ எப்போதுமே ஒத்துப்போகாது. மாறாக, இது தனது வலிமையை, நீண்டதொரு ஒடுக்கப்பட்டோர் மரபிலிருந்து பெறுகிறது. இந்த மரபு, இந்திய அரசியலுக்கு மகாத்மா காந்தி நுழைவதற்கு வெகுகாலத்துக்கு முந்தியது, அல்லது நேருவின் குடியாவனர் பற்றிய கண்டுபிடிப்புக்கு மிக முந்தியது. என்றாலும், இந்த ஒடுக்கப்பட்டோர்மரபின் தாக்கத்திற்கு உள்ளானது தேசியம் அல்ல; விவசாயப் பிரச்சனையே.

குறிப்பு: ரணஜித் குஹாவின் ஆய்வு, 1783 முதல் 1900 வரையுள்ள 117 ஆண்டுக்காலக் கிளர்ச்சிகளைப் பற்றியது. இதற்கான ஆதாரங்கள்: போலீஸ், படைவீரர்,அதிகாரிகள், நிலபிரபுக்கள் ஆகியோரின் கடிதங்கள், ரிப்போர்ட்டுகள், தகவல்கள், குறிப்புக்கள், தீர்ப்புக்கள், சட்டங்கள், முதலிய ஆவணங்கள்.

கிளர்ச்சி செய்யும் மக்களிடையே புழங்கிய வதந்திகள், ஒற்றர்கள் ஒட்டுக்கேட்ட உரையாடல்கள், கைதிகள் தந்த வாக்குமூலங்கள், நீதிமன்ற நடவடிக்கைக் குறிப்புக்கள், சர்க்கார் அதிகாரிகள்,அவர்களுடையகிராமத்துஒட்டுண்ணிகளின் சொல்லாடல்கள்.அதிகாரபூர்வமானவர்கள், கலகக்காரர்களின் ஒழுக்கக்கேடுகள், சட்டவிரோதம், விரும்பத்தகாதவை, காட்டுமிராண்டித்தனம் முதலியவைபற்றிஎழுப்பிய சொல்லாடல்கள்.

(Peasant என்ற சொல் குடியானவர் என மொழிபெயர்க்கப்பட்டுள்ளது)

-Ranajit Guha, 'Elementary Aspects of Peasant Insurgency in Colonial India'
(Delhi: Oxford University Press, 1983)
என்ற ஆங்கில நூலின் சுருக்கமான தமிழ்த் தொகுப்பு.

-ராஜ் கௌதமன்

படிப்பகம்

www.padippakam.com

இரட்டை வாக்குரிமை

பழமலய்

"இரட்டை வாக்குரிமையா–
எங்களுக்கெல்லாம் ஒண்ணு;
இவங்களுக்கு ரெண்டா!
ஒத்தைக்கே இந்தக்குதி
குதிக்கிறானுங்க;
ரெட்டைன்னா அவ்வளவுதான்!"

.....

எசமானுங்களா, இது,
இரட்டை, ஒற்றை விவகாரம் அல்ல.
எங்கள் தன்மானம்–
எங்கள் சுயமரியாதை–
இருப்பைப்பற்றிய பிரச்சினை.
இடத்தைப் பற்றிய பிரச்சினை
இங்கே தெருவில் நின்று பேசுகிறவர்கள்
இன்னும் கொஞ்ச தூரந்தான்–
பேரணியுடன் வாருங்கள்.
எங்களுக்கென்றும்
உண்டாகியிருக்கிறார்கள்
தலைவர்கள்
இளையபெருமாளைப் போன்றவர்கள்
சொல்வார்கள்:
1946–
சிதம்பரம் தாலுக்கா புளியங்குடி.
எல்லா ஆண்களைப் போலத்தானே
எங்கள் ஆண்களுக்கும்
முளைக்கிறது மீசை.
எக்ஸ்–சர்வீஸ் மேன் வடமலை, ஆண்
எச்சரிக்கையை மதிக்கவில்லை.
நீலமேகப்படையாட்சி நெருப்பு வைக்கிறார்!
கட்டி வைத்து–கொள்ளி வைப்பது போல.
வேலைக்கு வரமுடியாமல் போனால்
வீட்டுவாயிலை முள்வைத்து அடைக்கிறார்!
உடையூர் முத்துக்குமரன் பிள்ளை.
இரவிக்கை போடக்கூடாது நாங்கள்.
எங்கள் முலைகளை மட்டும்
எல்லோரும் பார்க்க வேண்டும்
சொல்லியிருக்கலாம்;
கோமணமும் கட்டக்கூடாது என்று!

எல்லாம் போய்விட்டது; அந்தக்காலம்;
எவ்வளவோ மாறிக்கொண்டு வருகிறது–
என்கிறீர்கள்.
உ.பி.இல்–
முதல்வர் மாயாவதி தொகுதியில்–
சிறுமியை–ஆறே வயது–
சிற்றூர்ப்பையன் கற்பழிக்கிறான்.
கர்ப்பப்பையே அகற்ற வேண்டிய அளவுக்குக்
கவலைக்கு இடமாகக் கிடக்கிறாள்
மருத்துவமனையில்.

நாங்கள் இல்லை என்கிறீர்களா :
நல்லதை வரவேற்கின்றோம்.
இரட்டை வாக்குரிமையை–
இதையும் ஒரு மாற்றமாக
இங்கு வரவேற்க வேண்டும் நீங்கள்.

9.5.97

படிப்பகம்

www.padippakam.com

அலைகள்

போலி மோதல்களில் நக்ஸல்பாரிகளும், அப்பாவி மக்களும் போலீஸால் கொல்லப்படுவது தொடர்பான உண்மைகளைக் கண்டறிய 1996 டிசம்பர் 3ந் தேதி முதல் 6ந்தேதி வரை அகில இந்திய மனித உரிமை செயலாளிகளைக் கொண்ட குழு ஒன்று ஆந்திர மாநிலத்துக்கு சென்றது.இக்குழு நிஜாமாபாத், அடிலாபாத், கரீம்நகர், வாரங்கல் ஆகிய மாவட்டங்களில் பயணம் செய்து விவரங்களைத் திரட்டியது. 7.12.96ல் ஹைதராபாத்தில் பத்திரிகையாளர் கூட்டமொன்றை நடத்தி அறிக்கையும் வெளியிடப்பட்டது. 1996ஆம் ஆண்டில் மட்டும் 148 பேர்களை போலீஸார் கொலை செய்திருந்ததாக அக்குழு தமது அறிக்கையில் தெரிவித்தது. அக்குழுவில் புதுவை மாநில பி.யு.சி.எல்.செயலாளர் கோ.சுகுமாரன் கலந்து கொண்டிருந்தார்.

இந்த உண்மையறியும் குழு நிஜாமாபாத் மாவட்டத்தில் இண்டல்வாய் என்ற கிராமத்துக்கு 3.12.96ல் சென்றிருந்தது. அப்போது அவர்களிடம் ஒரு புகார் மனு தரப்பட்டது. தெலுங்கில் டைப் செய்யப்பட்டு கையொப்பமிடப்பட்டுள்ள அம்மனுவை மயிலாராம் கிராமத்தைச் சேர்ந்த நூத்துபல்லி நரஸய்யா என்பவர் குடும்பத்தினருடன் வந்து கொடுத்தார்.அவர் மாதிகா என்ற சாதியைச் சேர்ந்தவர். உண்மையறியும் குழுவுக்கு உதவியவர்கள் நரஸய்யாவை அழைத்து வந்திருந்தனர். அந்த மனுவில் கண்டுள்ள விவரங்கள் வருமாறு:

மதிப்புக்குரிய தேசிய மனித உரிமைகள் குழுவினருக்கு,

நாங்கள் மைலாராம் கிராமத்தைச் சேர்ந்த ஏழை அரிசனங்கள். நானும் என்னுடைய மகனும் கூலி வேலை செய்து நாளைக் கடத்தி வந்தோம். என்மகன் ராஜுவும், சத்யவ்யா என்ற மேல்சாதிப் பெண்ணும் (காப்பு சாதியைச் சேர்ந்தவர்) காதலித்து வந்தனர். திருமணம் செய்து கொள்ள விரும்பினார்கள்.இந்த விஷயம் இந்த கிராமத்தில் எல்லோருக்கும் தெரிய வந்தது. ரேடிகல்சுக்கும் தெரிய வந்தது. அவர்கள் இங்கே வந்து “நீங்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கக்கூடாது. இது விஷயமாக அந்தப் பெண்ணையும் ஒன்றும் செய்யக்கூடாது நாங்கள் வந்து தீர்ப்பு சொல்கிறோம்” என்று கூறிவிட்டுப் போய்விட்டார்கள். அதன் பிறகு இருபது நாட்கள் கழித்து ரேடிக்கல்ஸ் வந்தார்கள்.அன்றைக்கு ராத்திரி அந்தப் பெண்ணின் உறவினர்களான நிலப்பிரபுக்களோடு அவர்களும் சேர்ந்து கொண்டு ஊருக்கு வெளியே வரச்சொல்லி எனது மகனை அழைத்துச் சென்றார்கள். நியாயம் அநியாயம் பற்றி எதுவும் விசாரிக்காமல் தீர்ப்பும் சொல்லாமல் என் மகனை அடித்து காலை கையை முறித்து அங்கேயே கொலை செய்து போட்டுவிட்டுப் போய்விட்டார்கள்.

அப்படி கோரமாக கொன்றுபோட என்மகன் என்ன தவறு செய்தான்?

நடந்த விஷயத்தில் தவறு செய்தது எனது மகன் மட்டும்தானா? அந்த மேல்சாதி நிலப்பிரபுக்கள் அந்தப் பெண்ணை ஒரு வார்த்தை கூட கேட்காதது ஏன்?

ஒரு பக்கமாக நீதி சொன்னரே அந்த ரேடிக்கல்ஸின் தலைவர் அது ஏன்? இதை எல்லோருக்கும் தெரியப்படுத்தவேண்டும்.

நாங்கள் அரிசனங்கள். மாதிகா சாதியைச் சேர்ந்தவர்கள். நாங்கள் மேல்சாதிப் பெண்ணை காதலிக்கும் உரிமை கிடையாது என்கிறார்கள். ரேடிக்கல்சுக்கும் சாதிவெறி இருப்பது இதில்

படிப்பகம்

www.padippakam.com

தெரியவருகிறது. பீப்பிள்ஸ் வார் அண்ணாக்களுடைய கட்சி ஏழை மக்களுக்கான கட்சியென்று நினைத்தோம்.இதிலிருந்து பார்த்தால் பீப்பிள்ஸ் வார் கட்சியும் பணக்காரங்க கட்சிதானென்று தெரிந்துவிட்டது.

எங்கள் கிராமத்து இளைஞர்கள் ரேடிக்கல்சுக்கு ஆதரவு தருவதாகக் கூறி போலீஸ் சித்ரவதை செய்கிறது. அதே அரிசன இளைஞர்களை ரேடிக்கல்சும் அடிச்சு கொடுமைப்படுத்துறாங்க. அப்போ இந்த அரிசனமக்கள் எங்கே போய் வாழறது?

இப்படிக்கு,
நூத்துபல்லி நரஸய்யா

நகல்:

1. மாவட்ட மனித உரிமைக்குழு,
2. பத்திரிக்கையாளர்கள்,
3. மாவட்ட அம்பேத்கர் யுவஜனசங்கம்.

(நக்ஸல்பாரிகளை ரேடிக்கல்ஸ் என்றே ஆந்திரமக்கள் அழைப்பார்கள். இந்த மனுவின் மூலப்பிரதியின் நகல் வேண்டுவோர் எங்களுக்கு எழுதவும்.)

2

தமிழ்நாட்டில் 1996ஆம் ஆண்டில் மட்டும் இருபது தலித்துகள் சாதிமோதலில் கொலை செய்யப்பட்டுள்ளனர். பத்து தலித் பெண்கள் கற்பழிக்கப்பட்டுள்ளனர். 1997 மார்ச் வரையிலான மூன்று மாதங்களில் மூன்று தலித்துகள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர், இரண்டு தலித் பெண்கள் கற்பழிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஐந்து ஆண்டுகளில் தலித் மக்கள் மீதான வன்கொடுமைத் தாக்குதல்கள் தொடர்பாக மாநிலம் முழுவதும் 750 வழக்குகள் பதிவாகியுள்ளன. இந்த வருடத்தின் முதல் மூன்று மாதங்களில் மட்டும் 158 தாக்குதல் தொடுக்கப்பட்டுள்ளன.

இந்த ஆண்டில் அறுபத்தைந்து கிராமங்களில் தலித் மக்களுக்கெதிராகத் தொடர்ந்து தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறது.

கடந்த ஐந்து ஆண்டுகளில் தமிழ்நாடு முழுவதும் பி.சி.ஆர் செல்களின் மூலம், தலித் மக்களுக்கு எதிரான 1500 வழக்குகள் விசாரிக்கப்பட்டன. ஆனால் நான்கு வழக்குகளில் மட்டும்தான் குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டுள்ளனர்.

3

தலித் முதல் இதழ் குறித்த விமர்சனக் கூட்டம் 16.5.97ல் நெய்வேலியில் நடைபெற்றது. பலதரப்பட்ட பின்புலங்கள் கொண்ட பத்துக்கும் மேற்பட்டோர் இதழை விமர்சித்துப் பேசினார்கள். “சி.சு.செல்லப்பாவின் ‘எழுத்து’ இதழ் முதற்கொண்டு தற்போது வரும் சிற்றிதழ்கள் வரை விடாமல் படித்து வருகிறேன். வால்டர் பெஞ்சமினின் கவிதைபோல எளிமையும் ஆழமும் கொண்ட கவிதையை நான் படித்ததில்லை. தமிழ் இலக்கியகளத்தில் சூதாட்டமாடிக் கொண்டிருக்கும் ஜாம்பவான்கள் தோல்வியைத் தழுவுவதன் வெளிப்பாடுதான் இந்த இதழ்” என்று பாராட்டினார் எழுத்தாளர் சுதாகர் கத்தக். எஸ்.யு.சி.ஐ அமைப்பைச் சேர்ந்த

www.padippakam.com

தோழர் கணேசன் பேசும்போது பாரதிகண்ணம்மா திரைப்படம் பற்றிய விமர்சனம் மேலோட்டமாக உள்ளதென்றார். "சுதந்திரப்போராட்டம் குறித்து வெளிவராத தகவல்களையும் வெளிப்படுத்தவேண்டும். குறிப்பாக நேதாஜி, சித்தரஞ்சன்தாசுக்கு எழுதிய கடிதம் முக்கியமானது" எனவும் குறிப்பிட்டார்.

பேராசிரியர் கல்யாணி தமக்கு மிகவும் பிடித்த பகுதி இளையபெருமாளின் பேட்டிதான் எனக் குறிப்பிட்டார். "வேதமாணிக்கம் பற்றிய குறிப்பு கல்வியின் முக்கியத்துவத்தை உணர்த்தியது. சிதம்பரத்தில் நந்தனார் பள்ளி இல்லாவிட்டால் யார் படித்திருக்க முடியும்? என் அப்பா ஒரு தலையாரி. நான் அவர்களுக்கு பத்தாவது பிள்ளை. படிப்பு இல்லாவிட்டால் இப்படி வந்திருக்க முடியாது. கல்விப் பிரச்சனைகளுக்கு முக்கியத்துவம் தரவேண்டும். இதில் தலித் இயக்கங்கள் கவனம் செலுத்த வேண்டும். மகாராஷ்டிர மாநிலத்தில் நடந்த AILRC மாநாட்டுக்கு ஒருமுறை சென்றிருந்தேன். அங்கு பல மாநிலங்களிலிருந்தும் வந்திருந்தவர்கள் அவர்கள் மாநிலங்களில் தலித் இலக்கியத்தின் நிலை பற்றிப் பேசினார்கள். தமிழில் இல்லையே என்று வருத்தப்பட்டேன். அம்பேத்கார்தான் அரசியலதிகாரம் பற்றிப் பேசினார். சிறையைப் பற்றிய கட்டுரையும், பழனிபாபா பற்றிய குறிப்பும் சிறப்பாக உள்ளன. சிறையைப்பற்றிய அச்சத்தை உடைத்தவர் பழனிபாபா. சிறந்த மனிதர். தன்னார்வக்குழுக்கள் பற்றி எச்சரித்து தலையங்கத்தில் எழுதப்பட்டிருப்பது பாராட்டுக்குரியது. சொந்தக்காலில் நிற்கவேண்டும்" என்று பேசினார் கல்யாணி.

தலித் எழில்மலை:

"இப்படி ஒரு இதழை நடத்துவது சுலபமான காரியமல்ல. விமர்சனங்கள் எதுவானாலும் ஏற்றுக் கொள்கிற நிலையில்தான் ஆசிரியர் குழுவினர் உள்ளனர்.

நமது மண்ணில் நிகழ்ந்த ராஜீவின் மரணத்தை ஐந்து விதமாக சித்திரிக்க முடியும். செய்தி எப்படி எழுதப்படுகிறதோ அதற்கேற்ப அர்த்தம் மாறுகிறது. உண்மையை மீண்டும் மீண்டும் சொல்கிற இதழாக இது இருக்கும். இப்போது நாம் பொய்யர்களோடு வாழவேண்டி உள்ளது.உண்மையைச் சொல்வதற்கு இப்போது யாருமில்லை. அதனால்தான் பெரியார் உண்மை என்ற இதழைத் துவக்கினார்.

ஏடு முக்கியம். அம்பேத்கர் தனக்கான ஏடு இல்லாமல் எப்போதும் இருந்ததில்லை. 1857ல் நடந்த போராட்டம் ஒரு சாதிக்கலவரம்தான். டிவில்டெல் கமிஷன் தனது அறிக்கையில் இதைக் குறிப்பிட்டுள்ளது. கீழ்ச்சாதிக்காரர்கள் அதிகாரிகளாக வந்தால் மற்றவர்கள் மதிக்காமல் கலவரம் செய்கிறார்கள் என அந்த அறிக்கை குறிப்பிடுகிறது.

நமக்கு கருத்தியல் முக்கியம் பார்ப்பனீய எதிர்ப்பு என்பதை நமது கருத்தியலாகக் கொண்டு, அப்படி எதிர்ப்பவர்களை நமது ஆதரவாளர்களாகக் கொண்டு இந்த இதழை முன்னுக்குக் கொண்டு செல்வோம்."

எல்.இளையபெருமாள்:

"அம்பேத்கருக்குப்பிறகு எல்லோரும் ஏற்றுக் கொள்கிற தலைவர் இந்த சமுதாயத்துக்கு இல்லை. நாம் தனியாக சாதிக்க முடியாது. ஆதரிக்கும் அனைவரையும் உட்படுத்தவேண்டும்.

நான் பலரை உருவாக்கினேன்.கையைக் காட்டியவர்களெல்லாம் ஜெயித்தார்கள். ஆனால் இப்போது யாருமில்லை. நீதி கட்டாயம் கை கொடுக்கும். காந்தியை விமர்சிப்பது காலத்தின் கட்டாயம். படித்தவர்கள் இதை முன்னெடுத்துச் செல்வது கண்டு பலருக்கும் பொறாமை ஏற்படும். இதை அழிக்க முனைவார்கள். நெல்பானை எப்போது விரியுமென்று நெல்லுக்கும்

படிப்பகம்

www.padippakam.com

தெரியாது அடுப்புக்கும் தெரியாது. தலித் மக்களுடைய நிலை அப்படி உள்ளது.

மதம் சமத்துவத்தை தராதபோது நான் ஏற்கமாட்டேன். என்னுடைய பேட்டியில் கூடுதலாக ஒரு செய்தி. கே.பி.எஸ்.மணிக்கு சீட் கொடுக்கக்கூடாதென்று மூப்பனார் மட்டுமல்ல கோசல்ராம், வெங்கட்ராமன், சுவாமிநாதன் எல்லோரும் சொன்னார்கள். மணிக்கு உள்ள குணங்கள் ராமசாமிப் படையாட்சிக்கும் உண்டு. சீட் தராவிட்டால் இருவர் பெயரையும் எடுங்கள் என்று இந்திராவிடம் நான் கூறினேன். இரண்டுபேருக்கும் சீட் தரப்பட்டது.

கல்யாணி தேவர்சாதியில் பிறந்தவர். ஆனால் இன்று இருளர்களுக்காகப் போராடுகிறார். திண்டிவனம் கிடங்கல் பகுதியில் இரண்டாயிரம் வீடுகள் தலித் வீடுகள். ஆனால் ஒரு தலித்பையனை கட்டிப்போட்டுஅடித்தபோது கல்யாணிதான் போய் கேட்டார், போராடினார். இவரைப் போன்றவர்கள் நமக்கு ஆதரவாயிருப்பது நமக்குப் பெரிய பலம்.

நீங்களெல்லாம் பிரபாகரனைப்போல தற்கொலைப்படையாக மாறாமல் இந்த மக்களுக்கு சுதந்திரம் கிடைக்காது. இப்போது தென்மாவட்டங்களில் தலித்துகள் கொல்லப்படுகிறார்கள். எவனாவது, தவறு செய்தது இவர்கள்தானென்று சொல்ல முன் வருகிறானா?

நீங்கள் எடுத்துக்கொண்டுள்ள பணி வெற்றி பெற என்னுடைய ஆதரவு எப்போதும் உண்டு."

கூட்டத்தில், வேலு, போஸ்கோ, கலைநேசப்பிரபு, அறிவரசன், தி.க.மாவட்டத்தலைவர் ஜெயராமன், பகுஜன் சமாஜ் கட்சியின் தலைவர் பொன்.நாகப்பன் ஆகியோரும் பேசினர்.

4

மார்க்ஸின் "மூலதனம்" விரைவில் தமிழில் வெளிவரவுள்ளது. சென்ற இதழின் தலையங்கத்தில் மூலதனம் எத்தனை வால்யூம்கள் என்பதுகூட தலைவர்கள் பலருக்குத் தெரியாது எனக் குறிப்பிட்டிருந்தோம். மார்க்சிய அரசியல் பொருளாதாரம் குறித்த ஆழமான அறிவு கட்சித் தலைவர்களுக்கு இல்லை என்பதை வெளிப்படுத்தவே அப்படி எழுதப்பட்டது. அது மட்டுமின்றி ஆங்கிலத்தில் மூன்று தொகுதிகளாக மூலதனம் வெளியானது என்பதைத்தான் நாம் அறிந்திருப்போம். நான்காவது வால்யூம் ஒன்று இருக்கும் செய்தியை அல்தூஸர் குறிப்பிடுகிறார். மூலதனம் முதல்தொகுதி ஃப்ரெஞ்ச் மொழியில் வெளியானபோது அதற்கு எழுதிய முன்னுரையில் அல்தூஸர் இந்தக் தகவலைக் கூறுகிறார். "மார்க்ஸின் ஆயுட்காலத்தில் முதல் தொகுதி மட்டும்தான் வெளியானது. எங்கெல்ஸால் இரண்டு மற்றும் மூன்றாவது தொகுதிகள் வெளியிடப்பட்டன. 1885ல் இரண்டாவது தொகுதியும் 1894ல் மூன்றாவது தொகுதியும் வெளிவந்தன. 1905ல் காவுட்ஸ்கியால் நான்காவது தொகுதி வெளியிடப்பட்டது. ஜெர்மனியிலும், ஃப்ரெஞ்ச் மொழியிலும் நான்கு தொகுதிகளும் கிடைக்கின்றன" என்று எழுதியுள்ளார் அல்தூஸர். (பார்க்க: Lenin and Philosophy and other Essays, NLB London. 1977) தியாகு தமிழில் மொழி பெயர்த்துள்ளது எத்தனை வால்யூம்கள்?

5

"தலித் என்ற தனித்துவம்" நூலை முன்வைத்து புதிய கலாச்சாரம் இதழ் விமர்சனமென்ற பெயரில் அவதூறுகளை அள்ளி வீசிக்கொண்டிருக்கிறது. ஆந்திராவில் மக்கள் யுத்தக்குழுவினர் நடத்திவரும் ஆயுதப்போராட்டம் பற்றிய தகவல்களை வெளியிட்டு அதில் குளிர்காயும் இவர்கள் காகிதப் போராட்டம் தவிர வேறெதையும் அறியாதவர்கள். இவர்கள் மார்க்ஸின் படைப்புகளைக் கற்காமல் தம்மை மார்க்சியவாதிகளென கூறிக்கொள்வது

படிப்பகம்

www.padippakam.com

போலவே அம்பேத்கரின் எழுத்துக்களைப் படிக்காமல் தலித்தியம் பற்றிய விமர்சனத்தில் ஈடுபட வந்துவிட்டார்கள். தலித்தியமோ, பின் நவீனத்துவமோ மூலநூல்களை இவர்கள் கண்ணாலும் பார்த்ததாகத்தெரியவில்லை... ஃபூக்கோ, தெரிதா என எல்லோரையும் (சிதிலப்பட்ட) செவிவழிச் செய்தியை வைத்தே விமர்சிக்க ஆரம்பித்துவிட்டார்கள். தமிழ்த்தேசப் பொதுவுடைமைக் கட்சியினர் இன்னும் ஒரு படி மேலே போய் புத்தகம் போட்டு விற்கவும் துணிந்துவிட்டனர். எந்த நூல்களிலிருந்து மேற்கோள்களை எடுத்து பயன்படுத்துகிறோமென எழுதும் அறிவு நேர்மையேயில்லாத இவர்களோடா விவாதிக்க முடியும்? கல் கிள்ளிக் கை நோவாருண்டா?

6

முதல் இதழ் குறித்து நிறைய கடிதங்கள் வந்துள்ளன. எழுத்தாளர்கள் அசோகமித்திரன், அம்பை, திலீப்குமார், சூரியதீபன், பழமலை ஆகியோர் பாராட்டி எழுதியுள்ளனர். "பல பிரிவுகளில் ஒரே பொருளைப்பற்றி கதை, கட்டுரைகள் சிறப்பாகத் தேர்ந்தெடுத்திருக்கிறீர்கள். இதே தரத்தில் ஒவ்வொரு இதழையும் தயாரிப்பது சாத்தியமா என வியப்பாக இருக்கிறது..எவ்வளவு நுட்பமான செய்தியையும் பரவலாகவும், கொச்சைப்படுத்தாமலும் சொல்ல முடியுமென்று நான் நம்புகிறேன்" என்கிறார் அசோகமித்திரன். "முழுக்கவும் படிக்கும் வகையில் இதழ் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இதழ் களமாக மட்டுமல்லாமல் நாற்றங்காலாகவும் இருக்கவேண்டிய தேவை இருக்கிறது. மெய்தான். தெரு, ஊர் என்று பேசுகிற தலித் தேசியம் சர்வேதசியமென்று பேசுகிறபோதுதான் முழுமை பெறுகிறது. சாதியத்தில் உள்ள அரசியலை அம்பலப்படுத்துவதன் மூலம் மட்டுமே சாதியத்தை அழித்தொழிக்க முடியும்" என்று எழுதியுள்ளார்.கவிஞர் பழமலை. தோழர் சூரியதீபனின் விரிவான கடிதம் காளி சிறுகதையை வெகுவாகப் பாராட்டுகிறது. பட்டிமன்றம் அதனுடைய தோற்றம் வளர்ச்சி திராவிட இயக்கங்களோடு தொடர்புடையதல்ல எனக் கருதுகிறேன்.. பாரதியை முன்னிலைப்படுத்தி இந்த வடிவத்தை துவக்கியவர்கள் பொதுவுடைமைக்காரர்கள். எட்டயபுரம் மூல இடம். கல்கிக்கு முன், ராஜாஜிக்கு மணி மண்டபம் எழுப்புமுன் பொதுவுடைமைக் கட்சியினர் பாரதிவிழாவை சிறப்பாகக் கொண்டாடினர். தென்மாவட்டங்களில்தான் பாரதியிலிருந்து பட்டிமன்றம் மையம் கொண்டது. கம்பனுக்கும் பரவியது.இதுவும் தென்மாவட்டங்களில்தான். கம்பன் தொண்டரடி காரைக்குடி சா.கணேசன் ஒரு உதாரணம்" என்கிறார் சூரியதீபன். (தொடர்ந்து யாரேனும் இதுபற்றி எழுதலாம்)

"திரு.இளையபெருமாள் பேட்டி, கதைகள், அலைகள் பகுதியின் முதல் கடிதம் மனதில் நிற்கின்றன. யாகம்மா பேட்டி இன்னும் சற்று விவரங்களுடன் வந்திருக்கலாம். ஒருவேளை ஒரு பெண் அவரைப் பேட்டி கண்டிருந்தால் மேலும் சில விவரங்கள் தெரிய வந்திருக்கும் என்று தோன்றுகிறது..அடையாளம். தேசியம் பற்றி எனக்கு சில கருத்துக்கள் உள்ளன. இவை தங்கள் கருத்துக்களுக்குப் புறம்பானவை அல்ல. ஆனால் பன்முக அடையாளங்கள், அடையாளக் குறுகல்கள், உடலை ஒட்டிய அடிப்படைவாதம், சாராம்சவாதம் இவை பற்றிய என் புரிதலிலிருந்து பிறக்கும் கருத்துக்கள் இவை.இது பற்றி நாம் சந்திக்க நேர்ந்தால் பேசலாம்" என்று எழுதியுள்ளார் அம்பை. பட்டிமன்றம் பற்றிய கட்டுரையையும், காளி சிறுகதையையும் பாராட்டியுள்ளார் திலீப்குமார்.

எழுத்தாளர் பா.அண்ணாத்துரய், புதுவை. திராவிடப் பேரவையின் பொதுச்செயலாளர் நா.நந்திவர்மன் உள்ளிட்ட பலர் கடிதங்கள் எழுதியுள்ளனர். வேர்கள், தலித்முரசு ஆகிய பத்திரிகைகள் இதழை அறிமுகப்படுத்தியுள்ளன. எல்லோருக்கும் நன்றி.

படிப்பகம்

www.padippakam.com

நூல் மதிப்புரை:

தூர்வை

(நாவல்: சோ.தருமன். அகரம் வெளியீடு, கும்பகோணம்)

நாவல் என்னும் வடிவத்தில் சாதனை நிகழ்த்தத்தக்கச் சாத்தியப்பாடுகள் ஏராளம். உதாரணமாக முன்வைக்க நம்மிடம் போதுமான படைப்புகள் இல்லை. அத்தி பூத்த மாதிரி எப்பொழுதாவது வரும். இச்சூழலில் நல்ல படைப்புகளைப் பார்க்கும்போது சந்தோஷமாய்த் தான் இருக்கிறது. அவற்றின் குறைகளையும், மீறி நேசிக்கத் தோன்றுகிறது. 'தூர்வை' - தமிழ் வாசகர்கள் நேசிக்கவேண்டிய படைப்பு.

புதுவிதமான வாசிப்புக்கு நம்மைத் தயாரப்படுத்துகிறது. 'தூர்வை' நாவலுக்குள் ஐம்பது அறுபது பாத்திரங்கள் வருகிறார்கள். ஒவ்வொருவருக்கும் ஒரு துணைக்கதை இருக்கிறது. இவையன்றி உரையாடும் பாத்திரங்கள் கதைகளை உதிர்த்துக்கொண்டு இருக்கிறார்கள். முக்கியக்கதையுடனான சம்பந்தம் எதையும் பார்க்காமல் துணைப் பாத்திரங்கள் கதைகள் நெடுகவும் வருகின்றன.இவற்றின் அறிமுகமும் இவை கொடுக்கும் குதூகலமும் சுவாரஸ்யமும் நாவலைமுக்கியத்துவமுடையதாக்குகிறது. கிணற்றில் தூர் வாரிப்போட வாரிப்போட எந்தெந்தக் காலத்திலோ உள்ளே போய் விழுந்த ஏதேதோ பொருள்கள் - உடைந்த வாளிகள், பாத்திரங்கள், சங்கிலி, கொலுசு, காப்பு, வளையல், குடம், குவளை கிடைத்த வண்ணம்இருப்பது போல மினுத்தான் மாடத்தி கதையைச் சாக்காக வைத்துக்கொண்டு தருமன் பலபாத்திரங்களைத் தூர் வாரிப் போடுகிற மாதிரி போடுகிறார்.குருசாமி, சாத்தன், சிவனான், முத்தையா, கருமலையான், மூளிக்காதி, முத்து வீரன், பாப்பா, பெருமாள், பெரியபிள்ளை என்று பாத்திரங்கள்தான் எத்தனை எத்தனை விதமாக இருக்கிறார்கள்.

மூன்று கல்யாணம் கட்டியும் பிள்ளை இல்லாத மினுத்தான் நாலாவது கல்யாணம் கட்டிப் பெரிய சோலையைப் பெற்றெடுத்துவிட்டு ஜோஸியம் கேட்கப் போவதில் இருந்து தொடங்குகிறது கதை. மினுத்தான் பெரிய சம்சாரி. வண்டி வைத்துக்கொண்டு இருபது முப்பது குறுக்கமும் தோட்டங்களும் வைத்துக் கொண்டு விவசாயம் பார்க்கிறவர். பஞ்சாயத்து செய்ய வருகிற தேவர்கள் மாடத்தியின் வீட்டில்தான் கை நனைக்கிறார்கள். மினுத்தான் காலத்தைப் போலப் பெரியசோலையின் காலத்தில் விவசாயம் இல்லை. விவசாயம் அடிபடுகிறது. பாதிக்காலம் விவசாயியாகவும் பாதிக்காலம் வாட்ச்மேனாகவும் வாழ்கிறான் பெரியசோலை. பெரியசோலையின் மகன் முழுக்க முழுக்க அரசாங்கச் சம்பளக்காரன்.ரயில்வே டிப்பார்டமெண்ட்டில் கேங்மேன்.

மாடத்தியின் மரணம் மகாபாரதத்தில் வரும் பீஷ்மரின் மரணத்தை நிகர்த்த அனுபவத்தைக் கொடுக்கிறது. தருமனின் எழுத்தாளுமையைப் பாராட்டலாம். எந்தக் காலத்தில் மினுத்தான் சரித்திரம் நடக்கிறது என்பது குழப்பமாக இருக்கிறது. தூக்கக் கலக்கத்தில் கூத்து பார்க்கிற மாதிரி துணைக் கதைகளின் மயக்கத்திலேயே கதை தொடங்கி முடிந்து விடுகிறது. கட்டுப்பாடற்ற துணைக்கதைகளின் பயன்பாடு, அவற்றின் நம்பகத் தன்மையையும் குறைத்து விடுகிறது.

-பாவண்ணன்.

படிப்பகம்

www.padippakam.com

நூல் மதிப்புரை:

ஹோமியோபதி ஆலோசனை

தமிழாக்கம் : பேராசிரியர் சே. கோச்சடை

(வெளியீடு : தூய ஹோமியோபதி பிரச்சார சங்கம், காரைக்குடி)

காரைக்குடி, தூய ஹோமியோபதி பிரச்சார சங்கத்தின் வெளியீடான "ஹோமியோபதி ஆலோசனை"புத்தகத்தைப் படித்தேன். ஐந்து ஹோமியோபதி மருத்துவர்களின் கருத்தை அழகிய சொற்றொடர்களின் எளிமையாக, புரியும்படி தமிழாக்கம் செய்த பேரா.கோச்சபை அவர்கள் மிகவும் பாராட்டுக்குரியவர்கள். கை வந்த கலையாக இயல்பாகவே இது அவருக்கு வந்திருக்கிறது.

ஆங்கில மருத்துவத்தில் மருந்துகள் மிருகங்களிடம் கொடுத்து சோதிக்கப்படுகின்றன. மனிதனை மிருகமாகக் கருதி, மிருகமாக்கும் மருத்துவம் அது. 1796ஆம் ஆண்டு ஜெர்மனியில், ஆங்கில மருத்துவத்தில் எம்.டிபட்டம் பெற்ற டாக்டர்.சாமுவேல் ஹனிமேன், ஹோமியோபதி மருத்துவத்தைக் கண்டுபிடித்து, பல கட்டுரைகளை எழுதினார். ஹோமியோபதியில் நலமுடைய மனிதர்களுடைய உடலில் நோயை உண்டாக்கும் மருந்துகள், நோயாளிகளின் உடலில் உள்ள நோயை குணமாக்குகின்றன என்பதுதான் அடிப்படை தத்துவமாக உள்ளது.இங்கு நோயை உண்டாக்கும் தன்மையே,நோயை குணப்படுத்தும் தன்மையாக கருதப்படுகிறது.

நோய் என்பதற்கும், நோயாளி என்பதற்கும் என்ன வேறுபாடு? நோயினால் பாதிக்கப்பட்டவர் நோயாளி. அந்த நோய்க்கான காரணத்தையும் பரிசோதனைகளையும் செய்து, நோய் நிர்ணயம் செய்து, குறிப்பிட்ட மருந்தை கொடுத்தால் நோயாளி, நோயிலிருந்து குணமடைகிறான் என்கிறது ஆங்கில மருத்துவம்.இந்த இடத்தில் தான் சிக்கல் ஆரம்பிக்கிறது.ஹோமியோபதி மருத்துவம் நோய் என்பதனை எப்போதுமே அடிப்படையாகக் கொள்வதில்லை. சொல்லப்போனால் ஹோமியோபதியால் நோயை குணப்படுத்த முடியாது, ஆனால் நோயாளியை, விரைவிலும், நிரந்தரமாகவும் நூறு சதவீதம் குணப்படுத்த முடியும். இங்கு நோய் என்பது பின்தள்ளப்பட்டு, நோயாளி என்பவர் முன்னிலையில் இருக்கிறார். ஒரே நோயால் (உதாரணமாக டைபாய்டு காய்ச்சல்) பாதிக்கப்பட்ட அனைத்து நோயாளிகளும் ஒரே மாதிரியான நோய்க்குறிகளை சொல்வதில்லை.இது நபருக்கு நபர் மாறுபடும்போது, ஹோமியோபதி மருந்துகளும் மாறுபடுகிறது. ஏன் நோய்க்குறிகள் மாறுபடுகின்றன, ஒரே நோயாக இருக்கும்போது, ஒரே மருந்தை கொடுக்க வேண்டியதுதானே? இதற்கான காரணம் தனிப்பட்ட மனிதருடைய வேண்டியதுதானே? இதற்கான காரணம் தனிப்பட்ட மனிதருடைய பரம்பரையும், உடல், மனநிலையும், புறக்காரணிகளும், உணவும் வாழ்க்கை முறைகளும், பலதரப்பட்ட, பல்வேறு காரணங்களும் ஒருவரை இன்னொருவரிடமிருந்து பிரித்து, தனியே காட்டுகிறது.இதனால் இரண்டுநோயாளிக்கு, நோய் ஒன்றாக இருந்தாலும், இருவேறு மருந்துகள் தேவைப்படுகின்றன.

இந்த மருந்தை எப்படி கண்டுபிடிப்பது, கொடுப்பது, நோயாளியை எப்படி விசாரிப்பது என்று வரும்போது தலையைப் பிய்த்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. பொதுவான சிலவழிமுறைகளை தமிழில் பேரா.கோச்சடை கொடுத்திருக்கிறார். நோய் என்பது ஒன்று-தனிப்பட்ட மனிதர் சொல்லும் நோய்க்குறிகள்பல. மருந்து என்பது ஒன்று-கொடுக்கப்படவேண்டிய மனிதரும்,அளவும் வேறு. நோயாளிகள் என்பது பன்மை. அவர்கள்

படிப்பகம்

www.padippakam.com

நோயை விளக்க பல்வேறு வார்த்தைகளையும், முறைகளையும், இன்னும் எதிர்பார்க்க முடியாத அளவில் எப்படி எப்படி எல்லாமோ சொல்வார்கள். அவர்கள் சொல்வது ஒருபுறமிருக்க, நாம் எப்படி கேள்விகளை கேட்டு, அவர்களை நம் வலையில் சிக்க வைப்பது என்பதற்கான விசாரணையின் அடித்தளங்களை ஹோமியோபதி மருத்துவர்கள் எழுதியுள்ளார்கள். இதில் இப்படி கேட்கவேண்டும், அப்படி கேட்டால், தவறான தகவல்கள் மருந்தை நிர்ணயம் செய்வதில் குழப்பத்தை உண்டாக்கும் என்று எச்சரிக்கைகள் வேறு. இது எப்படி என்றால் திருடனை அடித்து உண்மையைப் பெறுவது, இல்லாத பட்சத்தில் அவனை கட்டாயப்படுத்தி ஒப்புக்கொள்ள வைப்பது போன்றதாகும்.

ஒரு ஹோமியோபதி மருத்துவரின் பணி மிகவும் சிரமமானது. டாக்டர் ஹனிமேன் அரிய, புதிய வித்தியாச அறிகுறிகளைக் கண்டுபிடித்துவிட்டால் நோயாளியை குணப்படுத்தலாம் என்றுதான் சொல்லியிருக்கிறார். ஒரு சில நாட்கள் இருக்கும் நோய்கள் (சளி, இருமல், ஜுரம்), ஒரு சில மாதங்கள் இருக்கும் நோய்கள் நாட்பட்ட நோய்கள், உடல் மற்றும் மனம் சார்ந்த நோய்கள்.இவற்றிற்கானநோயாளிகளைபிறகுஎப்படிதான்குணப்படுத்துவது? நோய்க்குறிகளும், மருத்து காண்பேரேட்டில் உள்ளதும் ஒன்றாக இருந்தால்நோயாளி குணமடைவது உறுதி. நோயாளியை அதிகம் பேசவிட்டு, பேச்சிலேயே அவர் உடலையும், உள்ளத்தையும் எடை போட்டு அரிய, புதுமையான குறிகளை கண்டுபிடித்து விடலாம்.இதற்கு பொறுமையும், பரந்துபட்ட மருத்துவ அறிவும், மனநலநூல் அறிவும் அவசியம் தேவை. வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்.டாக்டர் ஹனிமேன்:

1. நோய் நிர்ணயித்தல் (Disease Diagnosis) என்பதில்நோயாளிகளை நோயிலிருந்து தனியே பிரித்தல்,அவர் உடம்பில் உள்ள நோயை கனித்தல் என்பதனை மனதில் கொள்ள வேண்டும் என்கிறார்.

2.Constitutional Diagnosis (உடல், மனதின் புதுமையான குறிகள்) என்பதில் Actual Constitutional Diagnosis, Developmental Constitutional Diagnosis, Environmental Constitutional Diagnosis தேவை என்கிறார். (விளக்கம் ஹோமியோபதி டாக்டரிடம்). இதுவே நோயை குணப்படுத்தவும், நிர்ணயம் செய்யவும் போதும் என்கிறார். இதனை முறையாக கையாண்டாலே பல்வேறு நோய்களை கதறி ஓடச் செய்து நோயாளியைக்காப்பாற்றலாம். திருக்குறளுக்கு ஏற்ப அவர் வாழ்கிறார் என்பதும், திருக்குறளை மிகவும் கற்றுத் தேர்ந்தவர் என்பதற்கும் உள்ள இடைவெளி தான் நோயாளியை படிப்பவருக்கும், நோயை படிப்பவருக்கும் உள்ள இடைவெளி.

டாக்டர் ஹனிமேனைத் தழுவியவர்கள் பலர். கழுவிய நீரில் நழுவிய மீனாக ஓடியவர்கள் சிலர். டாக்டர் ஹனிமேனிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு அவர் சொன்னதை வைத்தே தன் பெருமைக்காக, தவறான தகவல்களை தத்ருபமாக முன் நிறுத்தியவர்கள் பலர். பிரபலமானவர்கள் பலர். பின் வாங்கியவர் சிலர். மருத்துவர் பி.சங்கரன் பியர்ரேஷ்மிட், மார்கரெட் டெய்லர், ஜான் வீர், இப்சன் மில்லர் ஆகியவர்கள் கூறிய மருத்துவ ஆலோசனையை நாம் ஏற்றுக் கொள்ள முடியும். எப்போது? மிகப்பெரிய கேள்வி இது.

பிடித்துவிட்ட பூனையும் எலிபிடிக்கும் என்றால், மன்மதக் கலையையும் சொல்லிக் கொடுக்க முடியும் என்றால் மேலேகூறிய மருத்துவர்களின் கருத்துக்களையும், நாம் ஆலோசனையாக ஏற்றுக் கொள்ள முடியும்.

-டாக்டர். ப.உ.லெனின்

படிப்பகம்

www.padippakam.com

உங்களுடைய சுகமான வீடுகளில்
பாதுகாப்பாக வாழ்கிறீர்கள் நீங்கள்
மாலையில் நீங்கள் திரும்பும்போது
சூடான உணவும், மலர்ந்த முகங்களும்
காத்திருக்கின்றன வீட்டில்.

இதுவொரு மனிதனா என்று நினைத்துப்பாருங்கள்
சேற்றில் உழைத்து
அமைதியென்பதையே அறியாமல்
ஒருவாய் உணவுக்காகப் போராடி
ஆமாம் அல்லது இல்லை என்பதில் செத்துப்போகும் இவன்.
இதுவொரு பெண்ணா என்று நினைத்துப்பாருங்கள்
கேசமும் பெயருமற்று
நினைப்பதற்கு வலுவுமற்று
வெற்றுக்கண்களும் சில்லிட்டுப்போன கருப்பையும்
குளிர்காலத்தில் ஒரு தவளையைப்போல.

முடிந்ததாகவே நினைத்துக் கொள்ளுங்கள்:
உங்களுக்கு பரிவோடு இந்த வார்த்தைகளை நான் கூறுகிறேன்.
உங்கள் இருதயத்தில்
செதுக்கி வைத்துக் கொள்ளுங்கள் இந்த வார்த்தைகளை
உங்கள் வீட்டில் நீங்கள் இருக்கும்போது,
உங்கள் போக்கில் நீங்கள் நடக்கும்போது
நீங்கள் உறங்கச் செல்லும்போது, விழித்தெழும்போது
இந்த வார்த்தைகளை உங்கள் குழந்தைகளுக்குத் திரும்பச் சொல்லுங்கள்.
இல்லையென்றால், உங்கள் வீடு இடிந்து விழக்கூடும்
நோய்கள் உங்களை பலவீனப்படுத்தும்
உங்கள் குழந்தைகள் உங்களைக் கண்டு
முகங்களைத் திருப்பிக் கொள்வார்கள்.
-ப்ரைமோ லெவி (1918-1987)

www.padippakam.com

கையை காலை அல்லது கிடைக்கும் ஏதோவொன்றை
கடித்துப்பிடுங்கி

பற்களுக்கிடையே கவ்வியபடி
எவ்வளவு முடியுமோ அவ்வளவு வேகமாக ஓடி
மண்ணுக்குள் அதைப் புதைத்து

சகல திசைகளிலும் ஓடி
மோப்பம் பிடித்து தேடி மோப்பம் பிடித்து தேடி
மண்ணையெல்லாம் புரட்டிப்போட்டு

அதிர்ஷ்டமும் இருந்து கையோ, காலோ அல்லது வேறு ஏதேனும்
ஒன்றோ கிடைத்தால்
முறை வைத்து கடித்து

விறுவிறுப்புடன் தொடரும் இந்த விளையாட்டு

கைகள் இருக்கும்வரை
கால்கள் இருக்கும்வரை

எப்படிப்பட்டதானாலும் சரி, ஏதோ ஒன்று இருக்கும்வரை.

-வாஸ்கோ பொப்பா (1922-1991)

தலித்
அஞ்சல்பெட்டி:11
நெய்வேலி-607 801
தனிஇதழ் 10/- ஆண்டுசந்தா 60/-

படிப்பகம்